


அடுத்த வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் ஐந்து அமைச்சுகளின் வரவு செலவுத் திட்டத்தை தோற்கடிக்கப் போவதாக ஆளுங்கட்சியின் பின்வரிசை எம்.பிக்கள் பலர் சவால் விட்டுள்ளனராம்.

அமைச்சர்கள் பலர் தான்தோன்றித்தனமாக நடப்பதாக இந்த எம்.பிக்கள் முன்வைத்த குற்றச்சாட்டால் சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற ஆளுங்கட்சி பாராளுமன்ற குழுக்கூட்டம் கடும் அமளியாக இருந்ததாக தகவல்.


# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 48 சோபகிருது வருடம், ஆவணி மாதம் 11ஆம் திகதி திங்கட்கிழமை
(28.08.2023) ஹிஜ்ரி 1445, ஸபர் - 11, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50


## மீலாத் விழா மன்னாரில்

ஏ.எஸ்.எம். ஜாவித்

2023ஆம் ஆண்டுக்கான தேசிய மீலாத் விழாவை இவ்வருடம் மன்னார் மாவட்டத்தில் நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 28ஆம் திகதி மன்னார் முசலி பிரதேச செயலாளர் பிரிவில் நடத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை புத்தசாசன மதவிவகார அமைச்சின் பங்களிப்புடன் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள்...

» 02 பக்கம்

## ரூ. 1,62,000 க்கு மாம்பழம் ஏலம்



சி. திவியா

வவுனியா, உக்குளாங்குளம் ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ திருவிழாவின்போது மாம்பழம் ஒன்று ஒரு இலட்சத்து 62 ஆயிரம் ரூபாவுக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது.

உக்குளாங்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் மகோற்சவ திருவிழாவின் 06ஆம் நாள் மாம்பழத் திருவிழா நேற்றுமுன்தினம் (26) மாலை இடம்பெற்றது. இதன்போது விநாயகருக்கு படைக்கப்பட்ட மாம்பழம் ஒன்று கோவில் அபிவிருத்தி நிதிக்காக ஏலத்தில் விடப்பட்டது. இந்நிலையில், பலத்த போட்டிக்கு மத்தியில்...

» 02 பக்கம்

# டில்லிக்கு ஆப்பு வைத்த ரணில்!

## இந்திய பாதுகாப்பு அமைச்சர் கொழும்பு வர முன்னர் சீனக்கப்பலுக்கான அனுமதியை வழங்கியது இலங்கை

வெளிவிவகார அமைச்சின் கோரிக்கைக்கு அமைய, சீன ஆய்வுக் கப்பலான 'ஷி யான் 6' இலங்கைக்கு வர அனுமதிக்கப்பட்டுள்ளது.

'ஷி யான் 6' என்ற சீனக் கடல் ஆய்வுக் கப்பல் இந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் இலங்கைக்கு வரவுள்ளதாக கடந்த வாரம் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த சீனக் கடல் ஆய்வுக் கப்பல் இலங்கையின் நாரா நிறுவனத்துடன் இணைந்து அறிவியல் பயணத்துக்குத் தயாராகி வருவதாகவும் தென்னிந்தியப் பெருங்கடல் பகுதி மற்றும் பொருளாதார வலயம் உள்ளிட்டவற்றை உள்ளடக்கி விரிவான ஆய்வை மேற்கொள்ள உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், இந்தக் கப்பல் கொழும்பு துறைமுகம் மற்றும் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரமிட திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

» 02 பக்கம்

## கண்டி நகர பாடசாலைகளுக்கு 03 நாள் பூட்டு

» 02பக்கம்

### கமெண்ட் கந்தர்...

ரணில் திருப்பதிக்கே லட்டு கொடுத்திருக்கிறார் பாருங்கோ...



## 19 மாவட்டங்கள் வறட்சியால் பாதிப்பு

கே. சுபானி

நாட்டில் நிலவும் கடும் வறட்சியால் 19 மாவட்டங்களில் 84 ஆயிரத்து 646 குடும்பங்களைச் சேர்ந்த இரண்டு இலட்சத்து 91 ஆயிரத்து 720 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கடும் வறட்சியால் வடக்கு, கிழக்கு, சப்ரகமுவ, வடமேல், ஊவா, தென் மற்றும் மத்திய உள்ளிட்ட மாகாணங்களில் அதிக...

» 02 பக்கம்

## நுண்ணுயிர்க்கொல்லி மருந்துக்குத் தடை

கோ - எமொக்ஸிக்லவ் (Co-amoxiclav) எனப்படும் நுண்ணுயிர்க்கொல்லி மருந்தின் பயன்பாடு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த...

» 02 பக்கம்

## 08 இலட்சம் பயனாளிகளுக்கு இன்று அஸ்வெசும கொடுப்பனவு

கே. சுபானி

அஸ்வெசும திட்டத்தின் கொடுப்பனவுகள் இன்று (28) வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். முதற்கட்டமாக 08 இலட்சம் பயனாளிகளுக்காக இந்த கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

» 02 பக்கம்

## பல்கலை விரிவுரையாளர்கள் பணியிலிருந்து வெளியேற்றம்

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பணியை விட்டு வெளியேறுவதால் பாரிய பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார். பல்கலைக்கழகங்களில் 12 ஆயிரத்து 992 விரிவுரையாளர்கள் இருக்க வேண்டியது அவசியமெனவும்...

» 02 பக்கம்

## நீர் மின் உற்பத்தி வீழ்ச்சியடையலாம்

### இலங்கை மின்சார சபை தகவல்

நாட்டில் தற்போது நிலவும் வறட்சி தொடருமானால் மேலும் 04 வாரங்களுக்கு மாத்திரமே நீர் மின் உற்பத்தியை மேற்கொள்ள முடியும் என இலங்கை மின்சார சபை...

»02பக்கம்

## பிரமிட் திட்டங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை

### நிதி இராஜாங்க அமைச்சர் சியம்பலாபிட்டிய அறிவிப்பு

பிரமிட் திட்டங்களில் ஈடுபடும் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின்...

» 02 பக்கம்







# பஸ்கள் மோதி விபத்து: 13 பேருக்கு காயம்

கொழும்பு - கண்டி வீதியின் கம்புராதெனிய பகுதியில் இரு தனியார் பஸ்கள் ஒன்றுடனொன்று மோதி விபத்துக்குள்ளானதில் 13 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு (26) இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த பஸ்ஸொன்று அதே திசையில் பயணித்த பஸ் வண்டியின் பின்பக்கத்தில் மோதியுள்ளது. இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் வரக்காபொல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் நால்வர் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் கேகாலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் மூவர் பெண்களாவர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தங்கோவிட்ட பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# 50 வகையான மருந்துகள் இரு வாரங்களில் இறக்குமதி

நாட்டில் தட்டுப்பாடு நிலவும் மேலும் 50 வகையான மருந்துகள் எதிர்வரும் 2 வாரங்களுக்குள் இறக்குமதி செய்யப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, நாட்டில் தற்போது நிலவும் மருந்துத் தட்டுப்பாடு குறைவடையுமென அமைச்சு குறிப்பிட்டுள்ளது. தற்போது மருந்து விநியோகத்துறையில் 230 மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. அந்த மருந்துகள் அனைத்தும் உடனடியாக இறக்குமதி செய்யப்படும் என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இந்திய கடன் உதவியின் கீழ் இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

# உகண்டா எம்.பிக்கள் சபாநாயகருடன் சந்திப்பு



உகண்டா பாராளுமன்ற உறுப்பினர்களான எலெய்ஜா ஒகுபு மற்றும் அப்து கடுன்டு ஆகியோர் மரியாதையின் நிமித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை அண்மையில் பாராளுமன்றத்தில் சந்தித்தனர். 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் உகண்டாவில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய நாடுகளின் சபாநாயகர்கள் மற்றும் தலைமைதாங்கும் அதிகாரிகளின் 27ஆவது மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு இவர்கள் சபாநாயகருக்கு அழைப்பு விடுத்தனர். இலங்கைக்கும் உகண்டாவுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு பரஸ்பர கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

# நெதர்லாந்து பிரதிநிதிகள் குழு இலங்கைக்கு நேற்று வருகை



நெதர்லாந்தின் கலாசார மற்றும் ஊடக விவகார இராஜாங்க செயலாளர் குனே உஸ்லு தலைமையிலான கலாசார பிரதிநிதிகள் குழுவினர் நேற்று ஞாயிற்றுக்கிழமை (27) நாட்டை வந்தடைந்தனர்.

கலாசார முக்கியத்துவம் வாய்ந்த 06 கலைப்பொருட்களின் உரித்தை இலங்கைக்குக் கைமாற்றுவதற்கான சட்ட ஆவணத்தில் கையெழுத்திடுவதே இராஜாங்க செயலாளர் குனே உஸ்லுவின் இலங்கைக்கான விஜயத்தின் பிரதான நோக்கமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை, பிரித்தானியா, அமெரிக்கா மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆய்வாளர்களை உள்ளடக்கிய குழுவினால் கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்ட சர்வதேச ஆதாரபூர்வ கூட்டு ஆய்வின்போது நெதர்லாந்தின் தலைநகர் அம்ஸ்டர்டமில் அமைந்துள்ள ரிஜ்க்ஸ் அருங்காட்சியகத்தில் உள்ள தங்கக் கத்தி, துப்பாக்கி உள்ளிட்ட 06 கலைப்பொருட்கள் இலங்கைக்குரியவை என்று கண்டறியப்பட்டது.

அவ்வாறு கண்டறியப்பட்ட கலைப்பொருட்கள் இவ்வாண்டின் இறுதியில் மீண்டும் இலங்கையிடம் கையளிக்கப்படவுள்ள நிலையில், அப்பொருட்களின் சட்டபூர்வ உரித்தை இலங்கைக்குக் கைமாற்றுவதற்கான ஆவணத்தில் நெதர்லாந்தின் கலாசார மற்றும் ஊடக விவகார இராஜாங்க செயலாளர் குனே உஸ்லு இன்று (28) கைச்சாத்திடவுள்ளார். இந்நிகழ்வு புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சில் நடைபெறவுள்ளது.

அதேவேளை, எதிர்வரும் 31ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பதற்கு திட்டமிட்டுள்ள இராஜாங்க செயலாளர் குனே உஸ்லு தலைமையிலான பிரதிநிதிகள் குழுவினர், இக்காலப்பகுதியில் இலங்கை அரசாங்கத்தின் உயர்மட்டத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடல்களை முன்னெடுக்கவுள்ளனர்.

அதுமாத்திரமன்றி, நாளை செவ்வாய்க்கிழமை (29) இலங்கை தேசிய ஆவணக் காப்பகத்தின் கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்விலும் குனே உஸ்லு சிறப்புரை ஆற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி ரணில் செப்டெம்பர் மாதம் அமெரிக்கா பயணம்

ஐக்கிய நாடுகள் பொதுச் சபை கூட்டத்தொடரில் கலந்துகொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் செப்டெம்பர் மாதம் மூன்றாவது வாரத்தில் அமெரிக்கா செல்லவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபை 78ஆவது அமர்வு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 5ஆம் திகதி முதல் 23ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

''நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புதல் மற்றும் உலகளாவிய ஒற்றுமையை மீண்டும் உருவாக்குதல்'' என்ற கருத்திட்டத்தின் கீழ் இம்முறை பொது சபைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இதேவேளை, கியூபாவில் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள Group of 77 (G77) plus China உச்சி மாநாட்டில் பங்கேற்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கியூப விஜயத்தை நிறைவுசெய்துகொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவுக்கு செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயம்

கிருஷாந்தன்

அதிக வேகத்துடன் பயணித்த மோட்டார் சைக்கிளொன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த இருவர் காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியில் ஹட்டன் மல்லியப்பு ஸ்டிதரன் தோட்டப் பகுதியிலேயே இவ்விபத்து ஞாயிற்றுக்கிழமை(27) மாலை 04 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ஹட்டனிலிருந்து கொட்டகலை நோக்கி பயணித்த குறித்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டையிழந்து காட் கல்லில் மோதியுள்ளது. இச்சம்பவத்தில் இளைஞனும் யுவதியும் காயங்களுக் குள்ளாகிய நிலையில் டிக்கோயா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளும் சேதமடைந்துள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹட்டன் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆற்றில் விழுந்து இளைஞன் பலி

தலவாக்கலை செய்தியாளர்

விறகு வெட்டச் சென்றபோது கால் தவறி ஆக்ரா ஓயாவில் விழுந்த இளைஞன் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை(27) மாலை உயிரிழந்துள்ளதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

லிந்துலை செங்கூம்ஸ் தோட்ட கீழ்ப் பிரிவில் வசித்து வந்த பிரபாகரன் கஜேந்திரன் (20வயது) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இளைஞர்கள் குழு ஒன்று விறகு வெட்டச் சென்றதாகவும் விறகு சேகரித்துக்கொண்டு திரும்பும் வழியில் வோல்ரிம் பகுதியிலுள்ள ஆக்ரா ஆற்றில் கல்லின் மேல் நின்றுகொண்டு தனது கால்களை கழுவிக்கொண்டிருந்தபோது, இந்த இளைஞன் கால் தவறி ஆற்றில் விழுந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

லிந்துலை பொலிஸாரினதும் பிரதேசவாசிகளினதும் தேடுதலுக்கமைய ஆக்ரா ஓயாவின் கற்களுக்கு இடையில் நீர் நிரம்பிய குழியில் உயிரிழந்த நிலையில் இளைஞனின் சடலத்தை மீட்டுள்ளனர். பின்னர் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை லிந்துலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மழைக்கு வாய்ப்பு

நாட்டில் இன்று (28) முதல் அடுத்த சில நாட்களில் தென்மேற்குப் பகுதியில் மழையுடனான வானிலையில் அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி, மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் நுவரெலியா, கண்டி, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பல தடவைகள் மழை பெய்யக்கூடும் என அந்த திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

ஊவா மாகாணம், அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் மாலை அல்லது இரவில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

இடியுடன் கூடிய மழையுடன் தற்காலிக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கத்தினால் ஏற்படக்கூடிய ஆபத்துகளை குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம், மக்களைக் கோரியுள்ளது.

இதேவேளை, இன்று தொடக்கம் செப்டெம்பர் 7ஆம் திகதி வரை சூரியன் இலங்கைக்கு அண்மித்த அட்சரேகைகளுக்கு மேல் நேரடியாக உச்சம் கொடுக்கும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி இன்று நண்பகல் 12.11 மணிக்கு கோவிலன் முனை மற்றும் மல்லாகம் ஆகிய பகுதிகளில் சூரியன் உச்சம் கொடுக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

# யானை தாக்கி வனஜீவராசிகள் பாதுகாப்பு உத்தியோகத்தர் பலி

(மட்டக்களப்பு செய்தியாளர்)

போரதீவுப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வேத்துச்சேனைக் கிராமத்துக்குள் வியாழக்கிழமை(24) இரவு காட்டுயானைகள் புகுந்துள்ளன. அதனைக் கட்டுப்படுத்துவதற்காக வெல்லாவெளியில் அமைந்துள்ள வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் காரியாலயத்துக்கு அக்கிராம மக்கள் தெரியப்படுத்தியதையடுத்து குறித்த இடத்துக்கு விரைந்த உத்தியோகத்தர்கள், யானைகளை அப்புறப்படுத்துவதற்கு முயன்றுள்ளனர்.

அதில் கட்டுப்படாத காட்டு யானை ஒன்று உத்தியோகத்தர்களை எதிர்த்து தாக்கியுள்ளது. இச்சம்பவத்தில் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் வெல்லாவெளி காரியாலயத்தில் கடமைபுரிந்து வந்த நுவரெலியாவைச் சேர்ந்த 30 வயதுடைய செல்வராஜ் சிறிதரன் என்பவர் உயிரிழந்துள்ளார். மற்றுமொரு உத்தியோகத்தர் தெய்வாதீனமாக உயிர் பிழைத்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் வெல்லாவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். போரதீவுப்பற்றுப் பிரதேசத்தில் மிக நீண்டகாலமாகவே இவ்வாறு காட்டுயானைகளின் அட்டகாசங்களும் தொல்லைகளும் அதிகரித்துள்ள நிலையில் அப்பகுதி மக்களின் வீடுகள் மற்றும் வாழ்வாதாரம் உள்ளிட்ட பயிரினங்களையும் துவம்சம் செய்து வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

# தொழிற்கல்வி பாடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரல்

கல்விப் பொதுத்தராதர உயர்தரத்தில் தொழிற்கல்வி பாடங்களுக்காக மாணவர்களை இணைப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தொழிற்கல்வி கற்கைநெறி முன்னெடுக்கப்படும் 525 பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்களை அனுப்ப முடியும். கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பெறுபேறுகள் இந்த தெரிவின் போது கருத்திற் கொள்ளப்பட மாட்டாது என கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

எனவே, தொழிற்கல்வி பாடத்திட்டத்தின் கீழ் 12ஆம் தரத்தில் பாடசாலை கல்வியை நிறைவு செய்து 13ஆம் தரத்தில் தொழிற்கல்வி தொடர்பான பாடங்களின் கீழ் என்.வி.கிவ் நான்காம் நிலை தொழிற்பயிற்சி நெறியொன்றை நிறைவு செய்ய முடியும் என தெரிவித்துள்ளது.

சிறுவர் உளவியல் மற்றும் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் ஆய்வுகள், வாகன இயந்திர தொழில்நுட்பவியல் மற்றும் ஆடை வடிவமைப்பு உள்ளிட்ட இருபது பாடங்கள் இந்தத் தொழிற்கல்வியில் சேர்க்கப்பட்டுள்ளன.

பதின்மூன்று வருட உறுதிப்படுத்தப்பட்ட கல்வியை வழங்கும் நோக்கில் இந்த தொழிற்கல்வி நடைமுறைப்படுத்தப்படுவதுடன், இது தொடர்பான விண்ணப்பங்களை உரிய பாடசாலைகளின் அதிபருக்கு அனுப்பிவைக்குமாறும் கல்வியமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.



## ரூ.1,62,000 க்கு...

ஒரு இலட்சத்து 62 ஆயிரம் ரூபாவுக்கு குறித்த மாம்பழம் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது.

இந்த மாம்பழத்தை வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் வசிக்கும் ச. சிந்துஜா என்பவரே ஏல விற்பனையில் குறித்த மாம்பழத்தை கொள்வனவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## கண்டி நகர...

கண்டி எசல பெரஹெராவை முன்னிட்டு போக்குவரத்து நெரிசல் காரணமாக நகர எல்லைக்குட்பட்ட பாடசாலைகளுக்கு எதிர்வரும் 28,29,31 ஆகிய தினங்களில் விடுமுறை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே நேற்று (27) தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பாடசாலைகள் மூடப்படும் தினங்களுக்குப் பதிலாக சனிக்கிழமை நாட்களில் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் கண்டி நகருக்கும் கட்டுகஸ்தோட்டை பாலத்துக்கும் இடையில் அமைந்துள்ள பாடசாலைகள், பேராதனை பாலத்துக்கும் கன்னோருவ சந்திக்கும் இடைப்பட்ட பாடசாலைகள், கண்டி நகருக்கும் அம்பிட்டிய ஊடான சந்திக்கும் இடையில் அமைந்துள்ள பாடசாலைகள், கண்டி நகருக்கும் தென்னகும்புர பாலம் மற்றும் தொடம்வல ரோயல் ஆரம்ப பாடசாலை, போவலவத்தை, ஹந்தானை ஆகிய பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்படவுள்ளது.

## டில்லிக்கு...

இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் எதிர்வரும் செப்டெம்பர் 2ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள நிலையில் அவரின் விஜயத்தின்போது சீனக்கப்பல் விவகாரம் பேசப்படுவதை தவிர்க்கும் வகையில் அவசர அவசரமாக சீனக்கப்பல் வருகைக்கு கொழும்பு அனுமதியினை வழங்கியுள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

சீன ஆய்வு மற்றும் கண்காணிப்பு கப்பல்களின் தொடர்ச்சியான இலங்கை வருகைகள், டெல்லிக்கும் கொழும்புக்கும் இடையில் பல முறை இராஜதந்திர நெருக்கடிகளை தோற்றுவித்துள்ளன.

சீன உளவுக்கப்பலான யுவான் வோங் - 5 கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஹம்பாந்தோட்டையில் நங்கூரமிட்டபோது, அதற்கு எதிராக இந்தியா அதிருப்தியையும் இராஜதந்திர ரீதியில் கடுமையான எதிர்ப்புகளையும் தெரிவித்தது.

ஆனால் எதிர்ப்புகளை கவனத்தில் கொள்ளாது யுவான் வோங் - 5 கப்பலுக்கு இலங்கை அனுமதியளித்தது.

இதனையடுத்து, தற்போது பெரும் சர்ச்சைக்குரிய தென்சீனக் கடலில் கண்காணிப்பு மற்றும் ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபடும் ஷி யான் - 6 என்ற சீனக் கப்பல் இலங்கையில் கொழும்பு மற்றும் ஹம்பாந்தோட்டை கடல் பகுதிகளில் சுமார் ஒரு மாத காலம் வரை நங்கூரமிட்டு ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட இலங்கை தற்போது அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கையின் இந்த அனுமதி இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் மீண்டும் இராஜதந்திர நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. சீனக் கப்பலுக்கு கொழும்பு அனுமதி வழங்கியுள்ளதால் இந்திய பாதுகாப்பு அமைச்சரின் கொழும்பு விஜயமும் மீள்பரிசீலனையில் இருப்பதாக மற்றுமொரு தகவல் தெரிவித்தது.

## நுண்ணுயிர்க்கொல்லி...

நோயாளர் ஒருவர், குறித்த நுண்ணுயிர்க் கொல்லி மருந்து செலுத்தியதை தொடர்ந்து உயிரிழந்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வெட்டுக் காயத்துக்கு சிகிச்சை பெறுவதற்காக வரக்காபொலயிலிருந்து வந்த 50 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த 21ஆயிரம் தடுப்பூசிகளை கொண்ட மருந்து தொகுதியிலிருந்து 18ஆயிரம் தடுப்பூசிகள் இதுவரை பயன்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அவற்றில் ஒரு தடுப்பூசி தொடர்பில் மாத்திரமே இந்நிலை பதிவாகியுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழு மூலமாகவும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

## பல்கலை...

06 ஆயிரத்து 548 பேர் மாத்திரமே பணியாற்றுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டபோதே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியையடுத்து மூளைசாலிகள் வெளியேறிவருவதாகவும் கல்விசாரா ஊழியர்களின் வெளியேற்றத்தால் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். பல்கலைக்கழக முறைமையின் வீழ்ச்சியை தவிர்ப்பதற்கு ஆயிரம் விரிவுரையாளர்கள் உடனடியாக இணைத்துக்கொள்ளப்பட வேண்டுமென பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

## 19 மாவட்டங்களுக்கு...

எண்ணிக்கையிலானோர் குடிநீரின்றி பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது. இதுகுறித்து அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று (28) வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் நிலவும் கடும் வறட்சியால் இரத்தினபுரி, கேகாலை, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, புத்தளம், குருணாகல், யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, பதுளை, மொனராகலை, ஹம்பாந்தோட்டை, கம்பஹா, மாத்தளை, கண்டி மற்றும் பொலன்னறுவை உள்ளிட்ட 17 மாவட்டங்களில் 84 ஆயிரத்து 646 குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 91ஆயிரத்து 720 பேர் குடிநீரின்றி பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்நிலையில் யாழ்ப்பாணத்திலேயே அதிக எண்ணிக்கையிலானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்தவகையில், யாழ்ப்பாணத்தில் 22 ஆயிரத்து 44 குடும்பங்களைச் சேர்ந்த 70ஆயிரத்து 408 பேர் கடும் பாதிப்புகளை சந்தித்து வருகின்றனர்.

அந்தவகையில், யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடமாகாணத்தில் 23 ஆயிரத்து 688 குடும்பங்களைச் சேர்ந்த 75ஆயிரத்து 607 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று சப்ரகமுவ மாகாணத்தில் 13 ஆயிரத்து 705 குடும்பங்களைச் சேர்ந்த 55 ஆயிரத்து 96 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் இரத்தினபுரி மாவட்டத்தில் 12 ஆயிரத்து 336 குடும்பங்களைச் சேர்ந்த 49 ஆயிரத்து 697 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், கிழக்கு மாகாணத்தில் 18 ஆயிரத்து 991 குடும்பங்களைச் சேர்ந்த 63 ஆயிரத்து 265 பேரும் வடமேல் மாகாணத்தில் 07 ஆயிரத்து 143 குடும்பங்களைச் சேர்ந்த 23 ஆயிரத்து 534 பேரும் ஊவா மாகாணத்தில் 6 ஆயிரத்து 253 குடும்பங்களைச் சேர்ந்த 20 ஆயிரத்து 52 பேரும் ஹம்பாந்தோட்டை உள்ளடக்கிய தென் மாகாணத்தில் 3 ஆயிரத்து 867 குடும்பங்களைச் சேர்ந்த 17ஆயிரத்து 372 பேரும் மேல் மாகாணத்தில் ஆயிரத்து 267 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 949 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை மத்திய மாகாணத்தில் 9 ஆயிரத்து 697 குடும்பங்களைச் சேர்ந்த 32 ஆயிரத்து 695 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் மாத்தளையில் 21 ஆயிரத்து 930 பேரும் கண்டியில் 10 ஆயிரத்து 765 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், பொலன்னறுவையில் 35 குடும்பங்களைச் சேர்ந்த 150 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## மீலாத் விழா...

திணைக்களம் முன் ஏற்பாடுகளை செய்து வருகின்றது.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று மன்னார் மாவட்டச் செயலகத்தில் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தலைமையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் இஸட்.ஏ.எம்.பைஸல் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## பிரமிட் திட்டங்களுக்கு...

கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

09 நிறுவனங்களை இலங்கை மத்திய வங்கி தடைசெய்துள்ள நிலையில் இராஜாங்க அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பிரமிட் திட்டங்களை முன்னெடுப்பவர்களுக்கு எதிராக வங்கிச் சட்டத்தின் 83ஊ பிரிவின் கீழ் நடவடிக்கை மேற்கொள்வதற்கான ஆலோசனைகளை பரிசீலிக்குமாறு சட்டமா அதிபரிடம் மத்திய வங்கி கோரிக்கை விடுத்துள்ளது.

## 08 இலட்சம்...

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தெரிவு செய்யப்பட்ட 15 இலட்சம் பயனாளிகளில் 08 இலட்சம் பயனாளிகளின் தகவல்கள் உறுதி செய்யப்பட்டுள்ளநிலையில் அவர்களுக்கான கொடுப்பனவுகள் இன்று (28) வழங்கப்படவுள்ளன.

மீதமுள்ள 07 இலட்சம் பயனாளிகள் தகவல்கள் சரிபார்க்கப்பட்டு அவர்களுக்கான கொடுப்பனவுகள் விரைவில் வழங்கப்படும்.

மேலும் தற்போது மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றநிலையில், அவை நிறைவடைந்ததும் அனைத்து பயனாளிகளுக்கும் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

இதேவேளை, போலியான தகவல்களை வழங்கி பயனடைவார்களாயின் அவ்வாறான கணக்குகள் சரிபார்க்கப்பட்டு நலன்புரி நன்மைகள் திட்டத்தினால் அக்கொடுப்பனவுகள் மீள பெற்றுக்கொள்ளப்படும் என்றார்.

## நீர் மின்...

தெரிவித்துள்ளது. வறட்சி காரணமாக நீர் மின் உற்பத்தி 15 வீதமாக குறைந்துள்ளதுடன், அனல் மின் உற்பத்தி காரணமாக தற்போது மின்சாரத்தை தடையின்றி வழங்க முடிந்துள்ளதாக மின்சார சபை குறிப்பிட்டுள்ளது.

சமனல நீர்த்தேக்கத்தின் நீர் கொள்ளளவு 1 வீதமாகவும் காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர் கொள்ளளவு 21 வீதமாகவும் மவுசாகலை நீர்த்தேக்கத்தின் நீர் கொள்ளளவு 35 வீதமாகவும் விக்டோரியா நீர்த்தேக்கத்தின் நீர் கொள்ளளவு 25 வீதமாகவும் குறைந்துள்ளது.

இதன்படி, 300 கிகாவாட் மணிநேர நீர் மின்சாரத்தையே உற்பத்தி செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே, அனல் மின் நிலையங்களின் மின் உற்பத்தி 65 வீதமாக அதிகரித்துள்ளது. சூரிய சக்தி மற்றும் காற்றாலை மின்சாரம் மூலம் 11 சதவீத மின்சார உற்பத்தி தேசிய அமைப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

# பொலிஸ் மா அதிபரைச் சந்தித்தார் இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன்

## முக்கிய விடயங்கள் குறித்து ஆராய்வு



பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்கிரமரத்ன மற்றும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண ஆகியோரை கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான சிவ.சந்திரகாந்தன் நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது திட்டமிட்ட சில கும்பல்களினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் அத்துமீறல்கள், குற்றச் செயல்கள் மற்றும் அதற்கான தீர்வுகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

இதன்போது குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மயிலத்த மடு, மாதவனை போன்ற பிரதேசங்களில் தொடர்ச்சியாக இடம்பெறுகின்ற அத்துமீறல்கள் அதனுடன் தொடர்புபட்ட பிணக்குகள் போன்றவற்றை தடுக்கும் முகமாக குறித்த பிரதேசத்தில் நிரந்தரமான பொலிஸ் சோதனைச் சாவடியை மிக விரைவில் அமைப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன் அதனுடன் இணைந்ததாக மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இடம்பெறக்கூடிய சட்டவிரோத மதுபான உற்பத்தி, விற்பனை, போதைப்பொருள் கடத்தல் அவற்றுடன் தொடர்புபட்ட குற்றச்செயல்கள் போன்றவற்றை தடுப்பது தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டன.

இதன்போது கருத்து தெரிவித்த பொலிஸ் மா அதிபர், தமிழர்கள் பொலிஸ் சேவையில் இணைவது குறைவாக இருப்பதாகவும் அவர்கள் தங்களது சமூகத்துக்கு சேவையாற்றும் வண்ணமாக பொலிஸ் சேவையில் இணைந்து பணியாற்ற வேண்டுமெனவும் அதனை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் இராஜாங்க அமைச்சரிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆவணி மாதம் 11ஆம் நாள் திங்கட்கிழமை**

மேஷம்: குடும்பத்தில் மங்கள காரியங்கள் நடைபெற்று மகிழ்ச்சி பிறக்கும். நோயிலிருந்து விடுதலை அடைவீர்கள்.

ரிஷபம்: தேவையற்றவர்களின் நட்பால் தொல்லைகள் உருவாகும். உணவு, உறக்கம் தேடிப் போனாலும் கிடைக்காது.

மிதுனம்: தொழில் வியாபாரத்தில் அதிக இலாபங்களை பெறுவீர்கள். எதிர்ப்பாராத தன வரவால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

கடகம்: தொழில் மூலமாக பதவி உயர்வுகள், சம்பள உயர்வுகள் அமையும். புதிய பதவிகள் வந்து சேரும்.

சிம்மம்: பூர்வீக சொத்துகளால் வில்லங்கம் ஏற்படும். தந்தைக்கும் உங்களுக்குமிடையிலான உறவு பாதிக்கப்படும்.

கன்னி: திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் மந்த நிலையை அடையும். வாய்ப் பேச்சால் வீண் பிரச்சினைகள்.

துலாம்: கூட்டு வியாபாரத்தில் அதிக இலாபம். தடைப்பட்ட திருமணத் திகதி உறுதிப்படுத்தப்படும் நாள்.

விருச்சிகம்: நினைத்த காரியத்தில் வெற்றி கிட்டும். நோய், கடன், எதிரி இவை எதுமே பாதிப்பை ஏற்படுத்தாது.

தனுசு: புத்திரர்களால் தொல்லையும் கவலையும் தோன்றும். மனம் கண்டபடி அலையும்.

மகரம்: எதிர்பாராத விபத்துகள் ஏற்படலாம். வீடு, வாகனம் விற்பது வாங்குவது கவனம்.

கும்பம்: நீங்கள் கேட்காமலேயே நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். துணிச்சலால் அனைத்தையும் வெற்றி கொள்வீர்கள்.

மீனம்: குதர்க்கமான பேச்சால் அவமானம், அபகீர்த்திகள் ஏற்படும். குடும்பத்தில் குழப்ப நிலைகள் உருவாகும்.

**திதி:**துவாதசி பி.ப.6.23 வரை பின் திரயோதசி
**நட்சத்திரம்:**உத்திராடம் பி.இ.2.43 வரை பின் திருவோணம்
**யோகம்:**மரண யோகம் பி.இ.4.07 வரை பின் அமிர்த யோகம்
**வார சூலம்:**கிழக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்லநேரம்:**பி.ப. 12.07 – 12.37 மணிவரை
**ராகுகாலம்:**7.37– 9.07 மணிவரை
**எமகண்டம் :**10.37– 12.07 மணிவரை
**குளிகை:**1.37– 3.07 மணிவரை
**சந்திராஷ்டமம்:** இடப - மிதுன ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தனஅதிஷ்டம்:** பரணி,பூரம்,பூராடம் (பிறந்தவர்களுக்கு)
**விசேட தினம்:** சோம பிரதோஷம் - பிரதோஷம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

## அறிவோர் ஒன்றுகூடல்

கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் அறிவோர் ஒன்றுகூடல் எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு தமிழ்ச் சங்க தலைவர் கலாநிதி க.இரகுபரன் தலைமையில் நடைபெறும்.

இதன்போது இயக்குனர் நடராஜா மணிவாணனின் "தொட்டி மீன்கள், இது வொன்றும் புதிதில்லை - குறுந்திரைப்படங்கள் காட்சிப்படுத்தலும் கதையாடலும்" இடம் பெறவுள்ளது.

# இனவாத சூறாவளி சுழன்றடித்தாலும் தமிழர்களை ஒழிக்க முடியாது

### கனடாவில் மனோ கணேசன்



இலங்கையில் வட மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் மலையகத்திலும் நாடு முழுக்கவும் யுத்தம் இல்லை. ஆனால் இனவாதம் இருக்கிறது என தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறினார்.

கனடா டொரென்டோவில் இடம்பெற்ற தமிழர் தெருத்திருவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் கூறியதாவது,

இனவாத சூறாவளி சுழன்றடித்தாலும் சுற்றி சுற்றி அடித்தாலும் சுனாமியாக அடித்தாலும் சரி, தமிழர்களை ஒழிக்கவோ அழிக்கவோ முடியாது.

இனவாதத்தை அழித்து, வீழ்த்தி நியாயமான தீர்வைப் பெறுவோம் என்ற நம்பிக்கை இருக்கிறது.

தமிழக தாயகம், இலங்கை தாயகம் ஆகியவற்றுக்கு வெளியே இங்கே கனடாவில் வாழ்கின்ற தமிழர்கள்தான் அதிக துடிப்புடன் இருக்கிறீர்கள். இந்நோக்குக்காக நீங்கள் அதிக பங்களிக்க வேண்டும் என்றார்.

# யாழில் கொள்ளைச் சம்பவம் அதிகரிப்பு: மக்கள் அச்சம்

யாழ்ப்பாணம் சங்கிலியன் வீதியில் உள்ள வீடொன்றுக்குள் வீட்டின் கூரையை பிரித்துக்கொண்டு உட்புகுந்த முகமூடியணிந்த கொள்ளைக் கும்பல் கத்தி முனையில் 20 பவுண் தங்க நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் சனிக்கிழமை நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

வீட்டின் கூரையை பிரித்து உள்நுழைந்த மூவர் அடங்கிய கொள்ளைக் கும்பல் வீட்டில் இருந்தவர்களை கட்டி வைத்து கத்தி முனையில் வீட்டில் இருந்த 20 பவுண் தங்கநகைகளை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வீட்டின் உரிமையாளரால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் கடந்த மூன்று தினங்களில் சுமார் ஒரு கிலோ மீற்றர் சுற்றுவட்ட பகுதிகளில் மூவர் அடங்கிய முகமூடி கொள்ளை கும்பல் இரு கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதுடன் ஒரு இடத்தில் கொள்ளையை கைவிட்டு தப்பி யோடியுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி ஆலய மகோற்சவம் இடம்பெற்று வரும் நிலையில் யாழ்ப்பாணத்துக்கு நாட்டின் பல பாகங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் பெருமளவானோர் வருகை தந்து தங்கி நின்று நல்லூர் ஆலயத்துக்கு சென்று வரும் நிலையில், யாழ்ப்பாணத்தில் முகமூடி கொள்ளையர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளமை அவர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

## மட்டக்குளியில் படுகொலை: சந்தேகத்தில் ஐவர் கைது

மட்டக்குளி, ஜோர்ஜ் பீரிஸ் மாவத்தையில் நபர் ஒருவரை ஆயுதத்தால் தாக்கி கொன்றதாக சந்தேகிக்கப்படும் பிரத்தியேக கல்வி நிலைய ஆசிரியர், மாணவர் மற்றும் வர்த்தகர் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மட்டக்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்குளியைச் சேர்ந்த ஆர்.ஆர்.எம்.பீரிஸ் (36 வயது) என்பவர் கடந்த 25ஆம் திகதி கூரிய ஆயுதங்களால் குழுவொன்றினால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டார்.

இச்சம்பவத்தில் காயமடைந்த ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## ஒரேசூலில் மூன்று குழந்தைகள்



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில், தாயொருவர் ஒரே சூலில் மூன்று குழந்தைகளை பிரசவித்துள்ளார்.

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை, மகப்பேற்று விசேட வைத்திய நிபுணர் அப்புத்துரை சிறிதரன் தலைமையிலான மருந்துவக் குழுவினர் தாய்க்கு பிரசவம் பார்த்தனர்.

இதன்போதே குறித்த தாய் ஒரே சூலில் மூன்று குழந்தைகளை பிரசவித்துள்ளார். குழந்தையும் தாயும் நலமாக உள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

# தண்ணீர் தொட்டியில் விழுந்து 2 வயது சிறுமி உயிரிழப்பு

தண்ணீர் தொட்டியில் விழுந்து இரண்டு வயது சிறுமி உயிரிழந்துள்ளதாக நெலுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நெலுக்குளம் பகுதியைச் சேர்ந்த எல்.திவ்யா (இரண்டு வயது) என்ற சிறுமியே மேற்படி சம்பவத்தில் பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

பிரதேசவாசிகள் சிறுமியைத் தேடியபோது, சிறுமி தண்ணீர்த் தொட்டியில் விழுந்து கிடந்ததைக் கண்டு சிறுமியை மீட்டெடுத்து வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோதும், அதற்குள் சிறுமி இறந்துவிட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நெலுக்குளம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# ஜேம்ஸ் டெயிலரின் நினைவேந்தல் நிகழ்வு



இக்பால் அலி

மனித அபிவிருத்தித் தாபனம் ஏற்பாடு செய்து நடத்திய ஜேம்ஸ் டெயிலரின் நினைவேந்தல் நிகழ்வு தெல்தோட்டை, லூல்கந்துர தோட்டத்தில் அமைந்துள்ள அன்னாரது சிலையருகே இடம்பெற்றது.

இதன்போது அன்னாரது உருவச் சிலைக்கு கண்டி மனித அபிவிருத்தித் தாபனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பி.பி. சிவப்பிரகாசம், ஹங்குரான்கெத்த ஆதவன் தமிழ் பாடசாலையின் அதிபர் ஆகியோர் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

இலங்கையில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட தேயிலை தோட்டமான கண்டி மாவட்ட, தெல்தோட்டை, லூல்கந்துர தோட்டத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மலையக தொழிலாளர்கள், பெண்கள், இளைஞர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், சிவில் அமைப்புகள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் நூற்றாண்டை எவ்வாறு முகங்கொடுக்கவேண்டும், சவால்களை எதிர்கொண்டு மனித உரிமைகளை எவ்வாறு நிலைநிறுத்தவேண்டும் என்ற சவாலை நோக்கி, ஒரு சமூகமாக, சமத்துவ பிரஜைகளாக, தனித்துவத்துடன் முன்னோக்கி செல்லும் வழிமுறைகளை நோக்காகக் கொண்ட பிரகடனத்தை ஜேம்ஸ் டெயிலரின் நினைவு தூபிக்கு முன்னால் வெளியிட்டது.

இதேவேளை, ஜேம்ஸ் டெயிலர் ஞாபகார்த்த தூபியருகே இருந்து ஆரம்பமான ஊர்வலம் ஆதவன் பாடசாலை வரையும் சென்றது. இவ்வூர்வலத்தில் கலந்து கொண்ட மக்கள் ஆதவன் தமிழ் பாடசாலையின் மண்டபத்தில் நடைபெற்ற மலையகம் சார்ந்த கலா கலாசார நிகழ்வுகளிலும் கலந்து கொண்டனர்.

இதன்போது நுவரெலியா மாவட்ட மனித உரிமை ஆணையாளர் விரஞ்சன் டயஸ் சுமன சேகர, பெண்கள் ஒத்துழைப்பு முன்னணியின் தலைவி பெ. லோகேஸ்வரி, டி. சந்திரகுமார் உள்ளிட்ட பெரு எண்ணிக்கையிலான தோட்டப்புறத் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

# Dialog இன் Karuna.lk சேவையானது SLASSCOM திறன்சார் தேசிய விருதுகளில் 'பயன்மிகு சிறந்த தொழில்நுட்பம்' எனும் விருதை வென்றுள்ளதனால் தரநிலைப்படுத்தப்பட்டுள்ளது

டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி. மூலம் இயங்குகின்ற Karuna.lk சேவையானது தொழில்நுட்பத்தை நற்செயல்களுக்காகப் பயன்படுத்துவதற்கான அதன் ஒப்புவமையில்லா தகைமையை அங்கீகரிக்கும் வகையில், SLASSCOM தேசிய திறன்சார் தேசிய விருதுகள் 2023 இல் நற்செயல்களுக்கான சிறந்த மென்பொருள் கண்டுபிடிப்பு அல்லது புத்தாக்கம்' என்பதற்கான தேசிய விருதைப் பெற்றது.

அதற்கமைய, Karuna.lk இலங்கையின் முதல் crowdfunding தளமானது, சமூகத்தில் நற்தாக்கத்தை விளைவிக்கும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதில் அதன் குறிப்பிடத்தக்க பங்களிப்பிற்காக அங்கீகரிக்கப்பட்டது. தேவைகள் உடையோருடன் நன்கொடையாளர்களை இணைக்கும் இந்தத் தளமானது உரிய நேரத்தில் மற்றும் பொருத்தமான முறையில் உயர்மட்ட நிர்வாகத்தில் இயங்கும் நம்பகமான மற்றும் பாதுகாப்பான நிதி திரட்டும் இயந்திரத்தின் ஆதரவுடன் சமூக பொறுப்பின் மூலம் இலங்கையர்களின் வாழ்வை வலுவூட்டுவதையும் வளப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒக்டோபர் 2022 இல் தொடங்கப்பட்டதிலிருந்து இந்தத் தளமானது 107 தொண்டு நிறுவனங்களால் 116 முன்னெடுப்புகளை ஆதரித்துள்ளது. அவற்றில் 30% சுகாதாரப் பாதுகாப்புடனும் 30% கல்வியை மேம்படுத்துதலுடனும் தொடர்புடையன. சுகாதாரம், சமூகம், கல்வி, அவசரநிலை, சுற்றுச்சூழல், விளையாட்டு, புற்றுநோய், விலங்குகள் உள்ளிட்ட பல்வேறு வகையான சமூக காரணங்களுக்கான அணுகலுடன், நன்கொடையாளர்கள் பயனாளிகளுக்கு நிதியுதவி வழங்கல்களை வழிநடத்துவதன் மூலம் முழுமையான வெளிப்படைத்தன்மையை இந்தத் தளம் உறுதி செய்கிறது. மேலும் Karuna.lk தளமானது அதன் அணுகல்தன்மை, வசதி, வெளிப்படைத்தன்மை, தன்னார்வத் தொண்டு மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றிற்கான பாராட்டைப் பெற்றுள்ளது.

"Karuna.lk இன் தாக்கத்தை அங்கீகரித்து இந்த மதிப்புமிக்க சிறந்த புத்தாக்க மென்பொருள் தொழில்நுட்ப விருதுகளைப் பெறுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்" - என டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி. நிறுவனத்தின் இடர் மற்றும் இணக்க குழுமத் தலைவர் அசங்க பிரியதர்ஷன தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில், "Karuna.lk ஐ ஏற்றுக்கொண்ட நன்கொடையாளர்கள் மற்றும் நிறுவனங்களின் தாராள சமூகத்திற்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். மற்றும் எங்கள் சமூகத்தில் நல்லவிதமான மாற்றத்தை வளர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்க முடிந்துள்ளதையிட்டு பெருமைப்படுகின்றோம். இந்த crowdfunding தளமானது ஒத்துழைப்பு மற்றும் கண்டுபிடிப்புகளின் சக்தியை வெளிப்படுத்துகிறது, மேலும் சமூக நன்மைக்காக தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் எங்கள் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகின்றது" - என்றார்.

"டயலொக்கின் Karuna.lk இயங்குதளமானது சமூக நலனுக்காக தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான அதன் அர்ப்பணிப்பை உண்மையாகவே நிரூபித்துள்ளது, மேலும் SLASSCOMதேசிய விருதுகள் 2023 இல் தேசிய நற்செயல்களுக்கான சிறந்த மென்பொருள் கண்டுபிடிப்பு அல்லது புத்தாக்கம்' என Karuna.lk அங்கீகரிக்கப்படுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். சமூகத்தில் நற்தாக்கத்தை விளைவிக்கும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதில் தளத்தின் விதிவிலக்கான பங்களிப்பு, உதவிக்கரம் வேண்டி நிற்போருடன் நன்கொடையாளர்களை இணைப்பது மற்றும் பல முயற்சிகளுக்கு ஆதரவளிப்பது போன்றவற்றிற்கான அங்கீகாரமாக இது பிரதிபலிக்கின்றது" - என SLASSCOM தலைவர் ஆஷிக் எம். அலி தெரிவித்தார்.

SLASSCOM தேசிய விருதுகள் 2023 சமூக சவால்களை எதிர்கொள்ளத்தக்க மற்றும் நிலைபேறான வளர்ச்சியை ஊக்குவிக்கத்தக்க சிறந்த தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளை வரவேற்கின்றது மற்றும் அங்கீகரிக்கின்றது. டயலொக்கின் Karuna.lk இயங்குதளத்திற்கான இந்த அங்கீகாரமானது, இலங்கையர்களின் வாழ்க்கையையும் நிறுவனங்களையும் வலுவூட்டல் மற்றும் வளப்படுத்துவது என்ற அதன் நோக்கத்தில் பிரதிபலிக்கும் வகையில் சமூக நலனை மேம்படுத்துவதற்கு தொழில்நுட்பத்தின் ஆற்றலைப் பயன்படுத்துவதில் அதன் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.




படத்தில் இடமிருந்து வலமாக: டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழும நிலைபேற்றுத்தன்மை உதவி முகாமையாளர் ஐங்கரராஜ் ஜெயராஜசிங்கம், டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி இடர் மற்றும் இணக்க குழுமத் தலைவர் அசங்க பிரியதர்ஷன, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி வர்த்தக நாமம் மற்றும் ஊடக பிரிவின் உதவி வர்த்தக நாம முகாமையாளர் கயந்தி ரம்புக்வெல்ல, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி IdeaMart இன் சிரேஷ்ட Biz Lead, பசிந்து டி சில்வா.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023 ஒகஸ்ட் 28ஆம் திகதி, திங்கட்கிழமை



# தமிழர்களுக்கு எதிராக தொடரும் பேரினவாதிகளின் வேட்டை!

பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கொழும்பு இல்லத்தின் முன்பாக நேற்றுமுன்தினம் பதற்றநிலை ஏற்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தலைமையிலான குழுவொன்று கொழும்பிலுள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வீட்டுக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டதாலேயே இந்தப் பதற்ற நிலை ஏற்பட்டது. உதய கம்மன்பில தலைமையில் சென்ற சுமார் 150 பேர் வரையிலான குழுவினரை பொலிஸார் வழிமறித்தனர்.ஆனாலும் அந்தத் தடையையும் தாண்டி இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

எவ்வாறாயினும், இந்தச் சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் கருத்து வெளியிட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

மக்கள் பிரதிநிதிகளே பாராளுமன்ற உறுப்பினர்கள். அவர்களின் உயிர்களுக்கு அல்லது அவர்களின் வீடுகளுக்கு ஆபத்து ஏற்பட ஒருபோதும் இடமளியேன்.எங்கு பாதுகாப்பு கேள்விக்குட்படுத்தப்படுகின்றதோ அங்கு பொலிஸாரையும் படையினரையும் வரவழைத்துப் பாதுகாப்பைப் பலப்படுத்துவேன்.தற்போது சில தரப்பினர் எடுத்ததற்கெல்லாம் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்துகின்றனர். எம்.பிக்களையும் அவர்கள் விட்டுவைக்கவில்லை. எனினும், எம்.பிக்களின் உயிர்களுக்கும் அவர்களின் வீடுகளுக்கும் ஆபத்து ஏற்பட ஒருபோதும் இடமளியேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார் என்று சொல்லப்படுகிறது.

உதய கம்மன்பில கஜேந்திரகுமார் எம்.பி. வீட்டின் மீது பிக்குகளுடன் மேற்கொண்ட முற்றுகையை இலேசாக நினைத்துவிட முடியாது; நினைத்துவிடவும் கூடாது. அதுவும் உயர்பாதுகாப்பு வலயம் உள்ள ஒரு பகுதியில் நடந்திருக்கிறது.இந்த இடத்திலிருந்து 50 மீற்றர் இடைவெளியில் இந்திய உயர்ஸ்தானிகரின் வாசஸ்தலமான இந்திய இல்லம் இருக்கிறது. இன்னும் கொஞ்சத் தூரத்தில் ஜனாதிபதி ரணிலின் பிரத்தியேக வீடு இருக்கிறது.

எவரும் சட்டத்தைக் கையில் எடுக்க இடமளிக்க மாட்டேன் என்று தனது வீடு எரிக்கப்பட்டதை நினைவூட்டி - ஜனாதிபதியாக பதவியேற்றபின்னர் அடிக்கடி கூறும் ரணில், கம்மன்பில கோஷ்டி குயீன்ஸ் வீதியில் சென்றபோது மௌனவிரதம் இருந்தது கவனிக்கப்படவேண்டியது.சிங்கள இனவாத சக்திகளை பகைக்காமல் இருக்க விரும்புகிறார் ரணில் .

கம்மன்பில,கஜேந்திரகுமார் வீட்டை முற்றுகையிட்டதால் கம்மன்பிலவுக்கான சிங்கள இனவாதிகளின் ஆதரவு கூடியிருக்கும். அதுதான் அவரின் நோக்கமாக இருந்திருக்கலாம். அதேபோல் கஜேந்திரகுமார் மீதான தமிழர்களின் நேசமும் இதனால் கூடியிருக்கிறது. அந்த யதார்த்த உண்மையை வாசகர்கள் புரிந்துகொள்வார்கள்.

தமிழ் எம்.பி. , அரசியல் கட்சித் தலைவர் ஒருவரின் வீட்டை முற்றுகையிட்டதன் மூலம் சிங்களப் பேரினவாத வாக்குகளை தக்கவைக்கும் போட்டியில் சரத் வீரசேகர, விமல் வீரவன்ச, ரத்தன தேரரை பின்தள்ளி கம்மன்பில முன்னேறியிருக்கிறார். சுருக்கமாக சொல்லப்போனால் கஜேந்திரகுமார் எம்.பி., காசு கொடுத்தாவது செய்ய வேண்டிய வேலையை கம்மன்பில செய்து பொன்னம்பலத்தின் பெயரை மென்மேலும் பிரபல்யப்படுத்தியிருக்கிறார்.

ஆனால், அரசாங்கம் இந்த விவகாரத்தை சாதாரண ஒரு விடயமாக எடுத்துக்கொள்ளக்கூடாது . சாதாரண எம்.பியொருவர் பேரினவாத சக்திகளைத் திரட்டி பாதுகாப்பு வலயமொன்றுக்குள் செல்வாராயின் இன்று வீடுவரை சென்ற அவர்கள் வீட்டுக்குள் நுழையமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? இந்த விடயத்தில் தமிழ் அரசியல்வாதிகள் மௌனம் காப்பது கஜேந்திரகுமார் எம்.பியுடன் கொண்டிருக்கும் அரசியல் முரண் காரணமாக இருக்கலாம். ஆனால், இந்த விடயத்தில் தமிழ் அரசியல்வாதிகள் மௌனம் காப்பது ஆரோக்கியமான ,நாகரிகமான அணுகுமுறையல்ல. இன்று கஜேந்திரகுமாருக்கு வந்த அச்சுறுத்தல் நாளை தமக்கும் வரலாம் என்று அவர்கள் எண்ணவேண்டும்.அதற்கேற்ப நடக்கவேண்டும்.

பேரினவாதிகள் தமிழர்களின் வீடுகளை முற்றுகையிடுவதும் அவர்களை அச்சுறுத்துவதும் இலங்கைக்கு புதிதல்ல. அது உலகத்திற்கே தெரியும். ஆனால், அந்த நிலைப்பாட்டில், அந்தக் கொரூர மனநிலையை பேரினவாதிகள் இன்னும் கொண்டிருப்பதை புடம்போட்டுக் கட்டவேண்டியது தமிழ் அரசியல்வாதிகள், புத்திஜீவிகள், கருத்துருவாக்கிகளின் பொறுப்பாகும் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.



# அதி உயர் மரக்கறி விதைகளின் விலை!

★ திண்டாடும் விவசாயிகள்

★ அதிக இலாபத்தை ஏப்பமிடும் தனியார்துறை




© Parliament of Sri Lanka

நாட்டில் மரக்கறி விதைகளின் விலையைக் கட்டுப்படுத்துவதற்கு முறையான ஒழுங்குபடுத்தலொன்று இல்லாமை தொடர்பில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய (COPA) குழுவில் புலப்பட்டது.

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அப்போதைய தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாஷிம் தலைமையில் கடந்த வருடம் நவம்பர் 08 பாராளுமன்றத்தில் கூடிய போதே இந்த விடயம் தெரியவந்தது.

1997 இல் "விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் கைத்தொழில் தொடர்பான அரச கொள்கை" தயாரிக்கப்பட்டிருந்தாலும் அதனை 2021 ஜனவரி 01 வரை வர்த்தமானி ஊடாக வெளியிடாமை தெரியவந்தது.விதைகளை இறக்குமதி செய்வதற்கு தனியார் துறையில் அனுமதி வழங்கப்பட்டுள்ள ஒருசில நிறுவனங்கள் காணப்படுவதுடன் அந்த நிறுவனங்களால் இறக்குமதி செய்யப்படும் விதைகளின் விலைகளை கட்டுப்படுத்தத் தேவையான முறைமையொன்று இந்தச் சட்டத்தில் உள்வாங்கப்படவில்லை என இங்கு புலப்பட்டது.

இதுவொரு பாரதூரமான நிலைமை எனக் குழுவின் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.இதனால் உள்நாட்டு மரக்கறி விவசாயிகள் கடுமையான அசௌகரியத்துக்கு உள்ளாவதாகவும் இது ஒரு மாபியாவாகும் என்றும் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். அதனால் இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த முறைமை ஒன்று தயாரிக்கப்பட வேண்டும் எனவும், அதன்மூலம் உள்நாட்டு மரக்கறி விவசாயிகளுக்கு மலிவு விலையில் மரக்கறி விதைகளைப் பெற்றுக்கொள்ள முடியுமான முறையொன்று தயாரிக்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அதேபோன்று உள்நாட்டு மரக்கறி விவசாயிகளுக்கு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி விதைகளை வழங்குவதன் விகிதாசாரம் தொடர்பில் திருப்தி அடைய முடியாது என்று இதன்போது கோபா குழு சுட்டிக்காட்டியது. உள்நாட்டு மரக்கறி விதைகளின் தேவையில் அதிகமான அளவு உற்பத்தி செய்வதற்கும் மலிவு விலையில் வழங்குவதற்கும் விவசாயத் திணைக்களம் உள்ளிட்ட அரச துறை நடவடிக்கை எடுப்பதாகவும், எனினும், ஒருசில விதைகளை உற்பத்தி செய்வது ஒரு சில காலநிலைமைகளின் கீழ் முடியாமல் உள்ளதால் அவ்வாறான விதைகளை இறக்குமதி செய்வதாகவும் இதற்குப் பதிலளிக்கும் வகையில் வருகை தந்த அதிகாரிகள் தெரிவித்தனர். அதனால் அவ்வாறான விதைகளை இறக்குமதி செய்வதற்கு தனியார் நிறுவனங்கள் சிலவற்றுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

மேலும் உற்பத்தி செய்வதற்கு கடினமான கலப்பு விதை வகைகளை தொழில்நுட்பப் பயன்பாட்டுடன் உற்பத்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். விசேடமாக ஒரு சில விதைகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு சுமார் பத்து வருடங்கள் செல்வதாகவும் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இது தொடர்பில் கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் நாம் தொடர்பு கொண்டு வினவியபோது,

கோபா குழுவினர் கூறுவது போல ஒரு நிர்ணய விலையை விதைகளுக்கு இடுவது சாத்தியமற்ற ஒன்றாகும். விதைகளில் பெரும்பாலனவை



வெளிநாடுகளில் இருந்தே கொண்டுவரப்படுகின்றன. அவற்றுக்கு நிர்ணய விலை நிர்ணயிப்பதென்பது கஷ்டமாகும். ஒரு குறிப்பிட்ட விதையில் பல வகைகள் இருக்கின்றன. அதனால் ஒரு தனித்துவ விலை நிர்ணயிப்பது கஷ்டமாகும். அவ்வாறு விலைகள் நிர்ணயித்தல்,நிர்ணயிக்கபட்ட விலைக்கு விற்பதற்காக தரமற்ற விதைகள் இறக்குமதி செய்யப்படும் என்ற அபாய நிலை இருக்கிறது. இந்த விதைகள் எமது அமைச்சின் கீழ் உற்பத்தி செய்யப்படுபவை என்றால் மாத்திரமே எமக்கு நிர்ணய விலை குறிப்பிடலாம் என அமைச்சர் தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினை குறித்து வலப்பனை பிரதேசத்தைச் சேர்ந்த மரக்கறி விவசாயி ஆறுமுகம் கவிஷான்தனிடம் வினவிய போது,

தற்போதுள்ள பொருளாதாரச் சிக்கலில் ஒரு 50g லீக்ஸ் விதை டின் ஒன்றின் விலை 3,000ரூபாவையும் தாண்டிச் செல்கிறது. 50g விதையின் மூலம் அண்ணளவாக 100 தொடக்கம் 150 கிலோகிராம் வரையான அறுவடையைப் பெறமுடியும். எல்லா இடங்களிலும் இந்த அளவான அறுவடை கிடைக்காது. உரம் மற்றும் காலநிலை பிரச்சினைகளால் பெரும்பாலான விதைகள் தனியார் நிறுவனங்களாலேயே விற்பனை செய்யப்படுகின்றன. இதன் காரணமாக விதைகளின் விலை காலத்துக்கும், சூழ்நிலை அடிப்படையிலும் விலைகள் மாறுபட்டதாகவே இருக்கின்றன. நீண்டகாலமாக இந்தப் பிரச்சினையை நாம் முகம் கொடுத்து வந்தாலும் எந்தவோர் அரசாங்கமும் இதற்கான ஒழுங்கான முடிவை எமக்கு பெற்றுத்தரவில்லை. ஆகக்குறைந்தது அரசாங்கம் எங்களிடம் உங்களுக்கு எந்த விலையில் இருந்தால் வாங்க முடியும், வாங்க முடியாது என்று கூட எம்முடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டதில்லை. இந்த விலை உயர்வினால் பெரும்பாலான விவசாயிகள் விவசாயத்தை கைவிட்டவர்களும் அதிகமாக இருக்கிறார்கள். சிலர் உற்பத்திகளை குறைத்துக்கொண்டனர்.

அரசாங்க உதவிகள் இந்தப் பிரச்சினையில் இருந்ததா என நாம் அவரிடம் வினவினோம்,

நெல் பயிர்ச்செய்கைகளுக்கே அரசாங்கத்தின் 98% மான சலுகைகளும் செல்கிறது. இருப்பினும், மலையக விவசாயிகளுக்கு எந்த ஆதரவும் - சலுகைகளும் கிடைக்கவில்லை எனத்தான் குறிப்பிட வேண்டும். உண்மையில் அரசியல்வாதிகளின் ஆதரவு பூச்சியமாகவே இதில் இருக்கின்றதாக ஆறுமுகம் தெரிவித்தார்.

மேலும், தம்புள்ளை வர்த்தக மையத்தின் வர்த்தகரான இந்திக்கவிடம் இது குறித்து வினவினோம்,

மரக்கறி விலைகள் பெரும்பாலும் விதைகளின் விலையில் தங்கிநிற்பதில்லை. அதாவது, காலத்திற்கேற்ப உற்பத்தியின் அடிப்படையிலேயே விலைகள் நிர்ணயமாகின்றன. மரக்கறி விலைகள் ஒரே அளவில் நிற்பதாயின் மரக்கறி உற்பத்தியாளர்களுக்கிடையிலே சீரான முகாமைத்துவம் மேற்கொள்ளப்பட வேண்டும். எனவே, குறித்த பகுதியில் இவ்வளவு வீதமான உற்பத்தி நடைபெறுகிறது. ஆகவே, நீங்கள் உங்களுடைய பகுதியில் இந்த அளவிலான உற்பத்தி மேற்கொள்ளுங்கள் என ஒரு ஒருங்கிணைப்பு இருப்பின் மரக்கறி விலைகள் நிலைத்து நிற்கும்.அதாவது, இந்த வருடத்தின் ஏப்ரல் மாதத்தில் மரக்கறிகளுக்கான கேள்விகள் அதிகமானது. அதே பெப்ரவரி மாதத்தில் மரக்கறிக்கான கேள்விகள் குறைந்தது. ஏப்ரல் மாதத்தில் கேள்விகள் அதிகமாக இருப்பதால் மரக்கறிகளின் உற்பத்தியும் போதிய அளவில் இருப்பதால் விலைகள் அதிகமானதாகவே காணப்படுகின்றன. இதே பெப்ரவரி மாதத்தில் உற்பத்திகள் ஒரே அளவு அதிகமாக இருந்தாலும் அதற்கான கேள்விகள் குறைவானதாகவே காணப்படுகின்றன. ஆகவே, உற்பத்தியாளர்கள் எவ்வளவேனும் ஒரு விலைக்கு விற்று முடிக்க வேண்டிய ஒரு நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.இதனால் மரக்கறி விலைகள் குறைகின்றன. இதுவே தம்புள்ளை வர்த்தக நிலையத்தில் மரக்கறி விலைகளின் நிலை என தம்புள்ளை வர்த்தக மையத்தின் வர்த்தகரான இந்திக்க தெரிவித்தார்.

ஹட்டன் பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயியான பி. டி. பிரகாஷ் இது குறித்து பேசுகையில் ,

ஒரு குறிப்பிட்ட அளவான 20g விதையில் 15g அளவில் நடுகைக்காக எடுக்கலாம், எஞ்சியவை பாவனைக்கு உகந்ததாக இருக்காது. சாதாரணமாக ஒரு அரை ஏக்கர் பயிரிட 15g அளவில் விதை தேவைப்படும்.



ஒரு பயிர்ச்செய்கை என்பது பலவிதமான செலவுகளை உள்ளடக்கியது.முதல் மாதம் ஒரு வகையான கிருமிநாசினி, இரண்டாம் மாதம் வளர்ச்சிக்கான கிரிமி நாசினி என ஒவ்வொரு மாதமும் என காலா காலம் கவனிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.பொதுவாக லீக்ஸ் மற்றும் பொதுவான பயிர்ச்செய்கையில் மொத்தமாக செலவுகள் அனைத்தும் போக ஒரு 30% மான இலாபத்தைப் பெறமுடியும் என அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் நாம் விவசாயத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி,சுபாஷினி விஜேசிங்கவை பல முறை தொடர்பு கொண்டோம். எனினும், எமக்கு பதில் வழங்க மறுத்துவிட்டார்.

**அப்ரா அன்சார்**

## இன்றைய நாளில்...

- 1757 – முதலாவது ரூபா நாணயம் கல்கத்தாவில் வார்க்கப்பட்டது.
- 1789 – சனிக் கோளின் என்சலடஸ் என்ற புதிய சந்திரனை வில்லியம் எர்செல் கண்டுபிடித்தார்.
- 1844 – பிரெட்ரிக் எங்கெல்ஸ் மற்றும் கார்ல் மார்க்ஸ் இருவரும் பாரிசில் சந்தித்தனர்.
- 1845 – சயன்டிஃபிக் அமெரிக்கன் முதலாவது இதழ் வெளிவந்தது.
- 1859 – 1859 சூரியப் புயல் பூமியைத் தாக்கிய அதிதீவிர புவிக்காந்தப் புயல் ஆகும். அமெரிக்கா, ஐரோப்பா முழுவதும் தொலைத்தந்திச் சேவைகள் பாதிப்படைந்தன.
- 1963 – மார்ட்டின் லூதர் கிங், என் கனவு யாதெனில்... என்ற புகழ்பெற்ற வார்த்தைகளுடன் சொற்பொழிவாற்றினார்.
- 1993 – கலிலியோ விண்கலம் டாக்டில் என்று பின்னர் பெயரிடப்பட்ட சந்திரன் ஒன்றைக் கண்டுபிடித்தது.
- 1996 – வேல்ஸ் இளவரசர் சார்ள்ஸ், இளவரசி டயானா மணமுறிவு ஏற்பட்டது.
- 2006 – திருகோணமலை, சம்பூரில் இலங்கை இராணுவம் தாக்குதல் நடத்தியதில் 20 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.
- 2011 – ராஜீவ் காந்தி படுகொலையில் குற்றஞ்சாட்டப்பட்டோரைத் தூக்கிலிடக்கூடாது எனக் கோரி காஞ்சிபுரத்தில் செங்கொடி என்ற 21 வயது பெண் போராளி தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார்.

## நக்கல் நமசிவாயம்

கண்டி பெரஹராவில தனியே போன யானை குழம்பி எல்லோரையும் நல்லா பயப்படுத்திப் போட்டுதாம்.. அரசியலிலும் தனியே வந்த யானை அதைத்தான் செய்யப்போகுது..



# மத்திய கிழக்கிலிருந்து சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதன்மூலம் பொருளாதாரத்தை வலுப்படுத்தலாம்

## சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு ஆலோசனை









மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு ஈர்ப்பதன் மூலம் இலங்கையின் சுற்றுலாத் துறையின் முன்னேற்றத்துக்கும் இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும் பாரிய பங்களிப்பை வழங்க முடியும். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு விரைவாக அறிவிக்க நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியது.

சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் அண்மையில் பாராளுமன்றத்தில் கூடியது.அதன்போதே மேற்கண்ட ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

ஆபிரிக்க மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் தொடர்பான இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை குறித்து இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அதற்கமைய, வெளிவிவகார அமைச்சில் செயற்படும் ஆபிரிக்க மற்றும் மத்திய கிழக்கு வலயம் தொடர்பான பிரிவின் பணிகள் மற்றும் அந்த வலயம் சம்பந்தப்பட்ட இந்நாட்டின் இராஜதந்திரக் கொள்கைகள் தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

இந்த வலயத்திலுள்ள நாடுகள் இலங்கையுடன் நட்புரீதியான கொள்கையிலிருந்து செயற்படுவதாக வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதிகள் இதன்போது தெரிவித்தனர்.

அந்த உறவுகள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என்பது குழுவின் கருத்தாக இருந்தது. அதனால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை விரைவாக எடுக்குமாறு அதிகாரிகளுக்குக் குழு ஆலோசனை வழங்கியது.

அத்துடன், வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள்/ உயர் ஸ்தானிகராலயங்களின் இணையதளங்கள் ஊடாக இலங்கை பற்றிய சரியான தகவல்களை வழங்கி இலங்கை சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு ஈர்ப்பதன் மூலம் இலங்கையின் சுற்றுலாத் துறையின் முன்னேற்றத்துக்கும் இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும் பாரிய பங்களிப்பை வழங்க முடியும். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு விரைவாக அறிவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் குழு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியது.

சீனப் பிரஜைகள் இலங்கைக்கு வரும்போது அவர்களுக்கு வருகை தரும் விசா வசதியை (on arrival visa facility)வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் மற்றும் மண்டரின் மொழியில் ஒன்லைன் மூலம் விசா விண்ணப்பங்களை வழங்குவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. இது தொடர்பான அறிக்கையொன்றை குழுவுக்கு வழங்குமாறு குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி வருகை தந்திருந்த அதிகாரிகளுக்கு குழுவின் தலைவர் ஆலோசனை வழங்கினார். அதற்கு மேலதிகமாக, கடந்த கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகளின் முன்னேற்றம் குறித்தும் இதன்போது மீளாய்வு செய்யப்பட்டது.

இக் கூட்டத்தில் குழுவின் உறுப்பினர்களான ஜீ.எல். பீரிஸ், நிரோஷன் பெரேரா, எஸ்.எம்.எம். முஷாரப், காவிந்த ஹேஷான் ஜயவர்தன, அகில எல்லாவல, சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம், யதாமினி குணவர்தன மற்றும் மதுர விதானகே ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள்,வெளிவிவகார அமைச்சு மற்றும் குடிவரவு - குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# கச்சதீவை மீட்டால் மீனவர் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்குமா?

## தமிழகத் தலைவர்கள் பதில்கூற வேண்டும் என்கிறார் மகேஷ்

பு.கஜிந்தன்



கச்சதீவை மீட்போம் என தமிழக மீனவ மக்களிடம் கூறும் தமிழ்நாட்டு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் மற்றும் பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவர் அண்ணாமலை ஆகியோர் இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகையை கட்டுப்படுத்த முடியுமா என யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனப் பிரதிநிதி மகேஷ் கேள்வி எழுப்பினார்.

யாழ்ப்பாணத்தில் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய பிரச்சினை கட்டுப்படுத்த முடியாமல் இருக்கின்ற நிலையில், வடபகுதி மீனவர்கள் தினமும் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள்.

2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரை இந்திய மீனவர்களின் அத்துமீறிய இழுவைமடித் தொழிலை நிறுத்துமாறு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு கலைத்து விட்டோம்.

இந்நிலையில், கடந்த வாரம் தமிழ்நாட்டு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு கச்சதீவை மீட்பது தான் வழியென க்கூறியுள்ளார்.

அதேபோல் பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவர் குப்புசாமி அண்ணாமலையும் இந்திய மீனவர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு கச்சதீவை மீட்பதற்கு மோடி அரசு தலையீடு செய்யும் எனக் கூறியிருந்தார்.

நான் இவர்களிடம் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். கச்ச தீவை இந்தியாவுக்கு வழங்கி விட்டால் வடபகுதி கடலில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய தொழில் நடவடிக்கையை கட்டுப்படுத்த முடியுமா?

கச்சதீவு எங்களிடம் இருக்கின்றபோது காங்கேசன்துறை தொடக்கம் மன்னார் குதிரை முனை மற்றும் திருகோணமலை வரை இந்திய மீனவர்கள் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கச்சதீவில் நிரந்தரமாக இந்திய மீனவர்களை தங்கவிட்டால் இலங்கையின் முழுக் கடலையும் நாசப்படுத்தி மீனவ மக்களின் வாழ்க்கையை சீரழித்து விடுவார்கள்.

உலக மீன் ஏற்றுமதியில் இந்தியா இரண்டாவது இடத்தில் இருக்கின்ற நிலையில், எமது இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறிய மீன்பிடியினால் 30 வீதமான மீன்களை அள்ளிச்செல்கிறார்கள்.

ஆகவே, சந்திரனுக்கு விண்கலத்தை அனுப்பிய இந்தியா, இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களை கட்டுப்படுத்துவதற்கு இயலாமல் இருப்பது கவலையளிப்பதாகத் தெரிவித்தார்.

# பொறுப்பற்ற செயற்பாடுகளால் தீயில் கருகும் மரக்கன்றுகள்

## சாவகச்சேரிப் பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் ஜெகதாஸ் தெரிவிப்பு

சாவகச்சேரி நிருபர்



அரச திணைக்களங்கள் சிலவற்றின் பொறுப்பற்ற செயற்பாடு காரணமாக தென்மராட்சிப் பிரதேசத்தில் ஏ 9 வீதியோரம் நாட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்ற நிழல் மரக்கன்றுகள் தீயில் எரிந்து கருகும் நிலை ஏற்பட்டுள்ளதாக சாவகச்சேரிப் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் வை.ஜெகதாஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் புகையிரத திணைக்கள ஊழியர்கள் வீதி மற்றும் தண்டவாள ஓரங்களை துப்புரவு செய்த பின்னர் குப்பைகளை வீதியோரம் போட்டு எரிக்கின்றனர்.

தற்போது கடும் வறட்சி நிலவுவதால் வீதியோரம் காய்ந்து காணப்படும் புற்கள் வழியாக தீ பரவி வீதியோரம் நாட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் நிழல் மரக்கன்றுகளும் எரிந்து நாசமாகின்றன.

தன்னார்வ நிறுவனங்கள்,இளைஞர் அமைப்புகள் பசுமையை ஏற்படுத்தும் நோக்கில் வீதியோரம் நிழல் மரங்களை நாட்டி பராமரித்து வரும் நிலையில், மேற்படி திணைக்கள ஊழியர்களின் பொறுப்பற்ற செயற்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது.எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாமல் நிழல் மரங்களை பாதுகாக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# மழைவேண்டி மாளிகாவத்தையில் தொழுகை



ஏ.எஸ்.எம்.ஜாவித்

அகில இலங்கை ஜமிய்யதுல் உலமா சபை ஏற்பாடு செய்த மழை வேண்டித் தொழுகை நேற்றுக் காலை மாளிகாவத்தை பி.டி. சிறிசேன விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதன்போது உலமா சபையின் பொதுச் செயலாளர் மௌலவி அர்க்கம் நூராமித் தொழுகையை நடத்தி விசேட பிரார்த்தனையும் மேற்கொண்டார். இத்தொழுகையில் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

# வாழைத்தோட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவம்:பிரதான சூத்திரதாரி கைது

வாழைத்தோட்டம், மார்ட்டின் பிளேஸ் ஹோட்டல் ஒன்றில் 20 வயதுடைய இளைஞரொருவரை சுட்டுக்கொன்ற சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடவத்த பிரதேச வீடொன்றின் பின்புறம் உள்ள பிளாஸ்ரிக் கொள்கலனில் மறைத்து வைத்திருந்த நிலையில், குறித்த துப்பாக்கி கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த துப்பாக்கி பாதுகாப்புப் படையினரால் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

கடந்த 20ஆம் திகதி கடவத்த பிரதேசத்தில் சுமார் 25 இலட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதுடன் சந்தேக நபரும் கைதுசெய்யப்பட்டார். இந்நிலையில், சந்தேக நபர் நீதிமன்ற உத்தரவின் பேரில் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை மேற்கொண்டபோது வாழைத்தோட்டம் துப்பாக்கிச் சூட்டுத் சம்பவத்துடன் மேற்குறித்த நபர் தொடர்பு பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# காலமானார்

பேருவளை நிருபர்



வியங்கல்லையைச் சேர்ந்த சட்டத்தரணியும் முன்னாள் ஊடகவியலாளருமான ரிப்லான் அன்வர் 51ஆவது வயதில் நேற்று முன்தினம் இரவு (26) பேருவளை சீனன் கோட்டையில் காலமானார்.

வியங்கல்லையைச் சேர்ந்த முன்னாள் அதிபரும் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான மர்ஹூம் எம்.இஸட். அன்வர், மர்ஹூமா நஸபீயா தம்பதியின் புதல்வராவார். 3 பிள்ளைகளின் தந்தையான இவர் மதுகம நீதிமன்றத்தின் சட்டத்தரணியாகக் கடமையாற்றி வந்தார்.

அன்னாரின் ஜனாஸா நேற்று (27) மாலை சீனன் கோட்டை பாஸிய்யா பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஜனாஸா நல்லடக்கத்தில் தமிழ்,முஸ்லிம் மற்றும் சிங்களம் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

# ஒன்பது வருடங்களின் பின் பஸ் சேவை மீள ஆரம்பம்

பேருவளை நிருபர்

அழுத்கமையிலிருந்து பேருவளை மருதானை வீதியூடாக ஒன்பது வருடங்களின் பின் இன்று (28)முதல் பஸ் சேவை மீள ஆரம்பிக்கப்படவுள்ளது.

பேருவளை அல் - பாசியதுல் நஸ்ரியா முஸ்லிம் மகளிர் கல்லூரி மாணவிகளின் நன்மை கருதி பாடசாலை அதிபர் மஸ்னவியா ரிப்கான், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்கம் மற்றும் பொதுமக்கள் விடுத்த வேண்டுகோளின் பேரில் மேல்மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைத் தலைவரும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பேருவளை அமைப்பாளருமான பிரசன்ன சஞ்சீவவின் முயற்சியால் இந்த பஸ் சேவை ஆரம்பிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த பஸ் சேவையூடாக அல் - பாஸியதுன் நஸ்ரியா மகளிர் கல்லூரி மற்றும் அல் - பாஸியதுன் நஸ்லியா ஆண்கள் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் நன்மையடைவார்கள். அழுத்கம இ.போ.ச. பஸ் நிலையத்தில் காலை 6.30. மணிக்கு இடம்பெறவுள்ள ஆரம்ப நிகழ்வில் மேல்மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைத் தலைவரும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பேருவளை அமைப்பாளருமான பிரசன்ன சஞ்சீவ உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொள்வர்.

# கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி அதிபராக நஸ்மியா பொறுப்பேற்பு

மாளிகைக்காடு செய்தியாளர்



கல்முனை வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் கல்முனை கோட்டக்கல்வி அதிகாரியாகவும் கடமையாற்றி வந்த இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரி ஏ.பி.பாத்திமா நஸ்மியா சனூஸ் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) புதிய அதிபராக கல்வியமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

வெள்ளிக்கிழமை(25) தனது கடமைகளை கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.எஸ்.நஜீம் முன்னிலையில் பொறுப்பேற்றுக் கொண்ட புதிய அதிபர், கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் தரம் ஒன்று முதல் உயர்தரம் வரை கற்ற பழைய மாணவியாவார்.

அப் பாடசாலையின் ஆசிரியராகக் கடமையாற்றி பின்னர் அதிபர் சேவைக்கும் தெரிவுசெய்யப்பட்டதுடன் அப் பாடசாலையின் வரலாற்றில் முதலாவது இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரி என்கிற பெருமைக்கும் சொந்தக்காரராகத் திகழ்கிறார்.

கல்முனை வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் கல்முனை கோட்டக்கல்வி அதிகாரியாகவும் கடமையாற்றிய இவர் சிறந்த நிர்வாகத் திறமை கொண்ட அதிகாரியாக பலரது பாராட்டுகளையும் பெற்றதுடன் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி தேசிய பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டதன் பின்னர் அதிபராகக் கடமையேற்கும் முதலாவது பெண் அதிபர் இவராவார்.

இவரது கடமையேற்பு நிகழ்வில் கல்முனை வலயக்கல்வி அலுவலக உயரதிகாரிகள், கல்விமான்கள், ஊர்ப் பிரமுகர்கள், சக பாடசாலை அதிபர்கள், இப்பாடசாலையின் நிர்வாகத்தினர், அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவினர், பழைய மாணவிகள் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள், புதிய அதிபரின் குடும்பத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இவரது நியமனத்தை தொடர்ந்து அரசியல் பிரமுகர்கள், பொது அமைப்புகள், பொதுமக்கள் எனப் பலரும் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவிக்கின்றனர்.

# பகிஷ்கரிப்புப் போராட்டம்

சுமார் 06 வருடங்களுக்கு முன்னர் தவறான தகவல்களை முன்வைத்து தீர்வு காணப்பட்ட வீதிப் பிரச்சினை மீண்டும் தலைதூக்கியமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கொழும்பு -கட்டுநாயக்க சேவையிலீடுபடும் சொகுசு பஸ்கள் நேற்றுக் காலை முதல் சேவையிலீடுபடவில்லை.

இப்பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டம் காரணமாக கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு செல்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

இந்நிலையில், அமைச்சர் லசந்த அழகியவண்ணவை இன்று காலை சந்தித்து இது தொடர்பில் கலந்துரையாடவுள்ளதாகவும் தற்செயலாக பேச்சுவார்த்தை தோல்வியடைந்தால் இன்று (28) மாலை, வழித்தட எண். 265 மினுவாங்கொடை - கொழும்பு, வழித்தட எண். 187 கட்டுநாயக்க - கொழும்பு, வழித்தட எண். 240 நீர்கொழும்பு - கொழும்பு, பாதை எண். 187 ஜா - எல - கொழும்பு மற்றும் ரத்தொழுகம – ஆகிய பாதைகளில் சேவையிலீடுபடும் பஸ்கள் சேவையில் ஈடுபடாது என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் கம்பஹா மாவட்ட சங்கத் தலைவர் அறிவித்துள்ளார்.



# சம்பத் வங்கி பீ.எல்.சீ.

## 2023 ஜூன் 30இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான இடைக்கால நிதிக்கூற்றுக்கள்

(கொழும்பு பங்குச் சந்தையின் சட்டம் 7.4 பிரகாரம்)

கம்பனி பதிவு இலக்கம்: PQ144

## இலாபம் அல்லது நட்டம் பற்றிய கூற்று

| | வங்கி | | | | | | குழுமம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஜூன் 30இல் முடிவடைந்த ஆறு மாதங்களுக்கானது | | | ஜூன் 30இல் முடிவடைந்த காலாண்டுக்கானது | | | ஜூன் 30இல் முடிவடைந்த ஆறு மாதங்களுக்கானது | | | ஜூன் 30இல் முடிவடைந்த காலாண்டுக்கானது | | |
| | 2023 (கணக்காய்வு செய்யப்பட்டது) ரூ 000 | 2022 (கணக்காய்வு செய்யப்பட்டது) ரூ 000 | மாற்றம் % | 2023 ரூ 000 | 2022 ரூ 000 | மாற்றம் % | 2023 ரூ 000 | 2022 ரூ 000 | மாற்றம் % | 2023 ரூ 000 | 2022 ரூ 000 | மாற்றம் % |
| **மொத்த வருமானம்** | **109,211,604** | **82,748,501** | **32.0** | **55,312,437** | **44,411,578** | **24.5** | **113,874,087** | **86,686,760** | **31.4** | **57,544,607** | **46,227,893** | **24.5** |
| வட்டி வருமானம் | 100,785,624 | 59,248,688 | 70.1 | 50,564,185 | 34,359,352 | 47.2 | 105,018,000 | 62,541,996 | 67.9 | 52,696,701 | 35,921,903 | 46.7 |
| கழி: வட்டிச் செலவினங்கள் | 66,587,590 | 27,849,050 | 139.1 | 34,508,954 | 16,500,189 | 109.1 | 69,591,092 | 29,529,220 | 135.7 | 36,064,502 | 17,498,972 | 106.1 |
| **தேறிய வட்டி வருமானம்** | **34,198,034** | **31,399,638** | **8.9** | **16,055,231** | **17,859,163** | **(10.1)** | **35,426,908** | **33,012,776** | **7.3** | **16,632,199** | **18,422,931** | **(9.7)** |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 11,515,234 | 9,814,131 | 17.3 | 5,212,815 | 4,680,798 | 11.4 | 11,826,722 | 10,238,846 | 15.5 | 5,360,754 | 4,801,793 | 11.6 |
| கழி: கட்டணம் மற்றும் தரகுச் செலவினங்கள் | 1,752,410 | 1,221,421 | 43.5 | 848,967 | 624,728 | 35.9 | 1,752,641 | 1,222,486 | 43.4 | 849,089 | 625,337 | 35.8 |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | **9,762,824** | **8,592,710** | **13.6** | **4,363,848** | **4,056,070** | **7.6** | **10,074,081** | **9,016,360** | **11.7** | **4,511,665** | **4,176,456** | **8.0** |
| வர்த்தகப்படுத்தல் நடவடிக்கைகள் மூலமான தேறிய இலாபம்/(நட்டம்) | 1,704,409 | (2,541,606) | 167.1 | 11,599 | (2,160,880) | 100.5 | 1,669,820 | (2,541,606) | 165.7 | (3,100) | (2,160,880) | 99.9 |
| நிதிச் சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் பெற்ற தேறிய இலாபம் | | | | | | | | | | | | |
| - இலாப/(நட்ட) கூற்றினூடாக சாதாரண பெறுமதியில் | 231,394 | 221,189 | 4.6 | 138,020 | 208,008 | (33.6) | 234,678 | 221,189 | 6.1 | 138,020 | 208,008 | (33.6) |
| - ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானகூற்றினூடாக சாதாரண பெறுமதியில் | 71,249 | (36,705) | 294.1 | 56,331 | (37,163) | 251.6 | 71,249 | (36,705) | 294.1 | 56,331 | (37,163) | 251.6 |
| தேறிய ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | (5,096,306) | 16,042,804 | (131.8) | (670,513) | 7,361,463 | (109.1) | (4,946,382) | 16,263,040 | (130.4) | (704,099) | 7,494,232 | (109.4) |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | **40,871,604** | **53,678,030** | **(23.9)** | **19,954,516** | **27,286,661** | **(26.9)** | **42,530,354** | **55,935,054** | **(24.0)** | **20,631,016** | **28,103,584** | **(26.6)** |
| கழி: பெறுமதி குறைப்பு | 7,227,981 | 28,181,209 | (74.4) | 306,901 | 16,426,949 | (98.1) | 7,200,383 | 28,569,764 | (74.8) | 382,181 | 16,469,961 | (97.7) |
| **தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | **33,643,623** | **25,496,821** | **32.0** | **19,647,615** | **10,859,712** | **80.9** | **35,329,971** | **27,365,290** | **29.1** | **20,248,835** | **11,633,623** | **74.1** |
| **கழி: தொழிற்பாட்டு செலவினங்கள்** | | | | | | | | | | | | |
| ஊழியர் தொடர்பான செலவினங்கள் | 6,985,206 | 6,626,634 | 5.4 | 3,650,166 | 3,522,809 | 3.6 | 7,730,912 | 7,344,103 | 5.3 | 4,037,017 | 3,886,452 | 3.9 |
| பெறுமானதேய்வு மற்றும் கடன் தீர்ப்பனவு செலவுகள் | 1,237,251 | 1,200,532 | 3.1 | 521,543 | 566,568 | (7.9) | 1,251,723 | 1,168,291 | 7.1 | 628,817 | 552,774 | 13.8 |
| ஏனைய செலவினங்கள் | 8,052,228 | 5,835,804 | 38.0 | 4,208,785 | 3,104,597 | 35.6 | 8,585,888 | 6,154,762 | 39.5 | 4,540,248 | 3,196,681 | 42.0 |
| **மொத்த தொழிற்பாட்டு செலவினங்கள்** | **16,274,685** | **13,662,970** | **19.1** | **8,380,494** | **7,193,974** | **16.5** | **17,568,523** | **14,667,156** | **19.8** | **9,206,082** | **7,635,907** | **20.6** |
| **நிதியியல் சேவைகள் மீதான வரிக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்** | **17,368,938** | **11,833,851** | **46.8** | **11,267,121** | **3,665,738** | **207.4** | **17,761,448** | **12,698,134** | **39.9** | **11,042,753** | **3,997,716** | **176.2** |
| கழி: நிதியியல் சேவைகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி | 3,641,513 | 2,813,973 | 29.4 | 2,223,217 | 1,100,235 | 102.1 | 3,802,906 | 3,058,326 | 24.3 | 2,296,355 | 1,186,530 | 93.5 |
| சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி | 505,766 | - | | 308,780 | - | | 528,182 | - | | 318,118 | - | |
| **நிதியியல் சேவைகள் மீதான மொத்த வரிகள்** | **4,147,279** | **2,813,973** | **47.4** | **2,531,997** | **1,100,235** | **130.1** | **4,331,088** | **3,058,326** | **41.6** | **2,614,473** | **1,186,530** | **120.3** |
| **வருமான வரிக்கு முன்னரான இலாபம்** | **13,221,659** | **9,019,878** | **46.6** | **8,735,124** | **2,565,503** | **240.5** | **13,430,360** | **9,639,808** | **39.3** | **8,428,280** | **2,811,186** | **199.8** |
| கழி: வருமான வரிச் செலவினம் | 5,559,108 | 1,934,441 | 187.4 | 3,698,275 | 190,783 | 1,838.5 | 5,792,409 | 2,270,589 | 155.1 | 3,800,560 | 295,419 | 1,186.5 |
| **காலப்பகுதிக்கான இலாபம்** | **7,662,551** | **7,085,437** | **8.1** | **5,036,849** | **2,374,720** | **112.1** | **7,637,951** | **7,369,219** | **3.6** | **4,627,720** | **2,515,767** | **83.9** |
| **பகிர்ந்தளிக்கப்படுவதற்கு:** | | | | | | | | | | | | |
| தலைமை கம்பனியின் உரிமையாளர்களுக்கு | 7,662,551 | 7,085,437 | 8.1 | 5,036,849 | 2,374,720 | 112.1 | 7,637,951 | 7,369,219 | 3.6 | 4,627,720 | 2,515,767 | 83.9 |
| கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்கு | | | | | | | - | - | - | - | - | - |
| | **7,662,551** | **7,085,437** | **8.1** | **5,036,849** | **2,374,720** | **112.1** | **7,637,951** | **7,369,219** | **3.6** | **4,627,720** | **2,515,767** | **83.9** |
| சாதாரண பங்கொன்றிற்கான அடிப்படை/ குன்றிய இலாபம் (ரூ.) | 6.53 | 6.04 | 8.1 | 4.30 | 2.03 | 112.1 | 6.51 | 6.28 | 3.6 | 3.95 | 2.15 | 83.9 |

## அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று

| | வங்கி | | | | | | குழுமம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஜூன் 30இல் முடிவடைந்த ஆறு மாதங்களுக்கானது | | | ஜூன் 30இல் முடிவடைந்த காலாண்டுக்கானது | | | ஜூன் 30இல் முடிவடைந்த ஆறு மாதங்களுக்கானது | | | ஜூன் 30இல் முடிவடைந்த காலாண்டுக்கானது | | |
| | 2023 (கணக்காய்வு செய்யப்பட்டது) ரூ 000 | 2022 (கணக்காய்வு செய்யப்பட்டது) ரூ 000 | மாற்றம் % | 2023 ரூ 000 | 2022 ரூ 000 | மாற்றம் % | 2023 ரூ 000 | 2022 ரூ 000 | மாற்றம் % | 2023 ரூ 000 | 2022 ரூ 000 | மாற்றம் % |
| காலப்பகுதிக்கான இலாபம் | **7,662,551** | **7,085,437** | **8.1** | **5,036,849** | **2,374,720** | **112.1** | **7,637,951** | **7,369,219** | **3.6** | **4,627,720** | **2,515,767** | **83.9** |
| **ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | | | | | | | | | | | | |
| இலாபம் அல்லது நட்டமாக மீள்வகைப்படுத்தப்படவுள்ளவை | | | | | | | | | | | | |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமான கூற்றினூடாக சாதாரண பெறுதியில் மதிப்பிடப்பட்ட கடன் சாதனங்கள்: | | | | | | | | | | | | |
| இலாபம்/(நட்டம்) ஆக மீள்மதிப்பிடப்பட்டவை | 3,654,268 | (4,169,574) | 187.6 | 2,791,188 | (2,510,603) | 211.2 | 3,654,268 | (4,169,574) | 187.6 | 2,791,188 | (2,510,603) | 211.2 |
| பெறுமான குறைப்பினால் இலாபம் அல்லது நட்டமாக மீள்வகைப்படுத்தபட்டவை | (71,249) | 36,705 | (294.1) | (56,331) | 37,163 | (251.6) | (71,249) | 36,705 | (294.1) | (56,331) | 37,163 | (251.6) |
| பெறுமான குறைப்பு சம்பந்தமான ஏற்பாடுகளில் எதிர்பார்க்கும் கடன் இழப்புகள் | 162,680 | 253,603 | (35.9) | 146,297 | 83,740 | 74.7 | 162,680 | 253,603 | (35.9) | 146,297 | 83,740 | 74.7 |
| திறைச்சேரி முறிகளை FVOCIஇலிருந்து கடன்தீர்ப்பனவு செலவுகளில் காட்டப்படும் நிதிச்சொத்துகளாக மீளவகைப்படுத்தல் | - | 4,787,611 | (100.0) | - | 4,787,611 | (100.0) | - | 4,787,611 | (100.0) | - | 4,787,611 | (100.0) |
| மேற்குறிப்பிட்ட விடயங்கள் சார்பான பிற் போடப்பட்ட வரி விளைவு | (1,123,709) | (218,003) | (415.5) | (864,345) | (575,499) | (50.2) | (1,123,709) | (218,003) | (415.5) | (864,345) | (575,499) | (50.2) |
| **இலாபம்/நட்டமாக மீள் வகைப்படுத்த வேண்டியுள்ள தேறிய ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | **2,621,990** | **690,342** | **279.8** | **2,016,809** | **1,822,412** | **10.7** | **2,621,990** | **690,342** | **279.8** | **2,016,809** | **1,822,412** | **10.7** |
| இலாபம் அல்லது நட்டமாக மீள் வகைப்படுத்த தேவையற்றவை: | | | | | | | | | | | | |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமான கூற்றினூடாக சாதாரண பெறுமதியில் மதிப்பிடப்பட்ட மூலதன சாதனங்கள்: | | | | | | | | | | | | |
| மீள் மதிப்பீட்டு நட்டம் | (163,604) | (2,204,456) | 92.6 | (28,339) | (1,391,065) | 98.0 | (163,604) | (2,204,456) | 92.6 | (28,339) | (1,391,065) | 98.0 |
| செலாவணியில் ஏற்பட்ட மாற்றம் | (719,360) | 3,354,753 | (121.4) | (232,805) | 1,276,071 | (118.2) | (719,360) | 3,354,753 | (121.4) | (232,805) | 1,276,071 | (118.2) |
| மேற்குறிப்பிட்ட விடயங்கள் சார்பான பிற் போடப்பட்ட வரி விளைவு | 264,889 | (276,071) | 195.9 | 78,343 | 27,599 | 183.9 | 264,889 | (276,071) | 195.9 | 78,343 | 27,599 | 183.9 |
| | (618,075) | 874,226 | (170.7) | (182,801) | (87,395) | (109.2) | (618,075) | 874,226 | (170.7) | (182,801) | (87,395) | (109.2) |
| **இலாபம்/நட்டமாக மீள் வகைப்படுத்த தேவையில்லாத தேறிய ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | **(618,075)** | **874,226** | **(170.7)** | **(182,801)** | **(87,395)** | **(109.2)** | **(618,075)** | **874,226** | **(170.7)** | **(182,801)** | **(87,395)** | **(109.2)** |
| **வரி நீங்கலான ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | **2,003,915** | **1,564,568** | **28.1** | **1,834,008** | **1,735,017** | **5.7** | **2,003,915** | **1,564,568** | **28.1** | **1,834,008** | **1,735,017** | **5.7** |
| **காலப்பகுதிக்கான வரி நீங்கலான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | **9,666,466** | **8,650,005** | **11.8** | **6,870,857** | **4,109,737** | **67.2** | **9,641,866** | **8,933,787** | **7.9** | **6,461,728** | **4,250,784** | **52.0** |
| **பகிர்ந்தளிக்கப்படுவதற்கு:** | | | | | | | | | | | | |
| வங்கியின் பங்குதாரர்களுக்கு | 9,666,466 | 8,650,005 | 11.8 | 6,870,857 | 4,109,737 | 67.2 | 9,641,866 | 8,933,787 | 7.9 | 6,461,728 | 4,250,784 | 52.0 |
| கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்கு | | | | | | | - | - | - | - | - | - |
| | **9,666,466** | **8,650,005** | **11.8** | **6,870,857** | **4,109,737** | **67.2** | **9,641,866** | **8,933,787** | **7.9** | **6,461,728** | **4,250,784** | **52.0** |

## நிதியியல் நிலைமைக் கூற்று

| | வங்கி | | | குழுமம் | | |
|---|---|---|---|---|---|---|
| திகதியன்று | 30-ஜூன் 2023 (கணக்காய்வு செய்யப்பட்டது) ரூ 000 | 31-டிசம்பர் 2022 (கணக்காய்வு செய்யப்பட்டது) ரூ 000 | மாற்றம் % | 30-ஜூன் 2023 ரூ 000 | 31-டிசம்பர் 2022 (கணக்காய்வு செய்யப்பட்டது) ரூ 000 | மாற்றம் % |
| **சொத்துக்கள்** | | | | | | |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | 80,316,463 | 79,162,545 | 1.5 | 80,638,408 | 79,344,587 | 1.6 |
| இலங்கை மத்திய வங்கியுடனான மீதிகள் | 33,872,475 | 31,579,185 | 7.3 | 33,872,475 | 31,579,185 | 7.3 |
| வங்கிகளிலுள்ள இருப்புக்கள் | 30,914,412 | 10,927,216 | 182.9 | 30,914,412 | 10,927,216 | 182.9 |
| எதிர் மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள் | 4,327,706 | 10,072,569 | (57.0) | 4,778,606 | 10,299,569 | (53.6) |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 710,117 | 44,598 | 1,492.3 | 710,117 | 44,598 | 1,492.3 |
| இலாபம் அல்லது நட்ட கூற்றினூடாக சாதாரண பெறுமதியில் மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் | 8,687,897 | 4,641,277 | 87.2 | 8,802,833 | 4,822,395 | 82.5 |
| கடன் தீர்பனவு செலவுகளில் காட்டப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள் | | | | | | |
| - கடன் மற்றும் முற்பணம் | 781,286,574 | 811,157,649 | (3.7) | 810,840,181 | 839,976,738 | (3.5) |
| - கடன் மற்றும் ஏனைய சாதனங்கள் | 308,490,283 | 278,775,796 | 10.7 | 315,952,116 | 284,237,662 | 11.2 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமான கூற்றினூடாக சாதாரண பெறுமதியில் மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் | 105,989,033 | 32,772,930 | 223.4 | 105,989,089 | 32,772,986 | 223.4 |
| துணைக் கம்பனிகளிலான முதலீடு | 4,110,642 | 3,898,512 | 5.4 | - | - | - |
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 9,168,403 | 8,910,525 | 2.9 | 19,447,555 | 19,067,412 | 2.0 |
| அருவச் சொத்துக்கள் | 654,556 | 578,031 | 13.2 | 680,445 | 600,341 | 13.3 |
| பயன்பாட்டு உரிமைச் சொத்துக்கள் | 3,916,356 | 3,540,286 | 10.6 | 3,058,584 | 3,265,770 | (6.3) |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | 17,323,434 | 21,734,244 | (20.3) | 17,675,627 | 21,992,147 | (19.6) |
| ஏனைய சொத்துக்கள் | 31,556,536 | 26,630,974 | 18.5 | 34,158,043 | 28,388,956 | 20.3 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **1,421,324,887** | **1,324,426,337** | **7.3** | **1,467,518,491** | **1,367,319,562** | **7.3** |
| **பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகளுக்கு செலுத்த வேண்டியவை | 7,349,910 | 11,297,181 | (34.9) | 11,823,806 | 15,255,184 | (22.5) |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 565,616 | 1,449,393 | (61.0) | 565,616 | 1,449,393 | (61.0) |
| மீள் கொள்வனவு அடிப்படையில் விற்ற பிணைப் பத்திரங்கள் | 49,743,919 | 2,283,291 | 2,078.6 | 49,743,919 | 2,283,291 | 2,078.6 |
| கடன் தீர்பனவு செலவுகளில் காட்டப்பட்டுள்ள நிதிப் பொறுப்புக்கள் | | | | | | |
| - வைப்பாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | 1,138,916,702 | 1,096,099,874 | 3.9 | 1,160,706,548 | 1,115,155,879 | 4.1 |
| - ஏனைய கடன் கொடுத்தவர்களுக்கு செலுத்த வேண்டியவை | 7,400,760 | 9,173,923 | (19.3) | 7,400,760 | 9,173,923 | (19.3) |
| - கடன்பத்திர உரிமையாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | 27,968,717 | 25,259,536 | 10.7 | 34,853,355 | 32,872,261 | 6.0 |
| ஓய்வு நலக்காப்பு திட்டங்கள் | 2,254,859 | 1,845,228 | 22.2 | 2,416,916 | 1,998,238 | 21.0 |
| செலுத்த வேண்டிய பங்குலாபம் | 223,410 | 187,141 | 19.4 | 223,410 | 187,141 | 19.4 |
| நடப்பு வரிப் பொறுப்புக்கள் | 16,144,373 | 18,754,155 | (13.9) | 16,530,786 | 19,186,239 | (13.8) |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் | - | - | - | 1,465,662 | 1,465,662 | - |
| ஏனைய பொறுப்புக்கள் | 38,841,983 | 31,696,670 | 22.5 | 40,726,553 | 32,741,284 | 24.4 |
| **மொத்த பொறுப்புக்கள்** | **1,289,410,249** | **1,198,046,392** | **7.6** | **1,326,457,331** | **1,231,768,495** | **7.7** |
| **பங்கு மூலதனம்** | | | | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 48,741,119 | 47,622,493 | 2.3 | 48,741,119 | 47,622,493 | 2.3 |
| ஒதுக்கங்கள் | | | | | | |
| நியதிச்சட்ட ஒதுக்கங்கள் | 5,755,000 | 5,755,000 | - | 6,033,000 | 6,033,000 | - |
| ஏனைய ஒதுக்கங்கள் | 66,850,617 | 64,832,981 | 3.1 | 70,348,555 | 68,330,919 | 3.0 |
| பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் | 10,567,902 | 8,169,471 | 29.4 | 15,938,486 | 13,564,655 | 17.5 |
| வங்கியின் பங்குதாரர்களுக்கான மொத்த பங்கு மூலதனம் | 131,914,638 | 126,379,945 | 4.4 | 141,061,160 | 135,551,067 | 4.1 |
| கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்குரியது | | | | - | - | - |
| **மொத்த பங்கு மூலதனம்** | **131,914,638** | **126,379,945** | **4.4** | **141,061,160** | **135,551,067** | **4.1** |
| மொத்த பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புக்கள் | 1,421,324,887 | 1,324,426,337 | 7.3 | 1,467,518,491 | 1,367,319,562 | 7.3 |
| எதிர்பார பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகள் | **346,669,814** | **315,363,167** | 9.9 | **344,819,414** | **314,491,810** | 9.6 |
| பங்கொன்றிற்கான தேறிய சொத்து (ரூ) | **112.49** | **107.77** | 4.4 | **120.29** | **115.59** | 4.1 |
| **விஞ்ஞாபன தகவல்கள்** | | | | | | |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 4,035 | 3,948 | | | | |
| கிளைகளின் எண்ணிக்கை | 229 | 229 | | | | |

**அத்தாட்சிப்படுத்துகை**

மேற்படி நிதிக் கூற்றுக்கள் 2007ஆம் ஆண்டின் கம்பனிச் சட்டம் இல 7 இன் தேவைக்கு இணங்கவுள்ளது என நான் உறுதிப்படுத்துகின்றேன்.

(கையொப்பமிட்டது)
**அஜந்த டி வாஸ் குணசேகர**
நிர்வாக இயக்குநர் /பிரதம நிதியியல் அதிகாரி

கீழே கையொப்பமிட்ட நாங்கள் சம்பத் வங்கி பிஎல்சியின் தலைவர் மற்றும் முகாமை பணிப்பாளராக இருப்பதுடன் நாங்கள் இணைவாக பின்வரும் விடயங்ளை உறுதிப்படுத்துகின்றோம்:

(அ) இலங்கை மத்திய வங்கியால் பரிந்துரைக்கப்பட்ட வரைவிலக்கணங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட வடிவங்களுக்கு இணங்கவே மேற்கூறப்பட்ட கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.
மற்றும்

ஆ) இக் கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள தகவல்கள், கணக்காய்வு செய்யப்பட்டவை என குறிப்பிடப்பட்டவை தவிர்த்து ஏனையவை வங்கி மற்றும் அதன் துணை நிறுவனங்களின் கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

(கையொப்பமிட்டது)
**ஹர்ஷ அமரசேகர**
தலைவர்
2023 ஆகஸ்ட் 11

(கையொப்பமிட்டது)
**அயோத்யா இத்தவெல பெரேரா**
முகாமை பணிப்பாளர்

## விளக்கக் குறிப்புகள்

1. 2022 ஆம் ஆண்டில் வருடாந்தக் கணக்கறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், கணக்கியல் கொள்கைகளிலோ கணக்கீட்டு முறைகளிலோ எந்தவிதமான மாற்றங்களும் ஏற்படவில்லை.

2. குழும நிதிக்கூற்று அறிக்கைகள், வங்கியினதும் அதன் முற்றிலும் உரித்துடைய துணை நிறுவனங்களான சம்பத் சென்டர் லிமிடெட், எஸ்.சி. செக்யூரிட்டீஸ் (பிறைவேட்) லிமிடெட், சியபத்த பினான்ஸ் பிஎல்சி, சம்பத் இன்போர்மேஷன் டெக்னோலொஜி சொலுஷன்ஸ் லிமிடெட் ஆகியவற்றை உள்ளடக்கியதாகவுள்ளது.

3. இக்காலப்பகுதியில் சொத்துக்களின், பொறுப்புக்களின், எதிர்பாராத பொறுப்புக்களின் உள்ளடக்கங்களில் எந்தவிதமான பொருண்மை வாய்ந்த மாற்றங்களும் ஏற்படவில்லை. அறியப்பட்ட எல்லா செலவினங்களும் கணக்கில் காட்டப்பட்டுள்ளன.

4. இந்த இடைக்கால நிதிக்கூற்று அறிக்கைகள் இலங்கை கணக்கியல் நியமம் - LKAS 34 (இடைக்கால நிதிக்கூற்றறிக்கையிடல்) க்கு அமைய மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் 7.4 ஆம் விதிக்கமைய தகவல்களை உள்ளடக்கியதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

5.

| பங்கொன்றின் சந்தைப் பெறுமதி | 2023 (ரூ) | 2022 (ரூ) |
|---|---|---|
| ஜூன் 30 ஆம் திகதியன்று சந்தைப் பெறுமதி | **55.90** | 30.20 |
| ஜூன் 30 உடன் முடிவடைந்த காலாண்டுப்பகுதியில், அதிகூடிய சந்தைப் பெறுமதி | **57.50** | 45.00 |
| ஜூன் 30 உடன் முடிவடைந்த காலாண்டுப்பகுதியில், ஆகக் குறைந்த சந்தைப் பெறுமதி | **44.10** | 29.60 |
| ஜூன் 30 உடன் முடிவடைந்த காலாண்டுப்பகுதியில், நிறையேற்றப்பட்ட சராசரியான சந்தைப் பெறுமதி | **50.81** | 36.61 |

6. குழுமத்தின் வெளியக கணக்காய்வாளர்களான M/S Ernst & Young 2023 ஜூன் 30ஆம் திகதியன்று முடிவடைந்த காலப்பகுதிக்கான கணக்காய்வினை பூர்த்தி செய்துள்ளனர். அவர்கள் வங்கியினதும் குழுமத்தினதும் 2023 ஜூன் 30ஆம் திகதியன்று முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதி கூற்றுக்கள் சரியாகவும் நியாயமானதுமாக சமர்பிக்கப்பட்டுள்ளதாக சான்றளித்துள்ளனர்

7. நிதிச் சொத்துகள் மீதான பெறுமதி குறைப்பு

கடன் மற்றும் முற்பணம்
2023 ஜூன் 30 ஆம் திகதியன்று, தனித்தனியாக முக்கியத்துவம் வாய்ந்த வாடிக்கையாளர்களின் விரிவான மதிப்பீட்டை வங்கி மேற்கொண்டது. தனித்தனியாக குறிப்பிடத்தக்க வாடிக்கையாளர்களின் பெறுமான குறைபாட்டு கணக்கீட்டில் பயன்படுத்தப்படும் முக்கிய அனுமானங்கள் அவ்வவ் வாடிக்கையாளரின் தற்போதைய நிதி நிலைமையை கருத்திற் கொண்டு மாற்றம் செய்யப்பட்டதுடன், தேவையான பெறுமான குறைப்பு ஏற்பாடுகளை வங்கி தனது நிதிநிலைமை கூற்றுகளில் அங்கீகரித்திருந்தது.

சம்பத் வங்கி 2023 ஜூன் 30 ஆம் திகதி வரையிலான கூட்டுக் பெறுமான குறைபாட்டை கணக்கிடும் போது 31 டிசம்பர் 2022இல் பயன்படுத்திய அதே அனுமானங்களைத் தொடர்ந்தது தற்போதைய காலப்பகுதியிலும் பயன்படுத்தியது. அதன்படி, கடந்த ஆண்டு இறுதியில் நிர்வாக மேலடுக்குகள் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பெறுமான குறைப்புகள் சார்பாக எந்த விதமான மாற்றங்களும் செய்யாமால் அவற்றை இந்த நிதி அறிக்கை சமர்ப்பிட்ட காலப்பகுதியிலும் வங்கி பயன்படுத்தியது.

ஏனைய நிதிச் சொத்துகள்
உள்நாட்டு கடன் உகப்பாக்கம் திட்டத்தின் கீழ் SLDB களின் மீள் கொடுப்பனவுகளுக்கு பதிலாக LKR பத்திரங்களை ஏற்றுக்கொள்ள வங்கி தேர்வு செய்தது. இதன்படி, SLDB களுக்கு எதிராக அங்கீகரித்திருந்த பெருமான குறைப்பாடு ஏற்பாடுகளை வங்கி முழுமையாக அகற்றியதோடு, SLISB களில் வங்கி செய்துள்ள முதலீடுகளை மீள பெற்றுக்கொள்வது சார்பாக நிகழும் சந்தேக தன்மையின் காரணமாக வங்கி அச்சாதனங்களுக்கு எதிரான பெருமான குறைபாட்டு ஒதுக்கீட்டை அதிகரித்தது. மேற்கூறியவற்றின் ஒருங்கிணைந்த தாக்கத்தின் விளைவாக, ஜூன் 30, 2023 இல் முடிவடைந்த காலப்பகுதியில் ஏனைய நிதிச்சொத்துக்களுக்கான பெருமான குறைபாடுகள் நிகர மீள் திருப்பம் ஏற்பட்டது.

8. அறிக்கையிடல் காலத்திற்குப் பிறகு நிகழ்வுகள்
கீழே உள்ள குறிப்பு 8.1இல் வெளிப்படுத்தப்பட்ட உருப்படிகளைத் தவிர, நிதிநிலை அறிக்கைகளில் சரிசெய்தல் அல்லது விசேட குறிப்பொன்றைத் தருவிப்பதைத் தூண்டும் முக்கிய நிகழ்வுகள் எதுவும் அறிக்கையிடல் திகதிக்குப் பிறகு நடைபெறவில்லை.

8.1. புதிய முகாமை பணிப்பாளரின் நியமனம்.
2023 ஆம் ஆண்டு ஜூன் 30ஆம் திகதி தனது பதவிக் காலத்தை முடித்தவுடன் திரு. நந்தபெர்னான்டோ ஓய்வு பெற்றதன் விளைவாக, ஜூலை 01, 2023 முதல் வங்கியின் நிர்வாக இயக்குநராக திருமதி அயோத்யா இத்தவெல் பெரேரா நியமிக்கப்பட்டார்.

9. மூலதனச் சந்தை வழியாக திரட்டப்பட்ட நிதிகளின் பயன்பாடு
முந்தைய/நடப்பு ஆண்டுகளில் மூலதனச் சந்தைகள் வழியாக திரட்டப்பட்ட நிதி கூறப்பட்ட நோக்கங்களுக்காக முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது.

10. 2022 இல் கடன் இலாகாவை மறுவகைபடுத்தல்
2022இல் பேரினவாத பொருளாதார நிலைமைகளில் முன்னெப்போதும் இல்லாத மாற்றங்களை கருத்திற்கொண்டு, இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனம் கடன் இலாகாவை மறுவகைப்படுத்துவதற்கான மாற்று முறைமைகள் சார்பான அறிக்கையை (SoAT) வெளியிட்டது. இதனூடாக நிறுவனங்களுக்கு ஒரு முறை மட்டும் பயன்படுத்தக்கூடிய சாதாரண பெறுமதியில் (FVOCI) மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்களை கடன் தீர்ப்பனவு செலவுகளில் மதிப்பிடக்கூடிய நிதிச்சொத்துக்களாக மறுவகைப்படுத்துவதற்கான விருப்பத்தேர்வினை வழங்கியிருந்தது. இந்த SoAT இணை பயன்படுத்துவதினூடாக வங்கி தனது ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமான கூற்றின் கீழ் வகைப்படுத்தியிருந்த திறைச்சேரி முறிகளுக்கான இலாகாவை 2022 ஏப்ரல் 1 ஆம் திகதியன்று கடன் தீர்ப்பு செலவுகளில் காட்டப்பட்டுள்ள நிதிச் சொத்துக்களாக மறுவகைப்படுத்தியது.

2023 ஜூன் 30ஆம் திகதியன்று, ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமான கூற்றில் சாதாரண பெறுமதியில் மதிப்பீடு செய்து வந்து பின்பு கடன் தீர்பனவு செலவுகளில் மீள்வகைப்படுத்தப்பட்ட திறைச்சேரி முறிகளின் பெறுமதியானது ரூ 25.7 பில்லியனாகும். வங்கி தொடர்ந்தும் இந்நிதிச்சொத்துக்களை ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்றினூடாக சாதாரண பெறுமதியில் மதிப்பீடு செய்து வரும் பட்சத்தில், இந் நிதிச்சொத்துக்களுக்கான சாதாரண பெறுமதி மற்றும் மொத்த சந்தை இழப்பானது முறையை ரூ. 24.1 பில்லியன் மற்றும் ரூ. 1.6 பில்லியனாக இருந்திருக்கும்.

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

பிட்ச் தரப்படுத்தல் : 'A (lka)/RWN'

www.sampath.lk

# சம்பத் வங்கி பீ.எல்.சீ.

## 2023 ஜூன் 30இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான இடைக்கால நிதிக்கூற்றுக்கள்

(கொழும்பு பங்குச் சந்தையின் சட்டம் 7.4 பிரகாரம்)

கம்பனி பதிவு இலக்கம்: PQ144

## பங்கு மூலதன மாற்றங்களின் கூற்று

### வங்கி

| 2022 ஜூன் 30இல் முடிவடைந்த 6 மாதங்களுக்கானது (கணக்காய்வு செய்யப்பட்டது) | கூறப்பட்ட மூலதனம் | நியதிச்சட்ட ஒதுக்க நிதியம் | ஏனைய ஒதுக்கங்கள் | | | பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் | மொத்த பங்கு மூலதனம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | FVOCI ஒதுக்கம் | பொது ஒதுக்கங்கள் | | |
| | ரு 000 | ரு 000 | ரு 000 | ரு 000 | ரு 000 | ரு 000 | ரு 000 |
| **2022 ஜனவரி 1ம் திகதியன்று மீதி** | 47,622,493 | 5,075,000 | 3,159,910 | 1,618,637 | 52,468,905 | 8,806,714 | 118,751,659 |
| 2022 ஆம் ஆண்டின் 14ம் இல. மிகைக்கட்டண வரிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட மிகைக்கட்டண வரியை சீர்செய்தல் | - | - | - | - | - | (2,670,566) | (2,670,566) |
| **2022 ஜனவரி 1ம் திகதியன்று சீர்செய்யப்பட்ட மீதி** | 47,622,493 | 5,075,000 | 3,159,910 | 1,618,637 | 52,468,905 | 6,136,148 | 116,081,093 |
| **காலப்பகுதிக்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | | | | | | | |
| காலப்பகுதிக்கான இலாபம் | - | - | - | - | - | 7,085,437 | 7,085,437 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | - | - | - | 1,564,568 | - | - | 1,564,568 |
| **காலப்பகுதிக்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | - | - | - | 1,564,568 | - | 7,085,437 | 8,650,005 |
| **நேரடியாக பங்கு மூலதனத்தில் அங்கீகரிக்கப்பட்ட பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் பங்குதாரர்களிடமிருந்து கிடைத்த பங்களிப்புகள் மற்றும் பங்குதாரர்களுக்கான வழங்கல்கள்** | | | | | | | |
| 2021 இறுதி பங்கு இலாபம் : காசு | - | - | - | - | - | (4,863,589) | (4,863,589) |
| உரிமைக்கோரப்படாத பங்குலாபங்களின் சீராக்கல் | - | - | - | - | 21,274 | - | 21,274 |
| **பங்குதாரர்களிடமிருந்து கிடைத்த மொத்த பங்களிப்புகள் மற்றும் பங்குதாரர்களுக்கான மொத்த வழங்கல்கள்** | - | - | - | - | 21,274 | (4,863,589) | (4,842,315) |
| **2022 ஜூன் 30ம் திகதியன்று மீதி** | 47,622,493 | 5,075,000 | 3,159,910 | 3,183,205 | 52,490,179 | 8,357,996 | 119,888,783 |

| 2023 ஜூன் 30இல் முடிவடைந்த 6 மாதங்களுக்கானது (கணக்காய்வு செய்யப்பட்டது) | கூறப்பட்ட மூலதனம் | நியதிச்சட்ட ஒதுக்க நிதியம் | ஏனைய ஒதுக்கங்கள் | | | பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் | மொத்த பங்கு மூலதனம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | FVOCI ஒதுக்கம் | பொது ஒதுக்கங்கள் | | |
| | ரு 000 | ரு 000 | ரு 000 | ரு 000 | ரு 000 | ரு 000 | ரு 000 |
| **2023 ஜனவரி 1ம் திகதியன்று மீதி** | 47,622,493 | 5,755,000 | 3,594,984 | 2,248,650 | 58,989,347 | 8,169,471 | 126,379,945 |
| **காலப்பகுதிக்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | | | | | | | |
| காலப்பகுதிக்கான இலாபம் | - | - | - | - | - | 7,662,551 | 7,662,551 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | - | - | - | 2,003,915 | - | - | 2,003,915 |
| **காலப்பகுதிக்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | - | - | - | 2,003,915 | - | 7,662,551 | 9,666,466 |
| **நேரடியாக பங்கு மூலதனத்தில் அங்கீகரிக்கப்பட்ட பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் பங்குதாரர்களிடமிருந்து கிடைத்த பங்களிப்புகள் மற்றும் பங்குதாரர்களுக்கான வழங்கல்கள்** | | | | | | | |
| 2022 இறுதி பங்கு இலாபம் : பங்கிலான | 1,118,626 | - | - | - | - | (1,316,031) | (197,405) |
| 2022 இறுதி பங்கு இலாபம் : காசு | - | - | - | - | - | (3,948,089) | (3,948,089) |
| உரிமைக்கோரப்படாத பங்குலாபங்களின் சீராக்கல் | - | - | - | - | 13,721 | - | 13,721 |
| **பங்குதாரர்களிடமிருந்து கிடைத்த மொத்த பங்களிப்புகள் மற்றும் பங்குதாரர்களுக்கான மொத்த வழங்கல்கள்** | 1,118,626 | - | - | - | 13,721 | (5,264,120) | (4,131,773) |
| **2023 ஜூன் 30ம் திகதியன்று மீதி** | 48,741,119 | 5,755,000 | 3,594,984 | 4,252,565 | 59,003,068 | 10,567,902 | 131,914,638 |

### குழுமம்

| 2022 ஜூன் 30இல் முடிவடைந்த 6 மாதங்களுக்கானது | கூறப்பட்ட மூலதனம் | நியதிச்சட்ட ஒதுக்க நிதியம் | ஏனைய ஒதுக்கங்கள் | | | பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் | வங்கியின் பங்குதாரர்களுக்கான மொத்த பங்கு மூலதனம் | கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுடைய பங்கு | மொத்த பங்கு மூலதனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | FVOCI ஒதுக்கம் | பொது ஒதுக்கங்கள் | | | | |
| | ரு 000 | ரு 000 | ரு 000 | ரு 000 | ரு 000 | ரு 000 | ரு 000 | ரு 000 | ரு 000 |
| **2022 ஜனவரி 1ம் திகதியன்று மீதி** | 47,622,493 | 5,315,000 | 6,293,636 | 1,618,637 | 52,468,905 | 13,866,847 | 127,185,518 | - | 127,185,518 |
| 2022 ஆம் ஆண்டின் 14ம் இல. மிகைக்கட்டண வரிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட மிகைக்கட்டண வரியை சீர்செய்தல் | - | - | - | - | - | (3,232,508) | (3,232,508) | - | (3,232,508) |
| **2022 ஜனவரி 1ம் திகதியன்று சீர்செய்யப்பட்ட மீதி** | 47,622,493 | 5,315,000 | 6,293,636 | 1,618,637 | 52,468,905 | 10,634,339 | 123,953,010 | - | 123,953,010 |
| **காலப்பகுதிக்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | | | | | | | | | |
| காலப்பகுதிக்கான இலாபம் | - | - | - | - | - | 7,369,219 | 7,369,219 | - | 7,369,219 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | - | - | - | 1,564,568 | - | - | 1,564,568 | - | 1,564,568 |
| **காலப்பகுதிக்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | - | - | - | 1,564,568 | - | 7,369,219 | 8,933,787 | - | 8,933,787 |
| **நேரடியாக பங்கு மூலதனத்தில் அங்கீகரிக்கப்பட்ட பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் பங்குதாரர்களிடமிருந்து கிடைத்த பங்களிப்புகள் மற்றும் பங்குதாரர்களுக்கான வழங்கல்கள்** | | | | | | | | | |
| 2021 இறுதி பங்கு இலாபம் : காசு | - | - | - | - | - | (4,863,589) | (4,863,589) | - | (4,863,589) |
| உரிமைக்கோரப்படாத பங்குலாபங்களின் சீராக்கல் | - | - | - | - | 21,274 | - | 21,274 | - | 21,274 |
| **பங்குதாரர்களிடமிருந்து கிடைத்த மொத்த பங்களிப்புகள் மற்றும் பங்குதாரர்களுக்கான மொத்த வழங்கல்கள்** | - | - | - | - | 21,274 | (4,863,589) | (4,842,315) | - | (4,842,315) |
| **2022 ஜூன் 30ம் திகதியன்று மீதி** | 47,622,493 | 5,315,000 | 6,293,636 | 3,183,205 | 52,490,179 | 13,139,969 | 128,044,482 | - | 128,044,482 |

| 2023 ஜூன் 30இல் முடிவடைந்த 6 மாதங்களுக்கானது | கூறப்பட்ட மூலதனம் | நியதிச்சட்ட ஒதுக்க நிதியம் | ஏனைய ஒதுக்கங்கள் | | | பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் | வங்கியின் பங்குதாரர்களுக்கான மொத்த பங்கு மூலதனம் | கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுடைய பங்கு | மொத்த பங்கு மூலதனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | FVOCI ஒதுக்கம் | பொது ஒதுக்கங்கள் | | | | |
| | ரு 000 | ரு 000 | ரு 000 | ரு 000 | ரு 000 | ரு 000 | ரு 000 | ரு 000 | ரு 000 |
| **2023 ஜனவரி 1ம் திகதியன்று மீதி** | 47,622,493 | 6,033,000 | 7,092,922 | 2,248,650 | 58,989,347 | 13,564,655 | 135,551,067 | - | 135,551,067 |
| **காலப்பகுதிக்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | | | | | | | | | |
| காலப்பகுதிக்கான இலாபம் | - | - | - | - | - | 7,637,951 | 7,637,951 | - | 7,637,951 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | - | - | - | 2,003,915 | - | - | 2,003,915 | - | 2,003,915 |
| **காலப்பகுதிக்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | - | - | - | 2,003,915 | - | 7,637,951 | 9,641,866 | - | 9,641,866 |
| **நேரடியாக பங்கு மூலதனத்தில் அங்கீகரிக்கப்பட்ட பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் பங்குதாரர்களிடமிருந்து கிடைத்த பங்களிப்புகள் மற்றும் பங்குதாரர்களுக்கான வழங்கல்கள்** | | | | | | | | | |
| 2022 இறுதி பங்கு இலாபம் : பங்கிலான | 1,118,626 | - | - | - | - | (1,316,031) | (197,405) | - | (197,405) |
| 2022 இறுதி பங்கு இலாபம் : காசு | - | - | - | - | - | (3,948,089) | (3,948,089) | - | (3,948,089) |
| உரிமைக்கோரப்படாத பங்குலாபங்களின் சீராக்கல் | - | - | - | - | 13,721 | - | 13,721 | - | 13,721 |
| **பங்குதாரர்களிடமிருந்து கிடைத்த மொத்த பங்களிப்புகள் மற்றும் பங்குதாரர்களுக்கான மொத்த வழங்கல்கள்** | 1,118,626 | - | - | - | 13,721 | (5,264,120) | (4,131,773) | - | (4,131,773) |
| **2023 ஜூன் 30ம் திகதியன்று மீதி** | 48,741,119 | 6,033,000 | 7,092,922 | 4,252,565 | 59,003,068 | 15,938,486 | 141,061,160 | - | 141,061,160 |

## காசுப்பாய்ச்சல் கூற்று

| ஜூன் 30இல் முடிவடைந்த 6 மாதங்களுக்கானது | வங்கி 2023 (கணக்காய்வு செய்யப்பட்டது) ரு 000 | வங்கி 2022 (கணக்காய்வு செய்யப்பட்டது) ரு 000 | குழுமம் 2023 ரு 000 | குழுமம் 2022 ரு 000 |
|---|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்** | | | | |
| வட்டிப் பெறுகைகள் | 95,540,440 | 54,164,357 | 100,408,534 | 57,713,521 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | (55,357,239) | (29,634,233) | (57,814,889) | (31,865,614) |
| தேறிய தரகுப் பெறுகைகள் | 9,760,847 | 8,576,696 | 10,072,104 | 9,000,346 |
| ஊழியர்களுக்கு செலுத்திய கொடுப்பனவு | (6,953,072) | (6,367,487) | (7,679,057) | (7,065,085) |
| நிதிச் சேவைகள் மீதான வரிகள் | (3,715,930) | (1,942,376) | (3,896,053) | (2,225,728) |
| ஏனைய தொழிற்பாடுகளிலிருந்தான பெறுகைகள் | 567,493 | 569,033 | 928,532 | 1,184,012 |
| ஏனைய தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்கான காசு கொடுப்பனவுகள் | (7,583,842) | (5,941,245) | (7,683,314) | (6,440,316) |
| **தொழிற்பாட்டு சொத்துக்கள், பொறுப்புக்களின் மாற்றத்திற்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்** | **32,258,697** | **19,424,745** | **34,335,857** | **20,301,136** |
| **தொழிற்பாட்டு சொத்துக்களின் (அதிகரிப்பு)/குறைவு** | | | | |
| இலங்கை மத்திய வங்கியிலுள்ள மீதிகள் | (2,293,290) | 5,241,280 | (2,293,290) | 5,241,280 |
| கடன் தீர்பனவு செலவுகளில் காட்டப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள் -கடன் மற்றும் முற்பணங்கள் | 2,970,131 | (41,343,145) | 1,642,160 | (40,141,354) |
| ஏனைய சொத்துக்கள் | (4,783,864) | (8,584,858) | (5,541,968) | (8,334,795) |
| | **(4,107,023)** | **(44,686,723)** | **(6,193,098)** | **(43,234,869)** |
| **தொழிற்பாட்டு பொறுப்புகளின் அதிகரிப்பு/(குறைவு)** | | | | |
| வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை | (3,130,904) | (8,981,474) | (2,585,871) | (10,569,864) |
| மீள் கொள்வனவு ஒப்பந்தங்கள் | 47,583,164 | 68,235,363 | 47,583,164 | 67,433,853 |
| கடன் தீர்ப்பனவு செலவுகளில் காட்டப்பட்டுள்ள நிதிப் பொறுப்புக்கள் - வைப்பாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | 64,626,406 | (55,284,432) | 67,090,512 | (53,538,141) |
| கடன் தீர்ப்பனவு செலவுகளில் காட்டப்பட்டுள்ள நிதிப் பொறுப்புக்கள் - ஏனைய கடன் கொடுத்தவர்களுக்கு செலுத்த வேண்டியவை | (1,767,500) | (3,143,490) | (1,767,500) | (3,143,490) |
| ஏனைய பொறுப்புக்கள் | 6,837,980 | 4,226,667 | 7,587,697 | 4,313,588 |
| | **114,149,146** | **5,052,634** | **117,908,002** | **4,495,946** |
| **வருமான வரிக்கு முன்னரான தொழிற்பாட்டு மூலம் பெற்ற தேறிய காசுப்பாய்ச்சல்கள்** | **142,300,820** | **(20,209,344)** | **146,050,761** | **(18,437,787)** |
| செலுத்திய வருமான வரி | (4,616,900) | (4,547,956) | (4,988,291) | (5,399,015) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் பெற்ற /(செலுத்திய) காசுப்பாய்சல்கள்** | **137,683,920** | **(24,757,300)** | **141,062,470** | **(23,836,802)** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | (665,441) | (224,832) | (1,006,165) | (955,249) |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை விற்பனை செய்வதன் மூலம் பெற்ற வருவாய் | - | 1,874 | 1,844 | 3,652 |
| எதிர் மீள் கொள்வனவு ஒப்பந்தங்கள் மூலம் பெற்ற தேறிய காசுப்பாய்சல்கள் | 5,673,448 | 2,750,000 | 5,449,548 | 4,699,911 |
| நிதிச்சொத்துக்களின் மூலமான தேறிய காசுப்பாய்ச்சல்- FVPL | (3,660,112) | (1,090,082) | (3,625,235) | (1,090,082) |
| கடன் தீர்ப்பனவு செலவுகளில் காட்டப்பட்டுள்ள கடன் சாதனங்கள் மூலமான தேறிய காசுப்பாய்ச்சல் | (50,902,727) | 45,349,260 | (52,902,694) | 41,999,009 |
| நிதிச்சொத்துக்களின் மூலமான தேறிய காசுப்பாய்ச்சல்- FVOCI | (54,257,358) | 4,014,911 | (54,257,358) | 4,014,911 |
| அருவச் சொத்துக்களின் கொள்வனவு | (200,585) | (184,293) | (208,994) | (195,802) |
| நிதிச்சொத்துக்கள் மூலமாக கிடைத்த பங்கு இலாபம் | - | 713 | - | 713 |
| **முதலீட்டு நடவடிக்கைகளுக்கு பெற்ற/(செலுத்திய) தேறிய காசுப்பாய்ச்சல்** | **(104,012,775)** | **50,617,551** | **(106,549,054)** | **48,477,063** |
| **நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | | |
| தொகுதி கடன் பத்திர வழங்கலின் மூலம் பெற்ற காசு | 10,000,000 | - | 10,000,000 | - |
| தொகுதி கடன் பத்திரங்களை மீட்பதற்கு செலுத்திய காசு | (7,500,000) | - | (7,500,000) | - |
| தேறிய குத்தகைகடன் அடமானங்களின் மீள்கொடுப்பனவுகள் | - | - | (1,012,012) | 1,000,000 |
| செலுத்திய பங்கு இலாபம் | (4,145,494) | (4,863,589) | (4,145,494) | (4,863,589) |
| குத்தகை பொறுப்புக்களின் முதல் சார்பான மீள்கொடுப்பனவுகள் | (804,108) | (586,354) | (473,132) | (337,904) |
| **நிதியியல் நடவடிக்கைகளிலான செலுத்திய தேறிய காசுப்பாய்ச்சல்** | **(2,449,602)** | **(5,449,943)** | **(3,130,638)** | **(4,201,493)** |
| **காலப்பகுதிக்கான தேறிய காசுப்பாய்ச்சல்** | **31,221,543** | **20,410,308** | **31,382,778** | **20,438,768** |
| தேறிய அந்நிய செலாவணி வேறுபாடு | (10,073,563) | 3,784,627 | (10,073,563) | 3,784,627 |
| **ஆண்டின் ஆரம்பத்திலிருந்த காசு மற்றும் காசுக்குச் சமமானவை** | **90,071,931** | **25,155,288** | **89,862,724** | **25,299,191** |
| **காலப்பகுதியின் இறுதியிலிருந்த காசு மற்றும் காசுக்குச் சமமானவை** | **111,219,911** | **49,350,223** | **111,171,939** | **49,522,586** |

## சம்பத் வங்கி பீஎல்சீ (சாதாரண பங்குகள்) 2023 ஜூன் 30இல் உள்ளவாறு முதல் நிலை 20 பங்குதாரர்கள்

| இல. | பங்குதாரர்களின் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | % உரிமை |
|---|---|---|---|
| 1 | வெலிபல் வன் பிஎல்சி | 175,352,762 | 14.95 |
| 2 | அயன்கா ஹோல்டிங்ஸ் தனியார் நிறுவனம் | 116,948,834 | 9.97 |
| 3 | ஊழியர் சேமலாப நிதி | 116,948,697 | 9.97 |
| 4 | பேண்டம் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (தனியார்) நிறுவனம் | 104,795,215 | 8.94 |
| 5 | திரு. வை.எஸ்.எச்.ஐ. சில்வா* | 96,121,110 | 8.20 |
| 6 | வரையறுக்கப்பட்ட ரோஸ்வுட் (தனியார்) நிறுவனம் - (கணக்கு இல: 1) | 52,678,348 | 4.49 |
| 7 | வரையறுக்கப்பட்ட அக்பார் ப்ரதர்ஸ் (தனியார்) நிறுவனம் (கணக்கு இல 1) | 28,134,771 | 2.40 |
| 8 | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் சபை | 22,980,577 | 1.96 |
| 9 | செந்தில்வர்ல் ஹோல்டிங்ஸ் (தனியார்) நிறுவனம் | 18,977,138 | 1.62 |
| 10 | சிட்டி வங்கி நிவ்யோக் எஸ்/ஏ நோர்ஜஸ் வங்கி கணக்கு இல 2 | 12,479,931 | 1.06 |
| 11 | சம்பத் வங்கி பிஎல்சி (கணக்கு இல 4) (சம்பத் வங்கி ஓய்வூதிய நிதியம்) | 11,832,461 | 1.01 |
| 12 | திருமதி. பீ டி ஏ எஸ் பேருவலகே | 11,105,469 | 0.95 |
| 13 | டாக்டர் டி செந்தில்வர்ல் | 10,988,814 | 0.94 |
| 14 | பிபிஎச் டன்ரா சஸ்டெய்னபல் ப்ரன்டியர் பண்ட் | 9,837,629 | 0.84 |
| 15 | எஸ்.எஸ்.பீ.ீ - ஏ.எல் மெவர் கொமர்ஷல் இன்வெஸ்ட்மெட்ஸ் எல்.எல்.சீ | 6,877,041 | 0.59 |
| 16 | மேக்னா வெல்த் (தனியார்) நிறுவனம் | 6,561,404 | 0.56 |
| 17 | ஹட்டன் நேஷனல் வங்கி பிஎல்சி - கெப்பிடல் அலியான்ஸ் குவென்டிடேடிவ் இக்விட்டி பண்ட் | 5,115,568 | 0.44 |
| 18 | வரையறுக்கப்பட்ட போனிக்ஸ் வென்சர்ஸ் (தனியார்) நிறுவனம் | 5,031,512 | 0.43 |
| 19 | மெலன் வங்கி என் ஏ - யுபீஎஸ் குருப் டிரஸ்ட் | 4,770,506 | 0.43 |
| 20 | திரு பி ஏ மஹிபால | 4,756,704 | 0.41 |
| | | 822,294,491 | 70.14 |
| | பணிப்பாளர்கள் வைத்துள்ள பங்குகள் | 2,049,624 | 0.16 |
| | ஏனைய பங்குதாரர்களிடமுள்ள மீதி பங்குகள் | 348,356,645 | 29.70 |
| | மொத்தம் | **1,172,700,760** | **100.00** |

* வரையறுக்கப்பட்ட இந்திரா டிரேடர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் முகாமைப் பணிப்பாளரான திரு. ருஷங்க சில்வா வங்கியின் நிர்வாகி அல்லாத சுயாதீனமற்ற பணிப்பாளராக செப்டெம்பர் 1ம் திகதி 2017 முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார். அதன்படி இந்திரா டிரேடர்ஸ் நிறுவனத்தின் பிரதான பங்குதாரரான திரு. வை.எஸ்.எச்.ஐ. சில்வா வங்கியில் வைத்துள்ள பங்கு உரிமையானது பொது மக்களிடம் உள்ள பங்குகளின் விகிதத்தை கணக்கிடும் பொழுது விலக்கப்பட்டுள்ளது.

| திகதியன்று | 30 ஜூன் 2023 |
|---|---|
| பொது பங்குதாரர்களின் எண்ணிக்கை | 29,943 |
| % பொது மக்களிடம் உள்ள பங்குகள் | 90.62% |
| தளம்பல் சீராக்கப்பட்ட சந்தை மூலதனம் | ரு. 59 பில்லியன |

பங்கு பட்டியலில் விதிகள் பிரிவு 7.13.1 (அ) இன் தெரிவு 1 இற்கு இசைவாக குறைந்தபட்ச பொது பங்குரிமை விகித தேவைக்கு வங்கி இணங்குகிறது

## சம்பத் வங்கி பிஎல்சியில் பணிப்பாளர்கள் வைத்துள்ள பங்குகள்

| இல. | இயக்குநர்களின் பெயர் | வைத்திருக்கும் பங்குகளின் தொகை 30.06.2023 திகதியன்று | வைத்திருக்கும் பங்குகளின் தொகை 31.12.2022 திகதியன்று |
|---|---|---|---|
| 1 | திரு. ஹர்ஷ அமரசேக்கர | - | - |
| 2 | திரு. ருஷங்க சில்வா | - | - |
| 3 | திரு. டி. கே. டீ. சில்வா விஜயரட்ண | - | - |
| 4 | திருமதி. ஏ. நாணயக்கார | - | - |
| 5 | கலாநிதி ஜே. டீ. வீ. எஸ். வீரவரண | - | - |
| 6 | திரு. வஜிர குலதிலக்க | - | - |
| 7 | செல்வி ஆர் கே ஜயவர்தன | - | - |
| 8 | திரு. வினோத் ஹைத்ராமணி | 288,087 | 281,129 |
| 9 | திரு. ஹிரான் கப்ரால் | - | - |
| 10 | திரு. எம். என். ஆர். பெர்னாண்டோ (முகாமைப் பணிப்பாளர்) (2023 ஜூன் 30ம் திகதி முதல் அமுலாகுமாறு ஓய்வுபெற்றார்) | 1,761,537 | 1,718,988 |
| 11 | திரு. டி ஏ டி வாஸ் குணசேகர (பிரதம நிதியியல் அதிகாரி) | - | - |

## தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாற்றுகை குறிகாட்டிகள் (நியதிச்சட்ட அறிக்கையிடலுக்கு அமைவாக)

| விபரம் | வங்கி 30.06.2023 திகதியன்று | வங்கி 31.12.2022 திகதியன்று | குழுமம் 30.06.2023 திகதியன்று | குழுமம் 31.12.2022 திகதியன்று |
|---|---|---|---|---|
| **ஒழுங்குபடுத்துதல் மூலதன போதுமை (ரு. 000)** | | | | |
| பொது மூலதனம் அடுக்கு I | 105,245,793 | 95,533,144 | 113,977,456 | 102,822,613 |
| மொத்த அடுக்கு I மூலதனம் | 105,245,793 | 95,533,144 | 113,977,456 | 102,822,613 |
| மொத்த மூலதனம் | 131,511,284 | 114,351,589 | 140,695,529 | 122,096,525 |
| **ஒழுங்குப்படுத்தல் மூலதனப்போதுமை விகிதம் (%)** | | | | |
| பொது மூலதனம் அடுக்கு I விகிதம் (குறைந்தபட்ச தேவைப்பாடு - 7.0%) | 13.89 | 11.92 | 14.24 | 12.18 |
| மொத்த அடுக்கு I மூலதனம் விகிதம் (குறைந்தபட்ச தேவைப்பாடு - 8.5%) | 13.89 | 11.92 | 14.24 | 12.18 |
| மொத்த மூலதன விகிதம் (குறைந்தபட்ச தேவைப்பாடு - 12.5%) | 17.36 | 14.27 | 17.58 | 14.46 |
| **பரிவர்த்தனை விகிதம் %** (குறைந்தபட்ச தேவைப்பாடு - 3%) | 6.76 | 7.00 | 7.10 | 7.29 |

| | வங்கி 30.06.2023 திகதியன்று | வங்கி 31.12.2022 திகதியன்று |
|---|---|---|
| **சொத்துக்களின் தரம் (கடன் பட்டியலின் தரம்)** | | |
| நிலை 3இல் வகைப்படுத்தப்பட்டுள்ள கடன்களுக்கான விகிதம் % | 5.49 | 4.35 |
| நிலை 3இற்கான பெறுமானக் குறைப்புடன் தொடர்புடைய கடன்களின் விகிதம் (%) | 54.20 | 53.84 |
| **இலாபத் தன்மை** | | |
| வட்டி மிகை, % | 5.19 | 5.66 |
| சொத்துக்களில் இருந்தான வருவாய் (வரிக்கு முன்), % | 1.99 | 1.16 |
| பங்கு மூலதனத்தில் இருந்தான வருவாய் (வரிக்கு பின்), % | 12.10 | 10.95 |
| **ஒழுங்குமுறைப்படுத்தல் திரவத்தன்மை** | | |
| நியதிச்சட்ட திரவச் சொத்துக்கள் (ரு. 000) | 424,028,836 | 326,607,580 |
| நியதிச்சட்ட திரவச் சொத்துக்களின் விகிதம் (குறைந்தபட்ச தேவைப்பாடு- 20%) | 35.56 | 27.85 |
| உயர்தர திரவச் சொத்துக்களின் மொத்த இருப்பு (ரு. 000) | 343,734,620 | 226,064,957 |
| திரவத்தன்மை போதுமை விகிதம் (%) - இலங்கை ரூபா (குறைந்தபட்ச தேவைப்பாடு: 2023 - 100%, 2022 - 90%) | 227.94 | 200.78 |
| திரவத்தன்மை போதுமை விகிதம் (%) - அனைத்து நாணய அலகிலும் (குறைந்தபட்ச தேவைப்பாடு: 2023 - 100%, 2022 - 90%) | 228.79 | 146.53 |
| நிகர நிலையான நிதி விகிதம் (%) (குறைந்தபட்ச தேவைப்பாடு: 2023 - 100%, 2022 - 90%) | 165.16 | 157.10 |

## தொகுதிக்கடன் தகவல்கள்

**(அ) சந்தைப் பெறுமதி**

| தொகுதிக்கடன்கள் - 2019/2024 | கூடியது (ரு) 2023 | கூடியது (ரு) 2022 | குறைந்தது (ரு) 2023 | குறைந்தது (ரு) 2022 | காலாண்டின் இறுதியில் (ரு) 2023 | காலாண்டின் இறுதியில் (ரு) 2022 |
|---|---|---|---|---|---|---|
| நிலையானது - 13.90% | 100.00 | வி/வி | 100.00 | வி/வி | 100.00 | வி/வி |

| தொகுதிக்கடன்கள் - 2021/2028 | கூடியது (ரு) 2023 | கூடியது (ரு) 2022 | குறைந்தது (ரு) 2023 | குறைந்தது (ரு) 2022 | காலாண்டின் இறுதியில் (ரு) 2023 | காலாண்டின் இறுதியில் (ரு) 2022 |
|---|---|---|---|---|---|---|
| நிலையானது - 9.00% | வி/வி | வி/வி | வி/வி | வி/வி | வி/வி | வி/வி |

| தொகுதிக்கடன்கள் - 2023/2028 | கூடியது (ரு) 2023 | கூடியது (ரு) 2022 | குறைந்தது (ரு) 2023 | குறைந்தது (ரு) 2022 | காலாண்டின் இறுதியில் (ரு) 2023 | காலாண்டின் இறுதியில் (ரு) 2022 |
|---|---|---|---|---|---|---|
| நிலையானது - 28.00% | 100.00 | ஏ/த | 99.15 | ஏ/த | 99.15 | ஏ/த |
| தளம்பல் வீதம் | வி/வி | ஏ/த | வி/வி | ஏ/த | வி/வி | ஏ/த |

வி/வி - விற்கப்படவில்லை
ஏ/த - ஏற்புடையதன்று

**(ஆ) வட்டி வீதங்கள்**

| தொகுதிக்கடன்கள் - 2019/2024 | 2023 கூப்பன் சதவீதம் | 2023 விளைத்திறனான சதவீதம் | 2022 கூப்பன் சதவீதம் | 2022 விளைத்திறனான சதவீதம் |
|---|---|---|---|---|
| நிலையானது - 13.90% | 13.90% | 13.90% | 13.90% | 13.90% |

| தொகுதிக்கடன்கள் - 2021/2028 | 2023 கூப்பன் சதவீதம் | 2023 விளைத்திறனான சதவீதம் | 2022 கூப்பன் சதவீதம் | 2022 விளைத்திறனான சதவீதம் |
|---|---|---|---|---|
| நிலையானது - 9.00% | 9.00% | 9.00% | 9.00% | 9.00% |

| தொகுதிக்கடன்கள் - 2023/2028 | 2023 கூப்பன் சதவீதம் | 2023 விளைத்திறனான சதவீதம் | 2022 கூப்பன் சதவீதம் | 2022 விளைத்திறனான சதவீதம் |
|---|---|---|---|---|
| நிலையானது - 28.00% | 28.00% | 28.00% | ஏ/த | ஏ/த |
| தளம்பல் வீதம் | குறிப்பு 01 | | | |

ஏ/த - ஏற்புடையதன்று

குறிப்பு 01

**தொகுதிக்கடன்கள் - 2023/2028**

தளம்பல் வட்டி விகிதமானது ஒரு வருடத்திற்கான திறைசேரி உண்டியல் வட்டி விகிதத்துடன் 1.5% இனை கூட்டுவதற்கு சமமானதாக இருக்கும் அதே பட்சத்தில் ஆகக்குறைந்த விகிதமாக 20.0% இனையும் உச்சபட்ட வட்டிவிகித எல்லை 31.0% இனையும் கொண்டு வரையறுக்கப்படும்

**(இ) ஒப்பீடு செய்யத்தக்க அரச பிணைகளின் வட்டிச் சதவீதம்**

| | 2023 | 2022 |
|---|---|---|
| 3 மாத திறைசேரி உண்டியல் | 23.00% | 23.85% |
| 6 மாத திறைசேரி உண்டியல் | 19.49% | 24.40% |
| 5 ஆண்டு திறைசேரி பிணை | 22.16% | 21.18% |
| 7 ஆண்டு திறைசேரி பிணை | 20.66% | 20.34% |

**(ஈ) நடைமுறை உழைப்பு மற்றும் முதிர்வின் போது உழைப்பு**

| தொகுதிக்கடன்கள் - 2019/2024 | நிலையானது 13.90% 2023 | நிலையானது 13.90% 2022 |
|---|---|---|
| நடைமுறை உழைப்பு | 13.90% | வி/வி |
| முதிர்வின் போதான உழைப்பு-இறுதி விற்பனையின் போது | 13.53% | வி/வி |

| தொகுதிக்கடன்கள் - 2021/2028 | நிலையானது 9.00% 2023 | நிலையானது 9.00% 2022 |
|---|---|---|
| நடைமுறை உழைப்பு | வி/வி | வி/வி |
| முதிர்வின் போதான உழைப்பு-இறுதி விற்பனையின் போது | வி/வி | வி/வி |

| தொகுதிக்கடன்கள் - 2023/2028 | நிலையானது 28.00% 2023 | நிலையானது 28.00% 2022 | தளம்பல் 2023 | தளம்பல் 2022 |
|---|---|---|---|---|
| நடைமுறை உழைப்பு | 28.24% | ஏ/த | வி/வி | ஏ/த |
| முதிர்வின் போதான உழைப்பு-இறுதி விற்பனையின் போது | 28.07% | ஏ/த | வி/வி | ஏ/த |

வி/வி - விற்கப்படவில்லை
ஏ/த - ஏற்புடையதன்று

குறிப்பு 02

**தொகுதிக்கடன்கள் - 2018/2023**

2018 ஆம் ஆண்டு 7.5 பில்லியன் ரூபாய்க்கு வழங்கப்பட்ட கடன் பத்திரத்தை வங்கி 2023 ஆம் ஆண்டு மார்ச் 20ம் திகதி மீட்டெடுத்துள்ளது.

**(உ) விகிதம் - வங்கி**

| | 30.06.2023 | 31.12.2022 |
|---|---|---|
| கடன் உரிமை விகிதம் (%) | 20.0% | 18.8% |
| வட்டிக் காப்பு (தடவைகள்) | 8.8 | 6.8 |
| திரவச் சொத்து விகிதம் (%) (இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பித்த அறிக்கைக்கு அமைவாக) | 81.2% | 75.1% |

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

பிட்ச் தரப்படுத்தல் : 'A (lka)/RWN'

www.sampath.lk

# நாட்டைவிட்டு ஆசிரியர்கள் வெளியேறியமைக்கு கல்வியமைச்சு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

## இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமாரிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி

ராமு தனராஜா

கடந்த 08 மாத காலப்பகுதியில் 5,000 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் நாட்டை விட்டு வெளியேறியிருக்கிறார்கள். இதேவேளை, தரம் 1 அதிபர்களுக்கும் பற்றாக்குறை நிலவுகின்றது. இது தொடர்பில் கல்வியமைச்சு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா என பசறை நூலக கேட்போர் கூடத்தில் காவத்தையூர் பழனியாண்டி கனகராஜ் எழுதிய 'எண்ணங்களில் வண்ணங்கள்' நூல் வெளியீட்டு விழாவுக்கு விசேட அதிதியாகக் கலந்துகொண்ட கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமாரிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். இதன்போது அவர் பதிலளிக்கையில்,

5,000 ஆசிரியர்கள் என்பதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். நாங்கள் நாடளாவிய ரீதியில் ஒவ்வொரு வலயத்திலும் எத்தனை ஆசிரியர்கள் நாட்டைவிட்டுப் போயிருக்கிறார்கள் என்பவை குறித்த தகவல்களைச் சேகரித்துக்கொண்டிருக்கிறோம். எனவே, என்னைப் பொறுத்தவரை 5,000 என்ற எண்ணிக்கையை நான் பிழையாகவே பார்க்கிறேன்.

இதேவேளை, அதிபர் தரம் 1 இல் பற்றாக்குறை இருப்பதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். அந்த நிலைமை விரைவில் மாறும். ஏனெனில், தரம் 3 அதிபர், தரம் இரண்டு அதிபர்கள் தரம், 1 இலிருந்து வந்திருக்க வேண்டும்.



அதில் ஒரு தாமதம். அந்தவகையில் தரம் 2 அதிபர்களை தரம் 3 அதிபர்களாகத் தரமுயர்த்துவதற்கான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம்.

வெளிநாட்டுக்குச் சென்ற ஆசிரியர்களை மறுபடியும் நாட்டுக்குத் திருப்பியழைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளீர்களா? அல்லது புதிய ஆசிரிய நியமனங்களை வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளீர்களா? - எனக் கேட்டபோது,

இல்லை. அவர்களை மீண்டும் நாட்டுக்கு கொண்டுவரும் நிலைமை இல்லை. அவர்களை மீண்டும் கொண்டு வருவதில் பல்வேறு சிக்கல்கள் உள்ளன. ஏனெனில், அவர்கள் இவ்வாறு வெளிநாடுகளுக்கு சென்றிருப்பது தொழில் புரிவதற்கே. இவ்வாறிருக்கும்போது அவர்கள் தொழில் தருனர்களோடு ஒப்பந்தத்தை மேற்கொண்டிருப்பார்கள். ஆகவே, அவர்கள் ஒப்பந்தம் முடியும் வரை அங்கே இருப்பது தான் பொருத்தமானதாக இருக்கும்.

அவ்வாறிருக்க, அவர்களை மீண்டும் இணைத்துக்கொள்வதில் அவர்களுக்கு தனிப்பட்ட பிரச்சினை இருக்கும். ஆனால்,அவர்களுக்கு மீண்டும் தொழில் வழங்குவதில் எமக்கு எந்தச் சிரமமும் இல்லை.

ஏனெனில், அவர்கள் ஏற்கனவே கல்வியமைச்சின் சேவையில் இருந்தவர்கள். நாங்கள் இப்பொழுது புதிய வேகத்தில் - புதிய ஆசிரிய நியமனங்களை வழங்குவதில் ஈடுபட்டுள்ளோம். அண்மையில் நாங்கள் 8,000 நியமனங்களை வழங்கியுள்ளோம்.

இன்னும் ஓரிரு மாதங்களில் 5,500 பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கவிருக்கிறோம். இதேவேளை, 2,500 உதவி ஆசிரியர்களை உள்வாங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். அந்த வகையில் இன்னும் 8,000 ஆசிரியர்கள் இந்த வருடத்துக்குள் சேவையில் உள்வாங்கப்படுவார்கள் – என்றார்.

# மாணவர்களுக்கு ஆங்கில அறிவையும் தகவல் தொழில்நுட்பத்தையும் விரிவுபடுத்த நடவடிக்கை





இரத்தினபுரி நிருபர்

சப்ரகமுவ மாகாணப் பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கில அறிவையும் தகவல் தொழில்நுட்பத்தையும் மேலும் விரிவுபடுத்துவதற்கு பிரித்தானிய கவுன்சில் மற்றும் பிரேன்டெக்ஸ் நிறுவனங்களின் பங்களிப்பைப் பெற்றுள்ளதாக சப்ரகமுவ மாகாண ஆளுநர் சிரேஷ்ட சட்டத்தரணி நவீன் திசாநாயக்க தெரிவித்தார்.

சப்ரகமுவ பாடசாலைகளில் ஆங்கில மொழி மற்றும் தகவல் தொழில்நுட்பத்தை விரிவுபடுத்தும் நோக்கில் கடந்த வியாழக்கிழமை(24) கேகாலை மாவட்டத்தில் ருவான்வெல்ல ராஜசிங்க மத்திய மகா வித்தியாலயத்திலும் இரத்தினபுரி மாவட்டத்தில் மெனேரிபிட்டிய கல்வி பயிற்சி நிலையத்திலும் இடம்பெற்ற அதிபர்கள் மற்றும் ஆங்கில ஆலோசகர்களுக்கான செயலமர்வுகளில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

சப்ரகமுவ மாகாணத்தில் பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கில அறிவை விரிவுபடுத்துவதற்கு சப்ரகமுவ ஆளுநர் நவீன் திசாநாயக்கவின் தலையீட்டில் அங்குள்ள சுமார் 700 ஆங்கில ஆசிரியர்களுக்கு ஆங்கிலப் பயிற்சியை வழங்குவதற்கு பிரிட்டிஷ் கவுன்சில் ஏற்பாடு செய்துள்ளது.

குறித்த மாகாண பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கில அறிவையும் தகவல் தொழில் நுட்பத்தையும் விரிவுபடுத்துவதற்கு பிரேன்டெக்ஸ் நிறுவனத்தினால் சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள பாடசாலைகளுக்கு தலா 3,50,000 ரூபா பெறுமதியான 246 ஸ்மார்ட் போர்ட்களை வழங்கியுள்ளது.

பிரித்தானிய கவுன்சில் மற்றும் பிரேன்டெக்ஸ் ஆகிய நிறுவனங்களின் பங்களிப்பைப் பெற்று சப்ரகமுவ மாகாணப் பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான முறையான பயிற்சிகளை வழங்க ஆளுநர் திட்டமிட்டிருந்தார்.

அதற்கமைய, மேற்படி பயிற்சிகள் தற்போது சப்ரகமுவ மாகாணத்தில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

மேற்படி நிகழ்வில் சப்ரகமுவ மாகாண பிரதி கல்விப் பணிப்பாளர் அமலி வீரசிங்க மற்றும் பிரான்டெக்ஸ் நிறுவனத்தின் ஆலோசகர் ஷெஹான் பரணகம உட்பட கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# நூல் வெளியீட்டு விழா





ஆர்.தனராஜா

அரச கவிஞர் காவத்தையூர் பழனியாண்டி கனகராஜா எழுதிய 'எண்ணங்களின் வண்ணங்கள்' நூல் வெளியீட்டு விழா ஊவா தமிழ் இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் பசறை நூலக கேட்போர் கூடத்தில் வெளியிடப்பட்டது.

குறித்த நிகழ்வில் மங்கள விளக்கேற்றல் மற்றும் கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

குறித்த நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார் மற்றும் வவுனியா பல்கலைக்கழக விரிவுரையாளர் புஸ்பகாந்தன் கலந்து கொண்டதுடன் சிறப்பு நூல்களையும் பெற்றுக்கொண்டனர்.

இக் கவிதை நூல் வெளியீட்டு விழாவுக்கு அதிபர்கள், ஆசிரியர்கள், இலக்கியவாதிகள் எனப் பெருந்திரளானோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விடுதியில் வைத்து பெண்ணொருவரை கொலை செய்த சந்தேக நபர் கைது

ராமு தனராஜா

பண்டாரவளை விடுதியொன்றில் 40 வயதுடைய எட்டாம்பிட்டி பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்த குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் பண்டாரவளை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர்.

எட்டாம்பிட்டி பகுதியைச் சேர்ந்த 40 வயதான 03 பிள்ளைகளின் தாயொருவரை பண்டாரவளை விடுதி ஒன்றுக்கு வரவழைத்து கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துவிட்டு தலைமறைவாகியிருந்த சந்தேக நபர் விஷமருந்தி கொழும்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில், பண்டாரவளை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய பண்டாரவளை பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் களுபஹன மற்றும் பண்டாரவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிஷாந்த திசாநாயக்க ஆகியோரின் ஆலோசனைக்கமைய பொலிஸ் குழுவினர் கொழும்புக்குச் சென்று வைத்தியசாலையில் வைத்து 50 வயது மதிக்கத்தக்க கௌனி கோணவலை பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த சந்தேக நபரைக் கைதுசெய்து நேற்று அதிகாலை(27) 3.30 மணியளவில் பண்டாரவளை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுசென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபரை விசாரணைகளின் பின்னர் பண்டாரவளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர்.

# கிணற்றிலிருந்து பெண்ணின் சடலம் மீட்பு

ஏ.ஏ.எம்.பாயிஸ்

சியம்பலாண்டுவவில் கிணறொன்றிலிருந்து பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சியம்பலாண்டுவ, ஹிரிபிட்டிய என்ற கிராமத்திலேயே இச்சடலம் நேற்று (27) மீட்கப்பட்டுள்ளது. இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் 60 வயது மதிக்கத்தக்கதெனவும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் சியம்பலாண்டுவ பொலிஸார் தெரிவித்தனர்.

# இந்தியாவின் பாதுகாப்புக்கு பங்கம் விளைவிக்காது இலங்கை அரசு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்

## தவறுமானால் விளைவு மிக மோசமாகிவிடும் என்கிறார் சித்தார்த்தன் எம்.பி.




இந்தியாவின் பாதுகாப்புக்கு பங்கம், ஊறு விளைவிக்காத வகையிலேயே இலங்கை அரசாங்கம் விடயங்களை எடுக்க வேண்டும். அவ்வாறு எடுக்கத் தவறுவார்களாக இருந்தால் அதனுடைய விளைவுகள் மிக மோசமாகப் போய்விடும்.

இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம்(26) இடம்பெற்ற தமது கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாம் இந்த மத்திய குழுக் கூட்டத்தில் தற்போது இருக்கின்ற அரசியல் நிலைமைகள், தமிழ் மக்கள் தொடர்ந்து முகம் கொடுத்து வருகின்ற பிரச்சினைகள் முக்கியமாக இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் என்பன தொடர்பாக கலந்து ஆராய்ந்திருந்தோம்.

இதில் சில நடவடிக்கைகளை எவ்வாறு எடுக்கலாம் என்பது தொடர்பிலும் ஆராய்ந்தோம். மேலும் எங்களுடைய ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடுகள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்தும் அரசியல்ரீதியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வளர்ப்பது மாத்திரமல்லாது, தமிழ் மக்களுடைய அன்றாட பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கத்துடன் பேசுகின்ற விடயங்கள் தொடர்பிலும் ஆராய்ந்தோம்.

அண்மையில் எங்களைச் சந்தித்த தூதுவர்கள் முக்கியமாக, அமெரிக்கத் தூதுவரிடம் எங்களுடைய பிரச்சினைகள் தொடர்பில் எவ்வளவு தூரம் அமெரிக்கா எங்களுக்கு உதவ முடியும் என்பது தொடர்பில் கேட்டறிந்து கொண்டோம்.

அவர்களுக்கு இருக்கின்ற எல்லைக்குள் சில விடயங்களைச் செய்யலாம் என்று கூறியிருக்கின்றார்கள். இந்த விடயங்கள் தொடர்பாகவும் எங்களுடைய மத்திய குழு அங்கத்தவர்களுடன் கலந்துரையாடியிருக்கிறோம்.

அதேபோன்று, குருந்தூர் மலை தொடர்பிலும் சீனாவின் ஆயுதக் கப்பல் ஒன்று இலங்கைக்கு வரப்போவதாகக் கூறப்படும் செய்திகள் தொடர்பாகவும் பாராளுமன்ற உறுப்பினரிடம் ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பினர். ஓர் ஆபத்தான நிலையில் இலங்கை போய்க் கொண்டிருக்கின்றது போல் தெரிகிறது. ஏனென்றால், இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான உறவு, அதேபோன்று இலங்கை சீனாவுடன் வைத்திருக்கின்ற உறவு என்பன இந்நாட்டு நிலைமைகளை மோசமாக்கிக் கொண்டு வருகிறது என்று நினைக்கின்றேன்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் மிகக் கவனமாகக் கையாள வேண்டும்.

சீனாவின் ஆதிக்கம் இங்கு கூடிக்கொண்டு வருமாக இருந்தால் முக்கியமாக இராணுவ ரீதியான ஆதிக்கங்கள் கூடிக்கொண்டு வருமாக இருந்தால் அது இலங்கையில் இருக்கின்ற மக்களை பெரியளவில் பாதிக்கும்.

இங்கு சீனா தனது பிரசன்னத்தைக் கூட்டுகின்ற முயற்சியை எடுக்கிறது. அதாவது, எங்களுடைய வடபுலத்திலே, இதன் மூலம் அவர்கள் இந்தியாவினுடைய பாதுகாப்புக்கு அச்சத்தைக் கொடுத்து விடுவார்கள் என்கின்ற எண்ணப்பாடு இந்தியாவுக்கு வருமாக இருந்தால் அது எங்களைத்தான் கூடுதலாகப் பாதிக்கும். ஆகவே, நாங்கள் இதில் மிகக் கவனமாக இருக்கவேண்டும்.

இந்த ஆய்வுக்கு சீனக் கப்பல் வருவதென்பது இந்தியாவைப் பொறுத்தவரையில் அவர்களுடைய பாதுகாப்புக்கு அச்சம் வரக்கூடியதாக இருக்கும் என அவர்கள் பார்க்கின்றார்கள். ஆகவே, அதனைத் தவிர்ப்பதற்கான முழுமையான முயற்சியை இலங்கை அரசாங்கம் எடுக்க வேண்டும். அவ்வாறு எடுக்கத் தவறுவார்களாக இருந்தால் அதனுடைய விளைவுகள் மிக மோசமாகப் போய்விடும்.

ஆகவே, இந்த இரண்டு நாடுகளையும் எப்படியும் அவர்களுடைய ஆதிக்கங்களை இங்கு இல்லாமல் செய்வதன் மூலம் முக்கியமாக சீனாவின் ஆதிக்கத்தை இங்கு இல்லாது செய்ய வேண்டும். ஏனென்றால், இயற்கையாகவே இந்தியாவினுடைய ஆதிக்கம் இங்கு இருந்து கொண்டிருக்கும் நிலையிலும் இது ஆயிரக்கணக்கான வருடங்களாக இருக்கின்ற உறவு என்பதாலும் இது மிகக் கவனமாகக் கையாள வேண்டிய விடயம். அவ்வாறு கையாண்டால்தான் இலங்கை பெரியதொரு பிரச்சினைக்குள் சிக்கிக்கொள்ளாமல் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முடியும் என்று நான் நம்புகிறேன் - எனத் தெரிவித்தார்.

# அமிர்தலிங்கத்தின் பிறந்த தின நிகழ்வு






சாவகச்சேரி நிருபர்

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 96ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வலிகாமம் மேற்கு பிரதேச சபை முன்றலில் அமைந்துள்ள அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் திருவுருவச்சிலை வளாகத்தில் பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் மற்றும் பண்ணாகம் அண்ணா கலைமன்றத்தினரால் விசேட நிகழ்வுகள் சனிக்கிழமை(26) காலை முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது பாராளுமன்ற முன்னாள் உறுப்பினரும் வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழரசுக் கட்சித் தலைவருமான ஈஸ்வரபாதம் சரவணபவனால் 96ஆவது அகவையை நினைவுறுத்தும் முகமாக கேக்வெட்டி, அமிர்தலிங்கத்தின் திருவுருவச்சிலைக்கு மலர்மாலையும் மலரஞ்சலியும் செலுத்தப்பட்டன.

இந்நிகழ்வில் பண்ணாகம் அண்ணா கலை மன்றத்தினர், பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், இலங்கை தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதி மகளிர் அணிசெயற்பாட்டாளர் பரமானந்தவள்ளி, பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# குளவிக் கொட்டுக்கு இலக்காகி முதியவர் ஒருவர் உயிரிழப்பு

மிருசுவில், தவசிக்குளம் பகுதியைச் சேர்ந்த இமானுவேல் யேசுரத்தினம் (வயது 79) என்பவர் குளவிக்கொட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை தேவாலயத்துக்குச் சென்றுகொண்டிருந்த வேளை வழியில் குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுமுன்தினம் (26) சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# தெல்லிப்பழை துர்க்காதேவி கைலாசவாகனத் திருவிழா





பு.கஜிந்தன்

வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவத்தின் கைலாச வாகனத் திருவிழா நேற்றுமுன்தினம் (26) மாலை இடம்பெற்றது.

மாலை 4.30 மணியளவில் ஆரம்பமான கொடித்தம்ப பூசையைத் தொடர்ந்து, மாலை 5.30 மணியளவில் வசந்த மண்டப பூசை இடம்பெற்றது. வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து துர்க்கையம்பாள் பிள்ளையார், முருகன், சண்டேஸ்வரர் சமேதரராக உள்வீதி வலம்வந்து வெளிவீதியில் கைலாச வாகனத்தில் வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள்பாலித்தார்.

பெருந்திரளான பக்தர்களுடன் இடம்பெற்ற இத்திருவிழாவைத் தொடர்ந்து வருடாந்த மகோற்சவத்தின் சப்பறத் திருவிழா நேற்றும் (27) தேர்த்திருவிழா நாளையும் (29) தீர்த்தத் திருவிழா 30ஆம் திகதியும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் இன்று அடையாள போராட்டம் முன்னெடுப்பு

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியங்களை அரசாங்கம் பயன்படுத்த முனைவதற்கு எதிராக யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக இன்று திங்கட்கிழமை மதியம் 12 மணி முதல் 01 மணி வரையில் ஒருமணி நேர அடையாள போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

பல்கலைக்கழக ஊழியர் சங்கம், வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம், அகில இலங்கை அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம், பொது முகாமைத்துவ உதவியாளர் சேவைச் சங்கம், வடமாகாண சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் சங்கம், வடமாகாண கால்நடை போதனாசிரியர் சங்கம், ஸ்ரீலங்கா தபால் தொலைத்தொடர்பு சேவை உத்தியோகத்தர் சங்கம், வடமாகாண அரச சாரதிகள் சங்கம் மற்றும் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தொழிற்சங்கம் ஆகிய 09 சங்கங்கள் இணைந்து போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளன.

உலக செய்திகள்

## ஆய்வுத் திட்டத்தின் இரு பணிகள் நிறைவு; அறிவியல் பரிசோதனைகள் தீவிரம்

# நிலவில் சந்திரயான் -3 தடம்பதித்த இடம் 'சிவசக்தி'



### சந்திரயான் -2 தரையிறங்கிய இடம் 'திரங்கா' என பெயர்சூட்டி பெருமை சேர்த்த பிரதமர் மோடி

சந்திரயான்-3 திட்டத்தில் முக்கியமான 2 பணிகள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுவிட்டதாகவும், தொடர்ந்து அறிவியல் பரிசோதனைகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் தற்போது நிலவின் வெப்பநிலை குறித்த ஆய்வுகளை விக்ரம் லேண்டர் முன்னெடுத்து வருவதாகவும் இஸ்ரோ அறிவித்துள்ளது.






நிலனன் தென்துருவத்தை ஆய்வு செய்வதற்காக இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ உருவாக்கிய சந்திரயான்-3 விண்கலம், எல்விஎம்-3 ராக்கெட் மூலம் கடந்த ஜூலை 14ஆம் திகதி விண்ணில் செலுத்தப்பட்டது. பல்வேறு கட்டமாக 41 நாட்கள் பயணத்துக்குப் பின்னர் கடந்த 23 ஆம் திகதி மாலை 6.04 மணியளவில் சந்திரயான்-3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் நிலவின் தென்துருவப் பகுதியில் வெற்றிகரமாகத் தரையிறங்கியது. இதன்மூலம் நிலவின் தென்துருவத்தில் தரையிறங்கிய முதல் நாடு எனும் பெருமையை இந்தியா பெற்றது. சில மணி நேரங்களுக்குப் பின்னர் விக்ரம் லேண்டரிலிருந்து பிரக்யான் ரோவர் வெற்றிகரமாக வெளியே வந்தது.

இதையடுத்து, லேண்டர் தரையிறங்கிய இடத்தில் இருந்தபடியும், ரோவர் நிலவின் மேற்பரப்பில் ஊர்ந்து சென்றும் தற்போது ஆய்வு மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில், ''நிலவில் சந்திரயான் 3இன் லேண்டர் தடம் பதித்த ஓகஸ்ட் 23ஆம் திகதி இனி ஆண்டுதோறும் தேசிய விண்வெளி தினமாகக் கொண்டாடப்படும்'' - என இந்தியப் பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.

அத்தோடு, விக்ரம் லேண்டர் நிலவில் தரையிறங்கிய பகுதி 'சிவசக்தி' எனவும், 2019ஆம் ஆண்டு சந்திரயான்-2 நிலவில் தடம்பதித்த இடம் மூவர்ணக்கொடி என பொருட்படும் வகையில் 'திரங்கா' என அழைக்கப்படும் என்றும், எந்தத் தோல்வியும் இறுதியானது அல்ல என்பதை நினைவூட்டவே திரங்கா எனப் பெயர் சூட்டப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், விக்ரம் லேண்டர் தரையிறங்கிய பகுதியில் பிரக்யான் ரோவர் வலம் வரும் படங்களின் தொகுப்பை இஸ்ரோ நேற்றுமுன்தினம் வெளியிட்டது. அதில் 26 கிலோ எடை கொண்ட ரோவர், தனது 6 சக்கரங்களால் தென்துருவப் பகுதியில் ரிமோட் கார் போன்று முன்னும், பின்னும் ஊர்ந்து சென்று ஆய்வுப் பணிகளைச் செய்வதை தெளிவாக காணமுடிகிறது. இதுகுறித்து இஸ்ரோ விஞ்ஞானிகள் சிலர் கூறியதாவது:

ரோவர் வாகனம் விநாடிக்கு ஒரு செ.மீ. வேகத்தில்தான் நகர்கிறது. இதனால் அதிகபட்சம் 500 மீற்றர் சுற்றளவு வரையே செல்ல முடியும்.

அதுமட்டுமன்றி, நிலவின் மேற்பரப்பு கரடு முரடாக இருப்பதால் ரோவர் மிகவும் கவனமாக நகர்ந்து ஆய்வை முன்னெடுக்கிறது. அதிலுள்ள லிப்ஸ் மற்றும் ஏபிஎக்ஸ்எஸ் சாதனங்களின் ஆய்வுப் பணிகள் நேற்றுமுன்தினம் தொடங்கப்பட்டன. அந்த வகையில் லிப்ஸ் கருவி மூலம் நிலவின் தரைப்பகுதிகளில் ஆல்பா கதிர்கள் மூலம் துளையிட்டு அலுமினியம் போன்ற தாதுக்களைக் கண்டறியும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மறுபுறம் லேண்டரிலுள்ள ராம்பா, இல்சா, சாஸ்டே ஆகிய கருவிகளும் நிலவில் பரிசோதனைகளை செய்து முக்கிய தரவுகளைச் சேகரித்து புவிக்கு அனுப்பி வருகின்றன. அவற்றை பகுப்பாய்வு செய்வதன் மூலம் நிலவின் தோற்றம், அதன் நீராதாரம், வெப்பம், நில அதிர்வுகள், அயனிகள், கனிம வளங்கள் உட்பட பல்வேறு கேள்விகளுக்கு விடை கிடைக்கும் என்று நம்புகிறோம். இவ்வாறு தெரிவித்துள்ளனர். இந்தக் கலன்களின் ஆயுட்காலம் இன்னும் 10 நாட்கள் வரை இருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், சந்திரயான்-3 விண்கலத் திட்டப் பணிகள் அனைத்தும் சிறப்பான முறையில் செயற்படுத்தப்பட்டு வருவதாக இஸ்ரோ அறிவித்துள்ளது. இதுகுறித்து இஸ்ரோ வெளியிட்ட அறிவிப்பு விவரம்:

சந்திரயான்-3 விண்கலத் திட்டத்தில் மொத்தம் 3 இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டிருந்தன. அவை நிலவின் மேற்பரப்பில் லேண்டர் கலனை பாதுகாப்பாகவும் மிகவும் மெதுவாக தரை இறக்குதல், லேண்டரிருந்து ரோவர் வாகனத்தை பத்திரமாக கீழ் இறங்கி உலவவிடுதல் மற்றும் ஆய்வுக் கருவிகள் மூலம் அறிவியல் பரிசோதனைகள் மேற்கொள்ளுதல் ஆகியவை ஆகும். அதில் முதல் 2 பணிகள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுவிட்டன.

தற்போது அறிவியல் பரிசோதனைகள் திட்டமிட்டபடி நடத்தப்பட்டு வருகின்றன. லேண்டர், ரோவர் ஆகிய கலன்களிலுள்ள அனைத்து சாதனங்களும் சிறப்பாக செயற்பட்டு வருகின்றன.

மேலும், தற்போது விக்ரம் லேண்டரில் சென்ற ChaSTE (Chandras Surface ThermoPhysical Experiment)கருவி பணியை தொடங்கியுள்ளது. நிலவில் மேற்பரப்பிலுள்ள மணலின் வெப்பநிலையை ChaSTE ஆய்வு செய்கிறது. நிலவின் மணல் பரப்பில் 10 சென்ரிமீற்றர் ஆழம் வரை ஆராயக்கூடிய திறன் கொண்டுள்ளது. ChaSTEஇல் உள்ள 10 சென்சார் கருவிகள் வெப்பநிலையை தொடர்ந்து ஆய்வு செய்கின்றன. நிலவின் வெப்பநிலை மாற்றம் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது. - இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரோ வெளியிட்டுள்ள வரைபடத்தில் பல்வேறு ஆழங்களில் நிலவின் வெப்பநிலை மாறுபடுவது தெரியவந்துள்ளது. தென் துருவத்தில் தரையிறங்கிய லேண்டர் ஆய்வு செய்து அனுப்பிய முதல் தகவல் என இஸ்ரோ தெரிவித்துள்ளது.வெப்பநிலை ஆய்வு கருவியை பெங்களூரு மற்றும் அகமதாபாத் இஸ்ரோ விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.




### சூரியனை ஆய்வு செய்ய

## செப். 2இல் செல்லும் இஸ்ரோவின் ஆதித்யா-எல்1

சந்திராயன்-3 திட்டம் வெற்றி பெற்றுள்ள நிலையில், சூரியனை பற்றிய ஆய்வுக்காக ஆதித்யா-எல்1 செயற்கைக்கோளை, பிஎஸ்எல்வி-எக்ஸ்எல் (சி57) ரொக்கெட் மூலம் எதிர்வரும் செப்டெம்பர் 2ஆம் திகதி விண்ணுக்கு அனுப்ப இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.

பூமியிலிருந்து 15 இலட்சம் கி.மீ.தொலைவிலுள்ள எல்-1 என்று அழைக்கப்படும் சூரியனின் ஒளிவட்டபாதையில் ஆதித்யா-எல்1 செயற்கைக்கோள் நிலை நிறுத்தப்படும். சூரியன் குறித்தான ஆய்வுக்காக, இஸ்ரோ மேற்கொள்ளும் முதல் விண்வெளி திட்டம் இது. ஆதித்யா-எல்1 என்ற இந்த செயற்கைக்கோள், விண்வெளியில் இருக்கக்கூடிய ஓர் ஆய்வுகூடமாக செயற்படவுள்ளது.

சூரியனின் ஒளி மண்டலம், நிற மண்டலம், சூரியனின் வெளிப்புற அடுக்குகள், ஒளி வட்டம் ஆகியவற்றைப் பற்றி ஆய்வு செய்ய இதில் விஇஎல்சி (Visible Emission Line Coronagraph) என்ற தொலைநோக்கி, எஸ்யுஐடி (Solar Ultraviolet Imaging Telescope) என்ற தொலைநோக்கி, ஏ ஸ்பெக்ஸ் (Aditya Solar wind Particle Experiment) என்ற சூரிய காற்றின் தன்மைகளை ஆய்வு செய்யும் கருவி, சூரிய சக்தியை ஆராயும் பிஏபிஏ (Plasma Analyser Package for Aditya), சூரியனின் எக்ஸ்ரே கதிர்கள் மற்றும் வெப்பத்தைக் கண்காணிக்கும் சோலெக்ஸ் (Solar Low Energy X-ray Spectrometer), சூரியனின் வெளிப்புற அடுக்குகளில் ஏற்படும் டைனமிக் மாற்றங்களை ஆராயும் ஹெல் 10எஸ் ( High Energy L1 Orbiting X-ray Spectrometer), கிரகங்களுக்கு இடையேயான காந்த புலதன்மையை அளவிடும் மேக்னோ மீற்றர் என்ற 7 முக்கிய கருவிகள் உள்ளன.

ஆதித்யா-எல்1 ஆய்வுத் திட்டத்தின் முழுப் பணிகளும், உள்நாட்டு முயற்சியில் மேற்கொள்ளப்படுகின்றன. ஆதித்யா செயற்கைக்கோள் தற்போது ஸ்ரீஹரிகோட்டாவுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இதை பிஎஸ்எல்வி- எக்ஸ்எல் (சி57) என்ற ரொக்கெட் மூலம், செப்டெம்பர் 2ஆம் திகதி விண்ணில் செலுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது. ஆதித்யா-எல்1 திட்டம் மூலம் சூரியனின் வெளிப்பகுதியில் நிலவும் வெப்ப மாறுபாடுகளைக் கண்டறிவதுடன், சூரிய புயல்களின் தாக்கங்களையும் கண்டறிய முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மன்னார் மறைமாவட்ட ஆயரை சந்தித்தார் அமெரிக்கத் தூதுவர்

### முக்கிய விடயங்கள் குறித்தும் ஆராய்வு

மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மற்றும் மடு திருத்தல பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார் ஆகியோரை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் நேற்றுமுன்தினம்(26) சந்தித்து கலந்துரையாடினார்.





குறித்த சந்திப்பு தொடர்பில் ஜூலி சங் தனது டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அந்தப் பதிவில் குறித்த கலந்துரையாடலில் சமய நல்லிணக்கம் மற்றும் சகிப்புத்தன்மையை மேம்படுத்துவதில் மதத் தலைவர்களின் முக்கிய பங்கு குறித்து ஆராயப்பட்டது.

இதேவேளை, வரலாற்றுச் சிறப்புமிக்க மடு மாதா ஆலயத்துக்கும் சென்றேன். இந்தப் புனித இடத்திற்கு என்னை வரவேற்றதற்கு நன்றி.

மேலும், மன்னாரில் மதங்களுக்கிடையிலான ஒற்றுமையின் சின்னமாக மடு மாதா ஆலயம் விளங்குவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மன்னார் ஆயரை மன்னார் ஆயர் இல்லத்திலும் மடு திருத்தல பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார் மற்றும் மடு திருத்தலத்தின் புதிய பரிபாலகர் எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளார் ஆகியோரை மடு திருத்தலத்திலும் அமெரிக்கத் தூதுவர் சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



சிலாபம், முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாதஸ்வாமி ஆலயத்தில் வருடாந்த தீமிதிப்பு வெள்ளிக்கிழமை (25) இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டனர். **படங்கள்:** உடப்பு நிருபர்

## இரத்தினக்கல் திருட்டு: திருடனை கைது செய்ய விசாரணை ஆரம்பம்

லக்கல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேவல தெனிய, எல்பிட்டிய தோட்டத்தில் அமைந்துள்ள இரத்தினக்கல் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த ஏழு கோடி ரூபா பெறுமதியான இரத்தினக்கல்லை திருடியதாகக் கூறப்படும் நபரைக் கைதுசெய்ய மாத்தளை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக வர்த்தகர் ஒருவர் மாத்தளை குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்தே திருடனை கைது செய்வதற்காக மாத்தளை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



எட்டியாந்தோட்டை விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட வழிபாட்டு நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்க, இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, பாராளுமன்ற உறுப்பினர் ராஜிகா விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் எட்டியாந்தோட்டை தொகுதி அமைப்பாளர் சஞ்சீவ அபேகோன் உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டனர். **படம்:** இரத்தினபுரி நிருபர்

## தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் மத்திய குழுக் கூட்டம்

சாவகச்சேரி நிருபர்

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) மத்திய குழுக் கூட்டம் சனிக்கிழமை (26) சாவகச்சேரி நகரசபையின் பொன்விழா மண்டபத்தில் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தலைமையில் இடம்பெற்றது.

காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 3மணி வரை இடம்பெற்ற மேற்படி கூட்டத்தில் கட்சியின் செயலாளர் நா.இரட்ணலிங்கம், பொருளாளரும் -வடக்கு மாகாணசபையின் முன்னாள் விவசாய அமைச்சருமான க.சிவனேசன்,வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான பா.கஜதீபன் மற்றும் ஜி.ரி.லிங்கநாதன்,கரைத்துரைப்பற்று பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் கே.தவராசா உள்ளிட்ட மத்திய குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.




குறித்த கூட்டத்தில் சமகால அரசியல் விடயங்கள்,குருந்தூர் மலை விவகாரம்,தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்க்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சி காரணமாக ஆனையிறவு களப்புப் பகுதியில் மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன. **படம்:** பு.கஜிந்தன்

## சந்நிதியான் ஆச்சிரமத்தால் கல்விச்சுற்றுலாவுக்கு உதவி

பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டமானாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரமத்தால் கல்விச் சுற்றுலா மற்றும் திருத்தல யாத்திரைக்கான நிதியுதவியாக ரூபா 1,00,000 நேற்று வழங்கிவைக்கப்பட்டது.



யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடம், சைவசித்தாந்தத்துறை மாணவர்களின் கல்விச்சுற்றுலா மற்றும் திருத்தல யாத்திரைக்காகவே குறித்த நிதி வழங்கிவைக்கப்பட்டது.

இந்நன்கொடையை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத்தில் வைத்து பிரதிநிதிகளிடம் வழங்கினார்.

## காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் குறைவு

வறட்சி காரணமாக காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் தொடர்ந்தும் குறைவடைந்து வருவதாக நீர்த்தேக்கப் பொறுப்பதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்கிணங்க நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 44 அடி குறைந்துள்ளதாகவும் வறட்சி தொடர்ந்தால் எதிர்காலத்தில் நீர் மட்டம் மேலும் குறைவடையலாம் என்றும் அந்த அதிகாரி கூறினார்.

# ஜனாதிபதியின் தீர்மானங்களே நாட்டை வேகமாக முன்னோக்கி நகர்த்துகின்றன

## முஷாரப் எம்.பி. தெரிவிப்பு

திகாமடுல்ல செய்தியாளர்

நமது நாடும் மிகவும் கஷ்டமான நிலையில் இருந்தபோது நாட்டின் முன்னேற்றத்துக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனரஞ்சக மில்லாத பல தீர்மானங்களை எடுத்தார். அந்தத் தீர்மானங்களை பலரும் விமர்சித்தனர். இன்று அந்தத் தீர்மானங்கள்தான் நாட்டை







மிக வேகமாக முன்னோக்கி நகர்த்துகின்றது என்பதை எல்லோரும் புரிந்துகொள்கின்ற நிலையைப் பார்க்கின்றோம் என திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் தெரிவித்தார்.

பொத்துவில், அருகம்பே பிரதேசத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கான வழிவகைகள் குறித்த கலந்துரையாடல் வெள்ளிக்கிழமை(25) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அருகம்பே றொக்கோஸ் ஹோட்டலில் இடம்பெற்றது.

இதன்போது கலந்துகொண்டு உரையாற்றும் போதே முஷாரப் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்னும் 10 அல்லது 15 வருடங்களுக்காவது இந்த நாட்டை ஆளுகின்ற தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருக்க வேண்டும்.

அதற்காக நாட்டு மக்கள் முழுமையான ஆதரவை வழங்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

50 வருட பாராளுமன்ற அரசியல் அனுபவமாகக் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நாட்டு மக்களும் சர்வதேசமும் பெரும் நம்பிக்கை கொண்டுள்ளது. அந்த நம்பிக்கை இன்று வெற்றியடைந்து வருவதைப் பார்க்கின்றோம். இன்று காலை ஜனாதிபதியும் நாங்களும் பினாட்ஸ் பாம் மற்றும் சேர்பிங் பொய்ண் பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டோம். அங்கு மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதியின் செயற்றிட்ட வடிவத்தைப் பார்த்து வியந்து போனோம் என்றார்.

இக்கலந்துரையாடலில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், ஜனாதிபதி செயலக பிரதானி சாகல ரத்நாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எல்.எம்.அதாஉல்லா, வீரசிங்க, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம, பொத்துவில் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் எம்.எச்.அப்துல் றஹீம் உள்ளிட்ட அதிகாரிகள், சுற்றுலாத்துறை முக்கியஸ்தர்கள், அருகம்பே ஹோட்டல் உரிமையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு அருகம்பே சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கான வழிவகைகள் மற்றும் திட்டங்கள் குறித்தான கருத்துகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்ததுடன் ஹோட்டல் உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சவால்களையும் உன்னிப்பாகக் கேட்டறிந்து கொண்டார். நீண்டகாலமாக எதிர்நோக்கும் ஹோட்டல் காணி உரிமைத்துவம் தொடர்பான பிரச்சினைக்கு விரைவாக தீர்வைப் பெற்றுத்தருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்ததுடன் ஹோட்டல்களை விஸ்தரிப்பதற்கும் புதிதாக கட்டுவதற்குமான ஏற்பாடுகளைச் செய்து தருவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது தெரிவித்தார்.



காரைதீவு இந்து சமய விருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் மண்டூர் முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு இடம்பெறும் பாதயாத்திரையானது சனிக்கிழமை(26) ஆரம்பமானது. அதிகாலை 4.00மணிக்கு காரைதீவு ஸ்ரீ மாவடி கந்தசுவாமி ஆலயத்திலிருந்து ஆரம்பமான குறித்த பாதயாத்திரையில் பக்தர்கள் அரோகரா கோஷங்களுடன் கல்முனை, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, சவளக்கடை, நாவிதன்வெளி, அன்னமலை 7ஆம் கிராமம், வேம்பையடி, தம்பலவத்தை, வீதி வழியாக நடைபவனியாக மண்டூர் முருகன் ஆலயம் நோக்கிச் சென்றனர்.

**படம்:** *காரைதீவு செய்தியாளர்*





மட்டக்களப்பு, ஆயித்தியமலை புனித சதா சகாய மாதாவின் வருடாந்த திருவிழா பங்குத்தந்தை ஜெமில்டன் தலைமையில் வெள்ளிக்கிழமை (25)மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. சகாய மாதாவின் பாதயாத்திரை சனிக்கிழமை 2ஆம் திகதி காலை 5 மணிக்கு மட்டக்களப்பு நகரில் இருந்து ஆரம்பமாகி வவுணதீவு ஊடாக ஆயித்தியமலை ஆலயத்தை வந்தடையும். அன்றையதினம் செங்கலடியிலிருந்து ஆரம்பிக்கும் பாதயாத்திரை கரடியனாறு ஊடாக ஆலயத்தை வந்தடையும் என அருட் தந்தை ஜெமில்டன் தெரிவித்தார். **படங்கள்:** *மண்முனை செய்தியாளர்*

# புனித மிக்கேல் கல்லூரிக்கு புதிய அதிபர் நியமனம்



மட்டக்களப்பு

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் புதிய அதிபராக அன்ரன் பெனடிக் ஜோசப் நியமிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப்பின் பங்குபற்றுதலுடன் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம், மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார் ஆகியோர் முன்னிலையில் புதிய அதிபர் அன்ரன் பெனடிக் ஜோசப் வெள்ளிக்கிழமை(25) தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இதன்போது, சென் மிக்கேல் கல்லூரியின் நிர்வாகப் பொறுப்புகளை அதன் அதிபராக கடமைவகித்த இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர் ஆர்.ஜே. பிரபாகரன் புதிய அதிபர் அன்ரன் பெனடிக் ஜோசப்பிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அதிகாரி, SDEC செயலாளர், SDEC உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பாடசாலை ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# பொது மயானங்களை துப்புரவு செய்யும் பணி முன்னெடுப்பு



கல்லுதாவளை செய்தியாளர்

மட்டக்களப்பு மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குள் காணப்படும் பொது மயானங்களை துப்புரவு செய்யும் பணிகளை மட்டக்களப்பு மாநகர சபையானது தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது.

இதன்படி நகரின் மத்தியில் அமைந்துள்ள கள்ளியங்காடு இந்து மயானத்தை துப்புரவு செய்து அழகுபடுத்தும் பணிகள் மட்டக்களப்பு மாநகரசபையின் ஆணையாளர் பொறியியலாளர் என்.சிவலிங்கம் தலைமையில் சனிக்கிழமை(26) காலை முன்னெடுக்கப்பட்டன.

தேசிய ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வரும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளின் ஓர் அங்கமாகவும் முன்னெடுக்கப்பட்ட இச் சிரமதானப் பணிகளில் மாநகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் த.டமராஜ் உள்ளிட்ட சுகாதார பகுதி உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இச் சிரமதானப் பணிகளின்போது பொதுமக்கள் தமது இறுதிச் சடங்குகளை அசௌகரியங்கள் இன்றி முன்னெடுப்பதற்கு ஏதுவாக அங்கு அமைக்கப்பட்டுள்ள உள்ளக பாதைகளும் சீரமைக்கப்பட்டதுடன், இரவு வேளைகளில் அப் பகுதியில் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் LED மின் குமிழ்களும் பொருத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





பட்டிருப்பு வலயக் கல்விப் பணிமனைக்குட்பட்ட பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது. பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் சிறீதரனின் வழிகாட்டலில் பாடசாலை அதிபர்களின் ஒழுங்கமைப்பில் டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் இனங்காணப்பட்டு சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. **படங்கள்:** *பாண்டிருப்பு செய்தியாளர்*

# பிரண்டினா பயனாளிகள் 2,091 பேருக்கு நிதியுதவி







அப்துல்சலாம் யாசீம்

பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள 2ஆயிரத்து 91 பிரண்டினா பயனாளிகளுக்கு நிதியுதவி வழங்கும் ஆரம்ப நிகழ்வு சனிக்கிழமை(26) திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பிரண்டினா லைப் லைன் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக 2021ஆம் ஆண்டுக்குப் பிறகு பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்து வருகின்ற நிலையில், எரிபொருள் பற்றாக்குறை மற்றும் பசளை தட்டுப்பாட்டுடன் உணவுத் தட்டுப்பாடும் நிலவி வருகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு இத்திட்டத்தின் ஊடாக 3ஆயிரத்து 500 ரூபா வீதம் தெரிவு செய்யப்பட்ட 2ஆயிரத்து 91 பேருக்கு இக்கொடுப்பனவு வழங்கிவைக்கப்பட்டது.

பிரண்டினா லைப் லைன் திட்டத்தின் பிரதி பொது முகாமையாளர் பீ.ரஹீம், பிராந்திய முகாமையாளர் ஈ. திருச்செல்வம் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிதியை திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எஸ்.முகம்மட் ரியாட் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் எஸ்.டபிள்யூ.எஸ்.டி.திசாநாயக்க, சிரேஷ்ட தபால் அதிபர் எம். விஜயகுமார், விவசாய போதனாசிரியர் ஜே.ஜே.ஜசாட் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சாய்ந்தமருதில் இடம்பெற்ற கலைக் கதம்பம் நிகழ்வு



பொலிவேரியன் செய்தியாளர்

கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார அதிகார சபை ஆகியன இணைந்து வழங்கிய கலைஞர்களின் கலைக் கதம்பம் நிகழ்வு சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் வியாழக்கிழமை(24) சிறப்பாக இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச்.சபீக்கா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக், அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம்.றின்சான், சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் சுரேஷ்குமார், முன்னாள் கோட்டக் கல்வி அதிகாரி எம்.ஐ. ஜப்பார், முன்னாள் அதிபர் எம்.எம். இஸ்மாயில், எம்.சீ.ஏ.மாஹிர், நிந்தவூர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எம்.ஐ.எம். அஷ்ரப், சிரேஷ்ட கவிஞர் கே.எம்.ஏ.அஸீஸ், முன்னாள் மாநகர சபை உறுப்பினர் கவிதாயினி சுஹைல் அஸீஸ் மற்றும் சாய்ந்தமருதில் செயற்படுகின்ற பிரதான கலைமன்றங்களான முஹம்மதிய்யா கலை மன்றம், தக்வா கோலாட்டக் குழு, மருதம் கலைக்கூடல் மன்றம், நியூ வெண்ணிலா இசைக்குழு ஆகிய கலை மன்றங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட மூத்த கலைஞர்கள், மன்ற உறுப்பினர்கள், பொல்லடிக் கலைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது மூத்த கலைஞர்களின் திறமைகள் மேடையேற்றப்பட்டு, நான்கு கலைமன்றங்களுக்கும் விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி அதிதிகளால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன், முஹம்மதிய்யா கலைமன்றம் மற்றும் தக்வா கோலாட்டக்குழு மாணவர்களின் கோலாட்டம் எனப்படும் பொல்லடி நிகழ்வு மேடையில் அரங்கேற்றப்பட்டதோடு, அதில் பங்குபற்றிய அனைத்து மாணவர்கள் மற்றும் அண்ணாவிமார்களும் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

மருதம் கலைக்கூடல் மன்றக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட நாடகம் சபையோரால் பாராட்டி சிலாகித்து பேசப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.



சுட்டெரிக்கும் வெயிலின் தாக்கத்திலிருந்து பொது மக்களுக்கு நிவாரணம் தரும் வகையில் காத்தான்குடியைச் சேர்ந்த தனியார் நிறுவனமொன்று தன்னார்வமாக முன்வந்து வழிப்போக்கர்கள், உள்ளூர் மற்றும் வெளியூர் வியாபாரிகள், பாடசாலை மாணவர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு சனிக்கிழமை(26) தாக சாந்தி வழங்கியமை அனைவரினதும் கவனத்தை ஈர்த்துள்ளது.

**படம்:** *நிந்தவூர் செய்தியாளர்*

# சமுர்த்தி வங்கிகளை கணினி மயப்படுத்தும் செயலமர்வு



திராய்க்கேணி, ஆலையடிவேம்பு செய்தியாளர்கள்

சமுர்த்தி வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களின் கணினி மயப் படுத்தலுக்கான மென்பொருள் மேம்படுத்தல் மற்றும் எதிர்கால அபிவிருத்தி செயற்பாடுகளை முன்கொண்டு செல்லும் வகையி லான ஆறு நாள் பயிற்சிச் செயல மர்வின் முதல் நாள் நிகழ்வுகள் சனிக்கிழமை (26) இடம்பெற்றன.

ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப் பட்ட இப்பயிற்சிச் செயலமர்வில் ஆலையடிவேம்பு பிரதேச செயலக சமுர்த்தி தலைமையக முகாமையாளர் ந.கிருபாகரனின் ஒத்துழைப்போடு முகாமைத்துவப் பணிப்பாளர் சிவப்பிரியா சுதாகரன் ஒருங்கிணைப்பில் ஆரம்பமானது.

இதன் வளவாளர்களாக அம்பாறை மாவட்ட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் டி.எம்.குணவர்த்தன மற்றும் அம்பாறை மாவட்ட வங்கி கணினி மேம்படுத்தல் திட்ட முகாமையாளர் ரி.தெய்வேந்திரன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

சமுர்த்தி வங்கி மற்றும் வங்கிச்சங்கம், தலைமைப்பீட காரியாலயம், சமுர்த்தி கட்டுப் பாட்டுச்சபை உறுப்பினர்கள் என பல்வேறு தரப்பினருக்கும் ஆறு நாட்கள் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப்பயிற்சிச் செயலமர்வில் ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று மற்றும் இறக் காமம் பிரதேச செயலகங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# 14 இலட்சம் ரூபா மதிப்புள்ள தங்கநகைகள் கொள்ளை

## விசாரணைகள் முன்னெடுப்பு

ஆலையடிவேம்பு செய்தியாளர்

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சின்னப்பனங்காடு பிரதேச வீடொன்றில் தாலி மாலை உள்ளிட்ட சுமார் 14 இலட்சம் ரூபா மதிப்பிடத்தக்க 09 பவுண் தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

சனிக்கிழமை (26) அதிகாலை இச்சம்பவம் நடைபெற்றுள்ள நிலையில், வீட்டின் உரிமையா ளரால் அக்கரைப்பற்று பொலிஸாரிடம் முறைப் பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

வீட்டில் இருந்தவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த நிலையில், பூர்த்தி செய்யப்படாத மேல் தளத்தின் கதவு வழியாக உள் நுழைந்த சந்தேகநபர்கள் பெண்ணின் கழுத்தில் இருந்த தாலியையும் மாலையையும் வெட்டி எடுத்துச் சென்றுள்ளதாக வீட்டு உரிமையாளரால் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், தாலியும் மாலையும் வெட்டப்படுவதை உணர்ந்த பெண் நித்திரையில் இருந்து மீண்டு சந்தேகநபரை தடுக்க முற்பட்டபோது பெண்ணை கீழே தள்ளிவிட்டு தப்பித்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் வாக்கு மூலத்தைப் பதிவுசெய்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். அதேநேரம், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் அண்மைக்காலமாக கொள்ளை, போதைப்பொருள் கைது என்பன அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் கடும் வறட்சி: 29 ஆயிரத்து 508 பேர் பாதிப்பு



மட்டக்களப்பு, களுதாவளை செய்தியாளர்

நாட்டில் நிலவும் கடும் வறட்சியினால் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சுமார் 30 ஆயிரம் பேர்வரை பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை காலமும் இம்மாவட்டத்தில் மழைவீழ்ச்சி எதுவும் கிடைக்கப் பெறாததால் வறட்சியான காலநிலை மாற்றமின்றி தொடர்ந்து நிலவுகின்றது. இதனால் மாவட்டத்தின் 06 பிரதேச செயலகப் பிரிவுகளில் 8 ஆயிரத்து 892 குடும்பங்களைச் சேர்ந்த 29 ஆயிரத்து 508 பேர் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் செங்கலடி பிரதேச செயலகப் பிரிவில் 2ஆயிரத்து 561 குடும்பங்களைச் சேர்ந்த 8ஆயிரத்து 805 பேரும் கோறளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலகப் பிரிவில் 2ஆயிரத்து 161 குடும்பங்களைச் சேர்ந்த 6ஆயிரத்து 856 பேரும் மண்முனை மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் ஆயிரத்து 729 குடும்பங்களைச் சேர்ந்த 6ஆயிரத்து 300பேரும் போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவில் ஆயிரத்து 438 குடும்பங்களைச் சேர்ந்த 4ஆயிரத்து 341 பேரும், மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் 853 குடும்பங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து 681பேரும் கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் 150 குடும்பங்களைச் சேர்ந்த 525 பேரும் வறட்சியால் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் தேசிய அனர்த்த நிவாரண சேவை திணைக்களத்தினால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.சியாத் மாவட்ட ஊடகப் பிரிவுக்கு தகவல் தெரிவித்தார்.

# சிகிச்சை பலனின்றி இளைஞன் மரணம்



மீராவோடை, கல்குடா செய்தியாளர்கள்

வாழைச்சேனை - புனாணை கொழும்பு வீதியில் 24ஆம் திகதி வியாழக்கிழமை விபத்துக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்த இளைஞன் சிகிச்சை பலனின்றி ஞாயிற்றுக்கிழமை (27) உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் ஓட்டமாவடி நோக்கிச் சென்ற இரு இளைஞர்கள் எதிரே வந்த பஸ்ஸில் மோதியதில் சம்பவ இடத்தில் 25 வயதுடைய எஸ்.எச்.எம்.அஸாம் எனும் ஆசிரியர் மரணமடைந்தார். இவ் விபத்தில் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஓட்டமாவடி பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய புஹார்தீன் நுஸைக் அஹமட் என்பவரே இவ்வாறு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 36 பேர் கைது



கல்குடா, வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்கள்

வாழைச்சேனை பிரதேசத்திலுள்ள கல்குடா கடலில் சட்டவிரோதமான மீன்பிடி முறையான சுருக்கு வலை மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட தாகக் கூறப்படும் மீனவக் குழுவி னர் வெள்ளிக்கிழமை(25) பேத் தாழை மீனவர்களால் சுற்றி வளைத்து பிடிக்கப்பட்டு மீன்பிடித் திணைக்கள அதிகாரிகளிடம் சட்ட நடவடிக்கைகளுக்காக ஒப்படைக் கப்பட்டுள்ளனர்.

இந்நடவடிக்கையின்போது, 36 மீனவர்கள் உள்ளிட்ட 10மீன் பிடிப் படகுகளும் மீன்பிடி உபகர ணங்களும் கைப்பற்றப்பட்டு கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் கல்குடா பொலிஸார் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பேத் தாழை மீனவ சங்கச் செயலாளர் பிரான்சிஸ் ரமேஸ்பாலு தெரிவித் தார்.

மாங்கேணி, காயான்கேணி, வட்டவான், இறால்ஓடை, நாசிவன் தீவு ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். நீண்டகாலமாக நடந்து வந்த இந்நடவடிக்கை குறித்து உரிய மீனவர்களுக்கு தங்களால் பலமுறை அறிவித்தல் விடுத்தபோதிலும் உரிய கவனத்துக்கு கொண்டு வந்திருந்தாலும் இச்சட்டவிரோத நடவடிக்கை தொடர்ந்து இடம் பெற்று வந்தது.

இதையடுத்து, வெள்ளிக்கிழமை அதிகாலை இவர்கள் மீதான சுற்றிவளைப்பை தாங்கள் மேற்கொள்ள நேரிட்டதாக பேத்தாழை மீனவர்கள் தெரிவித்தனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுத்திருந்தால் இதுபோன்ற நிகழ்வுகள் இடம்பெற்றிருக்காது எனவும் மீனவர்களால் சுட்டிக்காட் டப்பட்டது.

கைப்பற்றப்பட்ட படகுகள், மீன்கள் மற்றும் மீனவர்களை மேலதிக சட்ட நடவடிக்கைக்காக வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்றுக்கு ஆஜர்ப் படுத்துவதற்கான நடவடிக்கையை கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்கள அதிகாரிகள் மேற் கொண்டுள்ளனர். நீண்ட காலமாக வெளிமாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் மற்றும் உள்ளூர் மீனவர் கள் சட்டவிரோத வலைகளைப் பாவித்து வருவதனால் தங்களது வழமையான மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வாழ்வாதா ரமும் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கவலை தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட திணைக்களங்க ளுக்கு தகவல் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்காத பட்சத் தில் தாங்கள் முன்வந்து இத்தீர் மானத்தை மேற்கொண்டு சுருக்குவலை மீன்தொழிலை தடுப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் தங்களைப் போன்று மாவட்டத்திலுள்ள மீன்பிடிச் சங்கங்கள் முன்வந்து இவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்ள முன்வரவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# உறவுகளுக்கு நீதி கோரி மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்

## எதிர்வரும் 30ஆம் திகதி இணைந்துகொள்ளுமாறு அழைப்பு

துறைநீலாவணை செய்தியாளர்

வடகிழக்கில் தமது உறவுகளுக்கு நீதிகோரி முன்னெடுக்கப்படும் போராட்டத்துக்கு தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள அனைத்து தரப்பினரையும் ஒன்றிணையுமாறு மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் தலைவி அ.அமலநாயகி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் வடகிழக்கு மாகாண 08 மாவட்ட சங்கங்களும் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளன.

குறித்த மாபெரும் போராட்டமானது, 30ஆம் திகதி புதன்கிழமை 8.30மணிக்கு மட்டக்களப்பு, கல்லடி பாலத்திலிருந்து ஆரம்பமாகும் குறித்த பேரணியானது, மட்டக்களப்பு காந்திபூங்கா அருகில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவுத்தூபிக்கருகில் பேரணி நிறைவுபெற்றதும் அங்கு நீதிகோரிய போராட்டம் முன்னெடுக்கப்படும்.

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச நீதி கோரி முன்னெடுக்கப்படும் இந்தப் போராட்டத்துக்கு சிவில் சமூக அமைப்புகள், பொது அமைப்புகள், பல்கலைக்கழக மாணவ அமைப்புகள், தமிழ்த் தேசிய பரப்பிலுள்ள அரசியல் கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

# 15 வயது சிறுமி பாலியல் துஷ்பிரயோகம் 18 வயது இளைஞனுக்கு விளக்கமறியல்

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்தில் 15வயது சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த 18 வயதுடைய இளைஞன் ஒருவரை எதிர்வரும் 07ஆம் திகதிவரை விளக்கமறி யலில் வைக்குமாறு சனிக்கிழமை (26) வாழைச்சேனை நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டார்.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த 15வயது சிறுமியை காதலித்துவந்த 18 வயது இளைஞன் திருமணம் முடிப்பதாக சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டுள்ளதாக கிடைத்த முறைப்பாட்டையடுத்து இளைஞனை வெள்ளிக்கிழமை (25) கைதுசெய்ததுடன் சிறுமியை வைத்தியசாலையில் அனுமதித் தனர்.

இதில் கைதுசெய்யப்பட்ட இளைஞனை சனிக்கிழமை வாழைச்சேனை நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தியபோது அவரை எதிர்வரும் 7ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தர விட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணை களை வாகரை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறிய இராணுவ முகாம் அகற்றல்



அம்பாறை மாவட்ட செய்தியாளர்

நீண்ட காலமாக தற்காலிக கட் டடம் ஒன்றில் இயங்கி வந்த சிறிய இராணுவமுகாம் ஒன்று அகற்றப் பட்டுள்ளது.

சாய்ந்தமருது பிரதேச செயல கத்துக்குட்பட்ட கடற்கரை வீதியில் குறித்த முகாம் அமைந்திருந் ததுடன் அம்முகாமில் இருந்து செயற்பட்ட இராணுவத்தினர் பொதுமக்கள் பாதுகாப்பு நடவடிக்கையிலும் ஈடுபட்டு வந்திருந்தனர்.

தினமும் வீதி ரோந்து மற்றும் தற்காலிக சோதனை நடவடிக் கையில் ஈடுபட்ட இம்முகாம் இராணுவத்தினர் தற்போது தமது செயற்பாடுகள் அனைத்தையும் நிறுத்தி அவ்விடத்தில் இருந்து வெள்ளிக்கிழமை(25) அகற்றப் பட்டுள்ளனர். கடந்த காலங்களில் போதைப்பொருள் கடத்தல் இடம்பெற்றமை காரணமாக இப்பகுதியில் பல தரப்பினரின் வேண்டுகோளுக்கமைய குறித்த இராணுவ முகாம் அமைக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மறைந்த மயோன் முஸ்தபா மக்களின் மனங்களை வென்றவர்

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் அனுதாபம்

திகாமடுல்ல செய்தியாளர்

முன்னாள் உயர்கல்விப் பிரதியமைச்சரும் தொழிலதிபருமான மயோன் முஸ்தபா பலதரப்பட்ட மக்களினதும் மனங்களை வென்றவர் என அவரது மறைவு குறித்து வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது, மயோன் குழுமத்தின் ஸ்தாபகராக இருந்ததோடு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஊடாக அரசியலில் பிரவேசித்த மர்ஹூம் எம்.எம்.முஸ்தபா, 1994ஆம் ஆண்டு அம்பாறை (திகாமடுல்ல)மாவட்டத்தில் பொதுத் தேர்தலில் வேட்பாளர் ஒருவராகப் போட்டியிட்டார். அத்துடன், மறைந்த எமது ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் கட்சியின் தேசிய அமைப்பாளராக அவரை நியமித்து கண்ணியப்படுத்தியிருந்தார். காலப்போக்கில், வெவ்வேறு அரசியல் முகாம்களில் அவரும் நாங்களும் இருக்க நேர்ந்த போதிலும் கூட, சாய்ந்தமருது, கல்முனை ஆகிய பிரதேசங்கள் மட்டுமல்லாது, கிழக்கிலங்கையும்ம் நாடும் பல்வேறு பிரதேசங்களும் அவரது பரந்துபட்ட பணிகளால் அதிகம் பயனடைந்திருக்கின்றன.

முன்னாள் கல்முனை பாராளுமன்ற உறுப்பினராக இருந்து ஒரு கனவானாகத் திகழ்ந்து, அரசியல் மற்றும் சமூக வாழ்வில் அளப்பரிய பங்களிப்புகளைச் செய்த மர்ஹூம் எம்.சி.அஹமதுவின் மருமகனான முஸ்தபா, தனது கனிவான பேச்சினாலும் உதவுகின்ற உள்ளத்தினாலும் மக்கள் மத்தியில் மங்காத புகழோடு வாழ்ந்து, மறைந்து மறக்க முடியாத ஓர் ஆளுமையாக இடம்பிடித்துள்ளார். அநேக சேவைகளைச் செய்துள்ள மயோன் முஸ்தபா குறிப்பாக, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை வழங்குவதிலும் கணினிக் கல்வியை ஊக்குவிப்பதிலும் முன்னிலையில் திகழ்ந்தார். அல்லாஹ் அன்னாருக்கு மேலான ஜன்னதுல் பிர்தௌஸ் என்ற சுவன பாக்கியத்தை வழங்குவானாக. அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# யானைத் தாக்குதலிலிருந்து பாதுகாக்குமாறு கோரிக்கை





மட்டக்களப்பு செய்தியாளர்

மட்டக்களப்பு, மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேசத்தில் காட்டுயானைகளின் தொல்லையால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

உன்னிச்சை கிராமத்தில் புதன்கிழமை இரவு புகுந்த யானைகள் விவசாயி ஒருவரின் தென்னந்தோப்பை அழித்து துவம்சம் செய்துள்ளன. இதில் ஐந்து வருடங்களாகப் பராமரித்து வந்த சுமார் 25 தென்னைமரங்களை அழித்துள்ளதாக பாதிக்கப்பட்ட விவசாயி தெரிவித்துள்ளார்.

அப்பிரதேசத்தில் யானை பாதுகாப்பு வேலி இருந்தும் காட்டுயானைகள் அதனையும் கடந்து கிராமங்களுக்குள் புகுந்து பயிர்களை அழிப்பதுடன் வீடுக ளையும் உடைத்து சேதப்ப டுத்தி வருகின்றன. இது தொடர்பில் பாதிக்கப்பட்ட ஒருசில குடும்பங்கள் இணைந்து யானையின் தாக்கத்தி லிருந்து தமது உயிரையும் உடைமை களையும் பாதுகாப்பதற்கு உதவு மாறு அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

## போடியார் புலம்பல்!



***கிழக்கு மாகாண ஆளுநரிக்கு விகாரைக்கு பிக்குவை போகவிடாமல் தடுக்க எந்த அதிகாரமும் இல்லை என புத்தசாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க சொல்லியிருக்காரு எலுவா? அது சரிடாம்பி அப்ப மயிலத்தமடுவுக்கு போன சர்வமத தலைவர்கள், ஊடகவியலாளர்கள பிடிச்சு வைக்க பிக்குவுக்கு அதிகாரம் குடுத்தது நீங்கதான் போல.....பிக்குகள் எண்டா என்ன கொம்பா அத்துமீறி விகார கட்டலாம், ஆரயும் புடுச்சி வைக்கலாம், வாகனங்களின் சாவியை புடுங்கலாம் இதுக்கெல்லாம் ஒங்கட பு(யு)த்தசாசன அமைச்சில அங்கீகாரம் இருக்காடாம்பி.......!***

# திருகோணமலையில் போதைப்பாவனை அதிகரிப்பு

## சட்டத்தரணி பிரசாந்தினி உதயகுமார்




அப்துல்சலாம் யாசீம், மூதூர் செய்தியாளர்

திருகோணமலை மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனை அதிகரித் துள்ளதாக சட்டத்தரணி பிரசாந்தினி உதயகுமார் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட பெண்கள் வலயமைப்பினால் உப்புவெளி பிரதேசத் தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ''இளம் தலைமு றையினரை மனித உரிமை சார் விடயங்களில் வலுவூட்டல்'' எனும் தொனிப்பொருளில் திருகோணமலை மாவட்ட இளைஞர் - யுவதிகளுக்கான செயலமர்வு வெள்ளிக்கிழமை (25) திருகோணமலையில் உள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றது.

இதன்போது கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மனித உரிமைகள் மற்றும் சர்வதேச உரிமைகள் பற்றி தெரிந்துகொண்டால் மாத்திரமே கிராம மட்டத்தில் இளைஞர்க ளாகிய உங்களால் சமூகத்தில் சேவை யாற்ற முடியும். தற்போது மாவட்டத்தில் குடும்ப வன்முறை கள் அதிகரித்துள்ளன. இதற்கு போதைப்பொருள் பாவனை அதிகரித்த மையே முக்கிய காரணமாகும்.

எனவே, இதனைக் கருத்திற்கொண்டே மாவட்டத்தில் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட இளைஞர் - யுவதிகளை தேர்ந்தெடுத்து மனித உரிமைகள் தொடர்பாகவும் போதைப்பொருள் பாவனையை தடுப்பது குறித்தும் பயிற்சிகளை வழங்கி வருகின்றோம். நீங்கள் அனைவரும் சிறந்த சேவைகளை மக்களுக்கு வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

நான்கு நாட்கள் இடம்பெற்ற குறித்த செயலமர்வில் திருகோணமலை மாவட் டத்தைச் சேர்ந்த சுமார் 45 இளைஞ -, யுவதிகள் பங்குபற்றினர். இவ்வதிவிட செயலமர்வில் மேலும் மனித உரிமைகள் என்றால் என்ன, எமக்கான உரிமைகள் என்ன மற்றும் அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனையை குறைப்பதற்கு இளைஞர்கள் எவ்வாறான பங்களிப்பை வழங்க முடியும் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து தெளிவு படுத்தப்பட்டன.

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி கலந்து கொண்ட இச் செயலமர்வில் மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் ஏ.எல்.இஸ்ஸதீன், மாதினி விக்னேஷ்வரன் (சட்டமா அதிபர் திணைக்களம்) திருகோணமலை மாவட்ட பெண்கள் வலயமைப்பின் இணைப்பாளர் சட்டத்தரணி உதயகுமார் பிரசாந்தினி, அகம் மனிதாபிமான வலயமைப்பின் இணைப்பாளர் கண்டு மணி லவகுகராசா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# ஆப்கானை வீழ்த்தி உலகின் முதற்தர அணியான பாகிஸ்தான்






ஆப்கானிஸ்தான் அணியுடனான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரை 3-0 என்ற அடிப்படையில் கைப்பற்றிய பாகிஸ்தான் தற்போது உலகின் முதல்தர அணியாக சாதனை படைத்துள்ளது.

முதல் இரு போட்டிகளிலும் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றிருந்த நிலையில், மூன்றாவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 268 ஓட்டங்களை எடுத்தது. இதனையடுத்து 269 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணி 48.4 ஓவரில் 209 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 59 ஓட்டங்களினால் தோல்வியடைந்தது. போட்டியின் ஆட்டநாயகனாக மொஹமட் றிஸ்வான் தெரிவாக, தொடர் ஆட்டநாயகனாக இமாம் உல ஹக் தெரிவானார்.

கடந்த ஆண்டில் மேற்கிந்திய தீவுகள் மற்றும் நெதர்லாந்து அணியை 3-0 என்ற கணக்கில் வீழ்த்தியது. இதேபோன்று நடப்பாண்டில் நியூசிலாந்திடம் 2-1 என்ற கணக்கிலும் பிறகு 4-1 என்ற கணக்கிலும் பாகிஸ்தான் வென்றது. இதன் மூலம் 115.8 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் இருந்த பாகிஸ்தான் தற்போது 118.48 புள்ளிகளுடன் முதல் இடத்திற்கு முன்னேறியுள்ளது. ஆஸி. இரண்டாவது இடத்திலும், இந்தியா மூன்றாவது இடத்திலும் உள்ளது. இலங்கை அணி எட்டாமிடத்தில் காணப்படுகிறது.

## முத்தத்தால் ரூபியேல்ஸுக்கு ஏற்பட்ட வினை! பீபா அதிரடி



பீபா மகளிர் உலகக்கிண்ண உதைபந்துத் தொடரின் இறுதிப்போட்டி வெற்றிக் கொண்டாட்டத்தின் போது வீராங்கனை ஜென்னியை கட்டி அணைத்து முத்தமிட்ட ஸ்பெய்ன் உதைபந்தாட்டத் தலைவர் லூயிஸ் ரூபியேல்ஸுக்கு சர்வதேச உதைபந்து சம்மேளனம் (பீபா) 90 நாட்கள் தடை விதித்துள்ளது.இந்தச் சம்பவம் தொடர்பாக பலத்த கண்டனங்கள் எழுந்தன. அதற்கு லூயிஸ் ரூபியேல்ஸ் மன்னிப்புக் கேட்டார். அவர் பதவி விலக வேண்டும் என்ற கருத்துகள் முன்னிலை பெற்றன. லூயிஸ் தனது செயலுக்கு மன்னிப்புக் கோரியதுடன் ஜென்னியின் சம்மதத்துடன் தான் முத்தம் கொடுத்ததாகவும் தெரிவித்தார். ஆனால், வீராங்கனை ஜென்னி ஹெர்மோசா இந்தக் கூற்றை அதிரடியாக மறுத்தார்.இந்தச் சம்பவம் தொடர்ந்து சர்ச்சையை ஏற்படுத்தியதால் பீபா மேற்கொண்ட ஒழுங்கு நடவடிக்கையின் பின்னர் லூயிஸ் ரூபியேல்ஸுக்கு 90 நாட்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, சம்மேளனத் தலைவர் லூயிஸ் ரூபியேல்ஸ் பதவி விலகும் வரை விளையாட மாட்டோம் என மகளிர் அணி தெரிவித்திருந்தது. லூயிஸ் பதவி விலக மறுத்துள்ளார்.இது வீராங்கனைகளுக்கு கோபத்தை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதில், ஸ்பெயின் உதைபந்து சங்கத் தலைவர் பதவியிலிருந்து லூயிஸ் ரூபியேல்ஸ் நீக்கப்படாத வரை நாங்கள் விளையாடப் போவதில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

இன்றுமிருந்து நாட்கள் ASIA CUP PAKISTAN | SRI LANKA

## காலிறுதி ஆட்டத்தில் சாஹிரா, ஜோசப் கல்லூரிகளுக்கு வெற்றி



ஏ. அகீல் சிஹாப்

டயலொக் பாடசாலைகள் ரக்பி நொக்கவுட் போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின. கொழும்பு ஹெவ்லொக் பார்க்கில் அன்றைய தினம் நடைபெற்ற இரண்டாவது காலிறுதி ஆட்டத்தில் டி.எஸ்.சேனநாயக்க கல்லூரியும் சாஹிரா கல்லூரியும் பலப்பரீட்சை நடத்தின. விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் சாஹிரா கல்லூரி 15 - 13 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றியீட்டி அரையிறுதிக்குத் தகுதிபெற்றது.

மேலும் சனிக்கிழமை அதே மைதானத்தில் நடைபெற்ற புனித அந்தோனியார் கல்லூரி மற்றும் புனித ஜோசப் கல்லூரி அணிகளுக்கிடையிலான மூன்றாவது காலிறுதி ஆட்டத்தில் புனித ஜோசப் கல்லூரி 57 - 00 என்ற புள்ளிகள் கணக்கில் அபார வெற்றியீட்டி அரையிறுதிக்குத் தகுதிபெற்றது.

அரையிறுதிப் போட்டிகள் செப்டெம்பர் 2ஆம் மற்றும் 3ஆம் திகதிகளிலும், மாபெரும் இறுதிப் போட்டி செப்டெம்பர் 10ஆம் திகதியன்றும் கொழும்பு ரோயல் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். போட்டிகளுக்கான பிரதான அனுசரணையை டயலொக் ஆசியாட்டா நிறுவனம் வழங்குகிறது. இப்போட்டிகளின் அரையிறுதிப் போட்டிக்கு நடப்புச் சம்பியனான இசிப்பத்தான கல்லூரி நேரடியாகத் தகுதி பெறும் வாய்ப்பைப் பெற்றுள்ளது.

Dialog SCHOOLS RUGBY KNOCKOUTS

## கடற்கரை உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் கல்முனை அல் - அஸ்ஹர் விளையாட்டுக் கழகம் சம்பியன்



கல்முனை

12 வயதுக்குட்பட்ட கடற்கரை உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் கல்முனை அல் - அஸ்ஹர் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது. இந்தக் கடற்கரை உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் 4 அணிகள் கலந்து கொண்டிருந்தன.

உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் ஸுரைப் ஹம்தி புகுத்திய அபார கோலானது, அல் - அஸ்ஹர் விளையாட்டுக் கழகம் வெற்றி பெறுவதற்கு காரணமாக அமைந்திருந்தது. ஸுரைப் ஹம்தி கல்முனை பிரிலியன்ட் விளையாட்டுக் கழகத்தின் சிரேஷ்ட வீரரும் கிழக்கு மாகாணத்தின் முன்னணி உதைபந்தாட்ட வீரருமாகத் திகழ்ந்த ஏ.எல்.எம்.றவூப்பின் புதல்வராவார்.

## கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கல்முனை கிலிங்ஸ்டன் இளைஞர் கழகம் சம்பியன்



மாளிகைக்காடு நிருபர்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது இளைஞர் சேவை அலுவலகர் எம்.எம். ஸமீலுல் இலாஹி மற்றும் கல்முனை இளைஞர் சேவை அதிகாரி ஏ.எல்.எம். அஸீம் ஆகியோரின் ஒழுங்கமைப்புடன் அண்மையில் கிரிக்கெட் சுற்றுப்போட்டி சாய்ந்தமருது பௌசி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் கல்முனை பிரதேச செயலகப் பிரிவின் மூன்று இளைஞர் கழகங்களும் சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவின் மூன்று இளைஞர் கழகங்களும் கலந்துகொண்டன.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் கலந்துகொண்டதுடன், பல அதிதிகளும் கலந்துகொண்டனர். இச்சுற்றுப்போட்டியில் சம்பியனாக கல்முனை பிரதேச செயலகப் பிரிவின் கிலிங்ஸ்டன் இளைஞர் கழகமும், இரண்டாம் இடத்தை கல்முனை இளைஞர் கழகமும், மூன்றாவது இடத்தை சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவின் மாஸ் இளைஞர் கழகமும் நான்காம் இடத்தை பிளையிங் ஹோர்ஸ் இளைஞர் கழகமும் பெற்றுக் கொண்டன.

## ஐந்தாவது வடமாகாண ஆணழகன் போட்டியில் சாதித்த மன்னார் இளைஞர்கள்



மன்னார் நகர் நிருபர்

யாழ். மாவட்ட உடற்கட்டமைப்பு மற்றும் விருத்தி சங்கத்தினால் வடமாகாண ரீதியாக இடம்பெற்ற ஆணழகன்களைத் தெரிவு செய்யும் போட்டியில் மன்னார் மாவட்ட இளைஞர்கள் இரு பிரிவுகளில் முதல் இடத்தைத் தமதாக்கிக் கொண்டுள்ளனர்.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்ற போட்டியில் 65 கிலோ எடை பிரிவில் யஸ்லீன் முதலாம் இடத்தையும், 60 கிலோ பிரிவில் ஜென்சன் முதலாம் இடத்தையும், 75 கிலோ பிரிவில் லியோன் மூன்றாம் இடத்தையும் பெற்று மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

மாகாண ரீதியாக இரண்டு முதல் இடங்களையும், ஒரு மூன்றாவது இடத்தையும் பெற்று மூன்றாவது இடத்தை மன்னார் அணியினர் பெற்றுக்கொண்டனர்.

## விளையாட்டுத் துளிகள்

மகளிருக்கான ஆசிய சம்பியன்ஸ் ஹொக்கி தொடரின் 7ஆவது சீசன் எதிர்வரும் ஒக்டோபர் 27 முதல் செப்டெம்பர் 5 வரை ராஞ்சியில் நடைபெற உள்ளது. இந்தத் தொடரை முதன்முறையாக ஹொக்கி இந்தியா அமைப்புடன் இணைந்து நடத்துகிறது ஜார்க்கண்ட் மாநில அரசு. இந்தத் தொடரில் நடப்பு சம்பியனான ஜப்பான், போட்டியை நடத்தும் இந்தியா, கடந்த முறை 2ஆவது இடம் பிடித்த கொரியா ஆகிய அணிகளுடன் சீனா, மலேசியா, தாய்லாந்து ஆகிய அணிகளும் பங்கேற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

★★★★★

பல கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ள அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல டென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் (41) 2 ஆவது பெண் குழந்தைக்குத் தாயாகியுள்ளார். அந்தக் குழந்தைக்கு ஆதிரா ரிவர் ஓஹானியன் என பெயர் சூட்டியுள்ளனர். கணவர் அலெக்சிஸ் ஓஹானியன், முதல் மகள் ஒலிம்பியாவுடன் குடும்ப புகைப்படத்தை செரீனா சமூக வலைத்தளங்களில் வெளியிட்டுள்ளார்.

★★★★★

பிரபல WWE மல்யுத்த வீரர் ப்ரே வியாட் தனது 36 ஆவது வயதில் கடந்த வெள்ளிக்கிழமை காலமானார். 1987 ஆம் ஆண்டு ஃப்ளோரிடாவில் பிறந்த ப்ரே வியாட்டின் இயற்பெயர் விண்தம் லாரன்ஸ் ரொட்டெண்டா. கடந்த 2021ஆம் ஆண்டு WWEவில் இருந்து விலகிய ப்ரே வியாட் மீண்டும் ஒக்டோபர் மாதம் 2022ஆம் ஆண்டு திரும்பினார். அதன் பிறகு கடந்த பெப்ரவரி மாதம் கொரோனா தொற்று ஏற்பட்டு சிறிது காலம் ஓய்வில் இருந்த ப்ரே வியாட் மீண்டும் 2023ஆம் ஆண்டு ராயல் ரம்பிள் தொடரில் பங்கேற்றார். மூன்று முறை WWE உலக சம்பியன் பட்டத்தையும் இரண்டு முறை யுனிவர்சல் சம்பியன் பட்டத்தையும் கைப்பற்றியிருக்கிறார்.

★★★★★

2024ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் ஆடுவதற்கு இந்தியாவின் தங்க மகன் என வர்ணிக்கப்படும் ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ரா தகுதி பெற்றுள்ளார். தற்சமயம் ஹங்கேரியில் நடைபெற்றுவரும் உலக தடகள சம்பியன்ஷிப் தொடரில் நீரஜ் சோப்ரா முதல் முயற்சியிலே 88.77 மீற்றர் தூரம் அளவில் வீசி இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றார். ஒலிம்பிக் தொடரில் தகுதிபெற 85.50 மீற்றர் தூரம் வீசி இருக்க வேண்டும்.

★★★★★

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்ற 47ஆவது தேசிய விளையாட்டு விழாவில் ஆண்களுக்கான 110 மீற்றர் சட்டவேலி ஓட்டம் தகுதிச் சுற்றில் மேல் மாகாணம் சார்பில் போட்டியிட்ட ஜனிந்து லக்விஜய, 14.18 செக்கன்களில் போட்டியை நிறைவு செய்து தங்கப் பதக்கத்தை சுவீகரித்ததுடன், புதிய போட்டிச் சாதனையையும் நிலைநாட்டினார். 1994ஆம் ஆண்டு மேல் மாகாண வீரர் சமிந்த பொன்சேகா (14.28 செக்.) நிலைநாட்டிய சாதனையை 29 ஆண்டுகளுக்குப் பிறகு ஜனிந்து லக்விஜய முறியடித்துள்ளார்.

★★★★★

மேலும் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் வட மாகாணம் சார்பில் போட்டியிட்ட நேசராசா டக்சிதா தங்கப் பதக்கம் வென்றார். போட்டியில் அவர் 3.50 மீற்றர் உயரத்தைத் தாவியிருந்தார். இது புதிய போட்டிச் சாதனையாகவும் பதிவாகியது. முன்னாள் தேசிய சம்பியனான வட மாகாணத்தைச் சேர்ந்த அனித்தா ஜெகதீஸ்வரனால் 2018இல் நிலைநாட்டிய 3.48 மீற்றர் சாதனையை 5 ஆண்டுகளுக்குப் பிறகு டக்சிதா முறியடித்தார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7